# சமூகவெளி

இதழ் : 4

1992/93

THE JOURNAL OF SOCIAL SCIENCE UNION,
UNIVERSITY OF JAFFNA.

சமூக விஞ்ஞான மன்றம்
பொருளியல் துறை
யாழ். பல்கலைக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக ஒளி வளர்க!
உயிரோட்டமுள்ள கலைஞர்களால்
உயிரோவியமாகப் படம் பிடிப்பவர்கள்

# பேபி போட்டோ

பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி,



உன்னத கலை நயம் மிக்க நகைகளை
உங்கள் எழில் மிகு தேகத்திற்கேற்ற
அதி நவீன மோஸ்தர்களில் தரம் குன்றா
தங்கப் பவுண் நகைகளைச்
செய்து பெற்றிட வாரீர்.
"ஓடர் நகைகளை குறித்த
காலத்தில் செய்து கொடுக்கப்படும்"

# வித்தியா நகையகம்

வி. என்: 177/B சந்தோசம் தெரு
(கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.

சமூக ஒளி இதழ் 4 ஐ வருக வருக வென
வரவேற்கின்றோம்.
சுப முகூர்த்தப் புடவைகளுக்கு
நாட வேண்டிய இடம்

# திருமாட்டி
# (புடைவைக் கடல்)

122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக ஒளி

# SAMUUKA OLI

இதழ்: 4 1992/93 Vol: 4

இணை ஆசிரியர்கள்:
K. கௌதமி
K. அமிர்தலிங்கம்
V. A. லினிபேபி

சமூக விஞ்ஞான மன்றம்
பொருளியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Social Science Union (1992 / 1993)

Department of Economics

University of Jaffna.

## Office Bearers (1992 / 1993)

| | |
|---|---|
| *Patron:* | Prof. N. Balakrishnan |
| *Senior Treasurer:* | Mr. R Nanthakumaran<br>(Senior Lecturer) |
| *President:* | Mr. S. E. Henryson |
| *Vice President:* | Mr. C. Arumainayagam |
| *Secretary:* | Mr. V. S. Jeyakumar |
| *Asst. Secretary:* | Ms. M. Shobana |
| *Junior Treasurer:* | Mr. S. S. Uthayakumar |
| *Joint Editors:* | Mr. K. Amirthalingam<br>Ms. K. Gouthamy<br>Ms. T. A. Vinivevy |
| *Committee Members:* | Mr. A C. Amalraj<br>Mr. M. Jesunesan<br>Mr. T. Kaarunyanathan<br>Ms. S. Mathana<br>Mr. A. E. Richard<br>Mr. C. Sivanayagam<br>Ms. K. Thayalini. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்றைக்கும் எளியனாகி,
எல்லார்க்கும் இனியனாகி,
எங்களின் ஆசானாகி,
ஏந்தலாய் நின்றீர் ஐயா
அர்ப்பணம் செய்து
அஞ்சலிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னை நாள் துணைவேந்தரின் ஆசி

யாழ் பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றத்தினரின் வருடாந்த சஞ்சிகையான ''சமூக ஒளி'' வெளிவருவதையிட்டு மிக மகிழ்ச்சி. இந்தச் சஞ்சிகையில் எமது மக்களால் படிக்கப்பட வேண்டிய பல ஆய்வுக் கட்டுரைகள் யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் எழுதப்பட்டுள்ளன.

யாழ் பல்கலைக்கழகத்தினால் தமிழ் பிரதேச அபிவிருத்தி தொடர்பாக நடத்தப்படும் ஆய்வுகளின் பெறுபேறுகள் தமிழ் மக்களை சென்றடைய வேண்டிய அவசியமுண்டு. இந்தத் தொடர்பால் எமது தமிழினம் சமூகம், பொருளாதாரம், அரசியல் மற்றும் கலை பண்பாட்டுத் துறைகளில் முன்னேற்றம் அடைய வாய்ப்பு உண்டு. அந்த சேவையை ''சமூக ஒளி'' சஞ்சிகை தனது துறையில் பங்களித்து வருகிறது.

யாழ்ப்பாணத்தில் தற்போது நிலவும் கஷ்டமான சூழ்நிலையில் இச் சஞ்சிகையை ஆக்கிய சமூக விஞ்ஞான மன்ற அங்கத்தவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். இம் மன்றத்தின் முயற்சி தொடர்ந்தும் வெற்றியளித்து தமிழ் சமூகத்தின் அபிவிருத்திக்கு திறம்பட பங்காற்ற வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

யாழ்ப்பாணம்
25-04-1994

பேராசிரியர் அ. துரைராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணைவேந்தரின் ஆசி

எங்கள் பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞான மன்றம் ''சமூக ஒளி'' என்ற சஞ்சிகையை வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன. அச்சுத்தாள் தட்டுப்பாடு அச்சிட்டுச் செலவு அதிகரிப்பு போன்ற சிரமங்கள் மத்தியிலும் இவ்விதழை ஆண்டு தோறும் வெளியிடும் இம் மன்றத்தினரின் அயரா முயற்சியைப் பாராட்டுவதோடு இவர்கள் பணி சிறப்பாக அமையவேண்டுமென வாழ்த்துகிறேன்.

இச்சஞ்சிகையில் இடம்பெறும் கட்டுரைகள் தரமானவையாக அமைந்து பல்கலைக்கழகத்தின் கல்வித்தரத்தை பிறருக்கு எடுத்துக் காட்டுபவையாக இருக்குமென நம்புகிறேன்.

யாழ் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.
1994-06-01

**பேராசிரியர் க. குணரத்தினம்**
துணைவேந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைப்பீடாதிபதியின் ஆசி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றம் ''சமூக ஒளி'' (இதழ் – 4) இதனை வெளிக் கொணர்வதையிட்டு மிகுந்த மகிழ்ச்சி கொள்கின்றேன். இம் மன்றத்தில் பொருளியல், அரசறிவியல், சமூகவியல் கற்கும் மாணவர்களை உள்ளடக்கிய ஒரு மன்றமாக இது இருக்கின்றது. இம் மன்றத்தின் செயற்பாடு கடந்த சில வருடங்களாக வளர்ச்சி பெற்று வருவது பாராட்டுக்குரியது. சர்வதேச பொருளாதார நிலமைகள், மாறி வரும் சர்வதேச நிலமைகள் போன்றவற்றைப் பற்றிய கருத்தரங்குகள் விரிவுரைகள் நடாத்தியும் வருகின்றது.

சமூக விஞ்ஞான மன்றம் தொடர்ந்தும் - தொடரும் இக்கட்டான இக் காலகட்டத்தில் சஞ்சிகை ஒன்றை தடைப்படாது வெளிக்கொணர்வது பாராட்டுக்குரியது. இச் சஞ்சிகையை வெளிக்கொணர அயராது உழைத்த நிர்வாகக் குழுவினர்கள் ஆசிரிய ஆலோசகர்கள் பாராட்டுக்குரியவர்கள். இச்சங்கத்தின் பணிகளில் குறிப்பாக வெளியீடுகள் வரும் ஆண்டுகளில் மேலும் வளரும் என எதிர்பார்க்கின்றேன்..

யாழ். பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
கலைப்பீடாதிபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைத் தலைவரின் ஆசி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பல ஆண்டுகளாக சமூக விஞ்ஞான மன்றம் பணியாற்றி வருகின்றது. கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், பேச்சுக்கள் ஆகியவற்றை நடாத்தி வருவதுடன் சமூக ஒளி சஞ்சிகையினையும் வெளியிட்டு வருகின்றது.

சமூக ஒளி, இதழ் 4 இப்பொழுது அச்சில் உள்ளது. மாணவர்களுக்கும், சமூக பொருளாதார அபிவ்ருத்தி பற்றிய விடயங்களை அறிய விரும்புகின்றவர்களுக்கும் பயன்தரக் கூடிய கட்டுரைகளைக் கொண்ட இதழாக இது வெளிவரவுள்ளது.

தற்போதைய நிலையில் பல சிரமங்களின் மத்தியில் சமூக ஒளி மீண்டும் பிரகாசிக்கச் செய்த இதழ் ஆசிரியருக்கும் மற்றும் இதற்கு உதவியாக இருந்தவர்களுக்கும் எனது மனமுவந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

யாழ். பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.

**பேராசிரியர் என். பாலகிருஷ்ணன்,**
தலைவர், பொருளியல் துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குமாரலிங்கம் ரஞ்ஜகுமார்

விரிவுரையாளர், அரசறிவியல்
பொருளியற்றுறை, யாழ் பல்கலைக் கழகம்

அரசறிவியல் துறையுள்
ஓர் ஆலமரமாய்
கிளை பரப்பி
விழுது விட்டு
இருப்பீரென நாம் இருக்க
சரிந்த தேனோ
காலச் சூறாவளியில்
குருவே!
எரிந்தது உடல் மட்டும் தான்
— உம்
நினைவுகள் நீண்டு தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரேஷ்ட பொருளாளரின் வாழ்த்து

சமூக விஞ்ஞான மன்றத்தின் 92/93 கல்வியாண்டிற்கான வெளியீடான சமூக ஒளி 4 வெளிவருவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த மூன்று ஆண்டுகளாக எத்தனையோ கஸ்டங்களுக்கும், துன்பங்களுக்கும் மத்தியிலும் இச் சஞ்சிகை தொடர்ச்சியாக வெளிவருகின்றது என்றால் அது பொருளியல் துறையில் கல்வி கற்கும் மாணவர்களது அயராத உழைப்பின் அறுவடை என்பதுதான் பொருளாகும். எனவே அம்மாணவர்கள் அனைவருக்கும், பிரத்தியோகமாக நிர்வாக குழுவினருக்கும் எனது பாராட்டுக்கள்.

இந்த வெளியீடு இத்துறையில் கல்வி பயிலும் மாணவர்களின் ஆக்கங்களுக்கு ஒரு களமாக இருக்க வேண்டும் என்பதே எனது பேரவா.

மாணவர்கள் போட்டியிட்டு ஆக்கங்களை எழுத வேண்டும். அவற்றிலிருந்து தரமானவற்றை தேர்ந்தெடுத்து பல வகைகளிலும் நிறைவான, பூரணத்துவம் பெற்றதொரு சஞ்சிகையாக வெளிவரவேண்டும் என்பதே எனது வேண்டுகோளாகும்.

மாணவர்கள் வாசிக்கும் ஆற்றலை வளர்த்துக் கொண்டாலே நல்ல, தரமான புதிய கருத்துக்களைக் கொண்ட ஆக்கங்களை உருவாக்கலாம். ஒவ்வொரு ஆண்டும் சமூக ஒளி வெளிவரும். அதற்கொரு ஆக்கத்தினை வழங்க வேண்டும் என்ற நோக்குடன் பொருளியல் துறையில் பொருளியல், அரசறிவியல், சமூகவியல் பாடங்களை கற்கும் மாணவர்கள் கல்வி ஆண்டின் ஆரம்பத்திலிருந்தே தயாராக வேண்டும். அப்போதுதான் சமூக ஒளி தரமான ஆக்கங்களோடு வெளிவரும்.

மாணவர்களது வாசித்தல், கிரகித்தல், வடிவமைத்தல், ஆய்வறிதல், எழுதுதல் என்று பல திறன்களை வளர்க்கும், அதனுடைய நோககிலும் வெற்றியடைந்தவர்களாவோம். மீண்டும் சமூக ஒளியை பிரசவிப்பதில் பங்காற்றிய அனைத்து மாணவர்களுக்கும் எனது பாராட்டுக்கள் உரித்தாகுக.

யாழ் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.

**இராஜகோபால் நந்தகுமாரன்**
சிரேஷ்ட பொருளாளர்,
சமூக விஞ்ஞான மன்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர்
# இதயத்திலிருந்து

யாழ் பல்கலைக்கழகத்தில், பல்வேறு மன்றங்கள் பல்வேறு குறிக்கோள்களை முன்வைத்து இயங்குகின்றன. சமூக விஞ்ஞான மன்றமானது, பொருளியல்துறை கற்கை நெறிகளாகிய பொருளியல், அரசறிவியல், சமூகவியல் சிறப்புக்கலை, பொதுக்கலை மாணவர்களை உள்ளடக்கியது ஆகும். மாணவர்களின் ஆளுமையை வளர்ப்பதிலும், ஆய்வுத்திறனை ஊக்குவிப்பதிலும் சமூக விஞ்ஞான மன்றமானது துடிப்புடன் செயல்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1992 / 1993 கல்வியாண்டில் சமூக விஞ்ஞான மன்றமானது, புத் வேகத்துடன் இயங்கியது. இதனால்தான் யுத்தகால சூழ்நிலைத் தடைகளை உடைத்துக் கொண்டு சமூக ஒளி இதழ் 4 உங்கள் கரங்களில் தவழ்கின் றது. 'சமூக ஒளி' சஞ்சிகை எமது மன்றத்தின் வெளியீடாகும். மாண வர்களின், விரிவுரையாளர்களின் சிந்தனைகளை, அனுபவங்களை வெளிக் கொணர்வதில் சமூக ஒளி வெளியீடு முக்கிய இடத்தை வகிக் கின்றது. பல்கலைக்கழக வாழ்க்கை, மாணவர்களை பொறுப்புணர்ச்சி சமூகப்பற்று, சேவை மனப்பான்மை போன்றவற்றில் புடமிடுகின்றது. மாணவர்கள் உருவாக்கம், சமூக மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் சக்தி வாய்ந்தது. எமது சமூக விஞ்ஞான மன்றம் ஊடாக விரிவுரையாளர்கள் ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து, மாணவர்களின் ஆளுமைகளை வளர்த் தெடுக்கின்றனர்.

சமூக விஞ்ஞான மன்றமானது, தனது குறிக்கோள்களுக்கு, உயிர் வடிவம் கொடுக்க கருத்தரங்குகளையும், சமூக ஒளி சஞ்சிகை வெளியீட் டையும், பொது நிகழ்ச்சிகளையும் முன்னெடுக்கின்றது. எமது காலத்தி லும் இச்செயற்பாடுகள் நிர்வாக குழு உறுப்பினர்களின் உழைப்பினாலும், அங்கத்தவர்களின் ஒத்துழைப்பினாலும் செயற்படுத்தப்பட்டுள்ளன. எதிர் காலத்திலும் இந்தசமூக விஞ்ஞான மன்றம் வேகத்துடனும், விவேகத்துட னும் செயற்பட வேண்டுமென்று வாழ்த்துக்கள் கூறுகின்றேன்.

சமூக ஒளி இதழ் 4 மலரும் இவ்வேளையில் தன்னலம் மறந்து, பொதுநலம் நிறைந்து மக்களிற்காகவும், மண்ணுக்காகவும் வாழ்ந்து மறைந்த எமது முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா அவர்களை அன்புடனும், நன்றியுடனும் நினைவு கூருகின்றோம். சேவை யின் செம்மம், அறிவின் வேந்தன் ஆத்ம சாந்திக்கு இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்.

பல்கலைக்கழகம் அனுபவங்களின் ஊற்றாகும். குறுகிய மனப்பான் மையை நீக்கி, பரந்த மனப்பான்மையை தருவது தான் பல்கழைக்கழக வாழ்க்கை. இனிமையான நினைவுகளையும், ரம்மியமான உணர்வுகளை யும் தாங்கி இதயத்தால் விடை பெறுகின்றேன்.

சந்தாம்பிள்ளை எறிக் கென்றிசன்
தலைவர்
சமூக விஞ்ஞான மன்றம்

பொருளியல் துறை
யாழ் பல்கலைக்கழகம்.
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளரின் ஏட்டிலிருந்து

பொருளியற்றுறையின்கீழ் பொருளியல், அரசியல், சமூகவியல் ஆகிய கற்கை நெறிகளைப் பயில்கின்ற மாணவர்களை ஒருங்கிணைத்துச் செயற்படும் இம்மன்றமானது பல்வேறு செயற்பாடுகளையும் ஆற்றிவருகின்றது. இதன்படி 1993-06-28 இல் இவ்நிர்வாகசபை கையேற்றதிலிருந்து இன்று வரை இம்மன்றத்தின் நோக்கங்களிற்கேற்ப மாணவர்கட்கு மட்டு மல்லாது ஆர்வல சமூகத்திற்கும் பயனளிக்கக்கூடிய வகையில் கருமங்களை மேற் கொண்டுள்ளது. இந்நோக்கங்கட்கு அமைவாக சமூக ஒளி, இதழ் நான்கினை உங்கள் கரங்களில் தவழ விடுகின்றோம்.

## நிர்வாகக் குழு முன்னெடுத்த செயற்பாடுகள்.

* கருத்தரங்குத் தொடர்கள்

| * திகதி | கருத்துரை ஆற்றியோர் | தலைப்பு |
|---|---|---|
| 1. 1993-12-09 | பேராசிரியர். என். பாலகிருஷ்ணன் (பொருளியற்றுறைத் தலைவர்) | திறந்த பொருளாதாரமும் அபிவிருத்தியும். |
| 2. 1994-01-26 | திரு. எஸ். இரேனியஸ் (பிரதேச செயலர் - அம்பகமுவ) | பிரதேச செயலகங்களின் எதிர்பார்ப்பும் செயற்பாடும் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 3. | 1994-02-09 | டாக்டர். செ. நச்சினார்க்கினியன் (மருத்துவபீட விரிவுரையாளர்) | சமுகசுகாதாரக் கோட்பாடுகளும் வடக்குக் கிழக்கில் அதன் நடைமுறைத் தாக்கங்களும். |
| 4. | 1994-05-11 | திரு. ஆர். நந்தகுமாரன் (சிரேஷ்ட விரிவுரையாளர் பொருளியற்றுறை) | ஐரோப்பிய ஒருங்கிணைவும் இலங்கையின் எதிர்கால வர்த்தகமும் |

* இக்கருத்தரங்கு தொடர்கள் தொடர்வதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

* சமூக ஒளி இதழ் நான்கு வெளியீட்டு நிதிக்காக அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு நடாத்தியமை

* விளம்பரங்கள் மூலம் நிதி திரட்டியமை

* பரிசு வழங்குவதற்காக நிதியம் ஒன்றை ஆரம்பித்தமை

* சமுக ஒளி இதழ் நான்கு வெளியீடு

அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு மூலம் திரட்டிய நிதியின் ஒருபகுதியினை நிர்வாகக் குழுவின் தீர்மானத்திற்கிணங்க பொருளியற்றுறையில் சிறப்புக்கல்வியிலும் மாணவர்களில் அதி கூடிய, சராசரிப்புள்ளிகளைப் பெறும் பொருளியல், அரசியல், சமூகவியல் மாணவர்கட்கு பரிசு வழங்குவதற்காக வங்கியில் வைப்பில் இடப்பட்டுள்ளது. இத்தகைய செயற்பாட்டினை ஆற்றியதன் மூலம் மன்றம் தனது நோக்கங்களை விரிவுபடுத்தியுள்ளது. எதிர்காலத்தில் இம்மன்றமானது மேலும் தனது நோக்கங்களை விரிவுபடுத்திச் சிறப்பாக மாணவர்கட்கும் சமுகத்திற்கும் அரும்பணியாற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

சமுக ஒளி இதழ் நான்கு மலர்ந்து மணம் வீசும் இவ்வேளையில் சமுக ஒளி வெளியீட்டிற்குத் தேவையான நிதியினைத் திரட்டுவதற்குப் பல்வேறு வழிகளிலும் உதவி நல்கியோர்க்கும் மன்றத்தின் காப்பாளராகக் கடமையாற்றி அரும்பணியாற்றிய பேராசிரியர், என். பாலகிருஷ்னன் அவர்கட்கும், மன்றத்தின் செயற்பாடுகளில் முன்னின்று வழிநடத்தி ஆலோசனை நல்கிய பெரும் பொருளாளர் ஆர். நந்தகுமாரன் (சிரேஸ்ட விரிவுரையாளர்) அவர்கட்கும் இன்னும் பல் வேறு வழிகளிலும் மன்றச் செயற்பாடுகளில் ஆக்கமும் ஊக்கமும் தந்துதவிய அனைவருக்கும் இதயங்கனிந்த நன்றியினைக் கூறி விடை பெறுகிறேன்.

நன்றி

**வி. எஸ். ஜெயக்குமார்**
செயலாளர் சமுக விஞ்ஞான மன்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் பொருளாளரின் இதயத்திலிருந்து

யாழ் பல்கலைக்கழகத்தில், மாணவர்களின் ஆளுமையை வளர்த்தல், சமூக நோக்கினை ஏற்படுத்தல், ஆய்வுத்திறனை பரிணமிக்கச் செய்தல் போன்ற பல கோணங்களில் மாணவர்களை வளர்த்தெடுக்கின்ற மன்றங்களில் சுட்டிக் காட்டக் கூடிய ஒன்றாக, பொருளியற் துறையின் கீழ் பொருளியல், அரசறிவியல், சமூகவியல் போன்ற பாடங்களைச் சிறப்பாகவும் பொதுவாகவும் பயில்கின்ற மாணவர்களின் ஒருங்கிணைந்த செயற்பாடுகளின் ஊற்றாக சமூக விஞ்ஞான மன்றம் விளங்குகின்றது. இம் மன்றத்தின் பல் திறப்பட்ட செயற்பாடுகளில் ஒன்றாகவே ''சமூக ஒளி'' சஞ்சிகை வெளியீடும், அமைகின்றது.

மேற்படி சமூக ஒளி இதழினை கடந்த காலங்களில் வெளியிடுவதில் ஏற்பட்ட நிதி திரட்டல் தொடர்பான கஸ்டங்கள், காலதாமதம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு மன்ற நிர்வாகத்தின் ஏகோபித்த முடிவின்படி 92/93 கல்வியாண்டில் அதிஸ்ட இலாபச் சீட்டிழுப்பு ஒன்றினை நடாத்தி தேவையான நிதியினைப் பெற்று ''சமூக ஒளி இதழ் 4'' ஐ வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மேற்படி அதிஷ்ட இலாபச் சீட்டிழுப்பினை மேற்கொள்ள எமக்குப் பல வழிகளிலும் ஆலோசனைகளும், ஊக்கமும் தந்து எம்மை முன்னின்று வழி நடத்திய மன்றத்தின் காப்பாளர் பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் அவர்கட்கும், பெரும் பொருளாளர் ஆர். நந்தகுமாரன் (சிரேஷ்ட விரிவுரையாளர்) அவர்கட்கும் மற்றும் பல வழிகளிலும் ஒத்துழைப்புச் செய்த அனைவருக்கும் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இத்தகைய நிதி சேகரிப்பில் திரட்டப்பட்ட நிதியில் ஒரு பகுதியினை எமது மன்ற நிர்வாகத்தினரினதும் அங்கத்தவர்களினதும் ஏகோபித்த தீர்மானத்திற்கிணங்க பொருளியற் துறையில் ''பொருளியல்'' அரசறிவியல்'' ''சமூகவியல்'' போன்ற பாடங்களைச் சிறப்பாகக் கற்கின்ற பகுதி I பகுதி II, பகுதி III, மாணவர்களில், பரீட்சைகளில் அதிகூடிய சராசரிப் புள்ளிகளைப் பெறுகின்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கும் திட்டம் ஒன்றை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்ற அதே வேளை சமூக ஒளி இதழ் 4 ஐ உங்கள் கரங்களில் தவழ விடுவதுடன் ''சமூக ஒளி''யின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு நல் வாழ்த்துக்கள் கூறி விடை பெறுகின்றேன்.

சமூக விஞ்ஞான மன்றம்
யாழ். பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்

**எஸ். எஸ். உதயகுமார்**
இளம் பொருளாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் சிந்தனையில்

தொடர்புகளின் பெருக்கமும் வல்லமையும் ''உலகக் கிராமம்'' (Global Village)என்றவொன்றைத்தோற்றுவித்து விட்டனவென்பர். ஆனால் இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகள் இதற்கு விதிவிலக்கே எனலாம்.

இதனால் இந்த அறிவியல் யுகத்தின் செய்திகள் கூட இங்கு காலந் தாழ்த்தியே சில வேளைகளில் கால வழுவாகவே அறிமுகமாகின்றன. உலகத்தோடு ஒப்பிடுகையில் அறிவியல் தளத்தில் தமிழில் முயற்சிகள் வெகு குறைவே. தமிழர்கள் தம் இருப்பை உறுதி செய்யப் போராடும் இக் காலத்தில் தமிழில் அறிவியல் தாகமும் முயற்சிகளும் தொடங்கப்பட வேண்டும் என்ற ஆர்வம் மகிழ்ச்சியை தருகின்றன.

இந்த அறிவியற்தள முயற்சி ஓட்டத்தோடு ''சமுக ஒளி''யும் இணைந்து கொள்ள விரும்புகின்றது. இதற்கு உதவும் முகமாக இதனது கட்டுரைகள் அமையும், அமைய வேண்டும் என்று விரும்புகின்றோம்.

கௌதமி - கமலநாதன்
இதழாசிரியர்.

சமூக விஞ்ஞான மன்றம்,
யாழ் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒளியின் தெறிப்பில்....

| | |
|---|---|
| இரகுநாதன் – க | சமஷ்டி அரசாங்க முறையில் காணப்படுகின்ற பிரச்சனைகள் |
| அனுஷா – ம | அரசியல் சிந்தனையில் மாக்கியாவல்லி |
| இளங்குமரன் – செ | சமூக விஞ்ஞானத்தில் சுட்டெண்களின் பங்கு: சில உண்மைகள் |
| கிரிதரன் – தி | சர்வதேச வர்த்தகக் கோட்பாடுகளில் முழுநயக் கோட்பாடும் – ஒப்பீட்டுநயக் கோட்பாடும் |
| கணேசலிங்கம் – த | தென்னாசியப் பிராந்திய ஒத்துழைப்பு: சார்க் பற்றிய நோக்கு |
| கிருபானந்தன் – ச | பரம்பரையை மிஞ்சும் சூழல் |
| கலைச்செல்வி – ஜெ | சர்வதேச வர்த்தகமும் வர்த்தகக் கொள்கைகளும் |
| நிரஞ்ஜனா – க | இன்றைய தேசிய வாதங்கள்: மேற்கு ஐரோப்பாவும் தென்னாசியாவும் |
| கேதீஸ்வரன் – அ | கிராம அபிவிருத்தி இலங்கையின் அனுபவங்கள் |
| பிரபானந்தன் – ஆ | இலங்கையின் ஆடைக் கைத்தொழில் வளர்ச்சியும் இத்துறை எதிர்நோக்கும் பிரச்சனையும் |
| மாலினி – கு | மலையக மக்களும் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரசும் |
| மேளின்வேஜினி – ச | இந்தியாவும் இராணுவமும் |
| வரதகௌரி – வ | குலக்குறியம் |
| விமலா – இ | தேசியவாதம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE COMMITTEE OF SOCIAL SCIENCE UNION

## DEPT. OF ECONOMICS, UNIVERSITY OF JAFFNA.

## 1992 / 1993



Seated (L–R): R. Nanthakumaran (Senior Treasurer), S. S. Uthayakumar (Treasurer), Prof. N. Balakrishnan (Patron), S. E. Henryson (President), Prof. A. Thurairjah (Vice-chancellor), V. S. Jeyakumar (Secretary), K. Gouthamy (Editor).

Standing (L-R) S. Mathana, M. Shobana, M. Jesunesan, K. Amirthalingam (Editor), C. Arumainayagam (Vice-president), T. Kaaruniyanathan, A. C. Amalraj, C. Sivanayagam, A. E. Richard, K. Thayalini, T. A. Vinivevy (Editor).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டி அரசாங்க முறையில் காணப்படுகின்ற பிரச்சினைகள்

# Problems of Federal System of Government

இன்றைய உலகிலுள்ள அரசாங்க முறைகளை நாம் வகைப்படுத்துகின்றபோது அதில் முக்கியமான வகைப்படுத்தலாக கூட்டாட்சி, (Federal) ஒற்றையாட்சி (Unitary), அரசாங்க முறைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இதில் கூட்டாட்சி முறையிலான யாப்புக்களைக் கொண்ட அரசாங்க முறையினை நாம் நோக்கும்போது இம்முறையினைப் புகுத்திக் கொள்வதால் பல பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என எண்ணப்பட்ட போதும் இதிலும் பல பிரச்சினைகள், சிக்கல்கள் நடைமுறையில் இருந்து வருவதையும் நோக்க முடிகின்றது. இருந்த போதும் தற்காலத்தில் ஒரு சில நாடுகளில் கூட்டாட்சி முறையானது சிறந்து விளங்கி வருவதையும் நாம் மறுக்க முடியாதுள்ளது.

கூட்டாட்சி அல்லது சமஷ்டி என்னும் சொற்பதத்தின் உருவாக்கத்தினை நோக்கும் போது இது லத்தீன் சொல்லான பெடோஸ் (Feodus) எனும் பதத்திலிருந்தே பிறந்ததாகும். இதன் அர்த்தம் நட்பு நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை என்பதாகவுள்ளது. ஆரம்ப காலத்தில் கிரேக்க நகர அரசுகளில் உருவாகிச் செயல்பட்ட இவ்வாட்சி முறையானது 17 ஆம் நூற்றாண்டில் டச்சு நாடுகளின் கூட்டத்திலும் (Dutch confederacy) பின்பற்றப்பட்டு நிர்வகிக்கப்பட்டது. தொடர்ந்து 18 (1787) ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் அமெரிக்க அரசியல் அமைப்பில் அறிமுகம் செய்யப்பட்டு இன்றுவரை மிகுந்த சிறப்புடன் இயங்கி வருகின்றது. இதன் மேன்மை காரணமாக இன்றைய காலப் பகுதியில் உலகின் தலைசிறந்த கூட்டாட்சிக்கு உதாரணமாக அமெரிக்கா எடுத்துக் கூறப்படுகிறது. மேலும் சுவிற்சர்லாந்து அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் சில ஆசிய நாடுகளிலும் கூட்டாட்சி முறை ஓரளவு சிறப்பாக இயங்கி வருகின்ற அதே வேளை பல ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் கூட்டாட்சி முறையினை பின்பற்றாமையினால் இந்நாடுகள் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இருந்த போதும் கூட்டாட்சி முறையில் பல அலகுகளாகப் பிரிக்கப்பட்டிருந்த ஒரு சில பகுதிகள் மிகவும் குறுகிய காலப் பகுதியில் சமஷ்டியிலிருந்து பிரிந்து தனி இராச்சியங்களாக உருவாகியிருப்பதையும் கவனத்தில் கொள்ளாது இருக்க முடியாது. உதாரணமாக சிங்கப்பூர் மலேசியாவிலிருந்து பிரிந்தமையையும், ஐக்கிய அரபு எமிரேற்றில் (U. A. E) இருந்து சிரியா பிரிந்து சென்றதனையும் கூறலாம். இதிலிருந்து சமஷ்டி ஆட்சி முறையிலும் சிக்கல்கள், பிரச்சனைகள் இருக்கவே செய்கின்றன எனலாம். மாறாக அமெரிக்கா, சுவிற்சர்லாந்து போன்ற நாடுகளில் சுமார் ஒரு நூற்றாண்டுக்கு மேலாகச் சமஷ்டி முறை ஓரளவு சிறப்பாக

கனகையா – இரகுநாதன்,
விரிவுரையாளர் (அரசறிவியல்),
பொருளியல் துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்கி வருகின்றது. எனவே இங்கு ஒற்றையாட்சி, சமஷ்டியாட்சி ஆகிய இரு முறைகளிலும் பிரச்சினைகள் இருப்பதனை நாம் உணர முடிகின்றது. இதில் சமஷ்டி முறையில் நிலவும் பிரச்சினைகளை அறிந்து கொள்ளுதல் அவசியமாகும்.

சமஷ்டி அரசாங்க முறையென்பது அதிகாரங்கள் பரவலாக்கப்பட்ட ஒரு முறையாகும். இங்கு ஒரு மத்திய அரசின் கீழ் அங்குள்ள அரசியல் அமைப்பிற்குட்பட்ட வகையில் அங்குள்ள சிறிய அலகுகள் தமது சுதந்திரத்தையும், தனித்துவத்தையும் இழந்து விடாது சில பொது நலன்களை நோக்கமாகக் கொண்டு இயங்கும் ஒரு வகையான ஆட்சி முறையாகும். இதன்படி மத்திய, மாநில அரசுகள் தத்தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செயற்படுத்துகின்றன. இதற்கு மாறாக ஓர் ஒற்றையாட்சி அரசாங்க முறையில் ஒரு மத்திய அரசாங்கம் மாத்திரம் இருப்பதுடன் அதன் கீழேயே இங்குள்ள சகல அதிகாரங்களும் ஒப்படைக்கப்பட்டிருக்கும். உதாரணமாக பிரான்ஸ், சிங்கப்பூர், இலங்கை போன்ற பல நாடுகளைக் கூறலாம். இங்கு மத்திய அரசானது தனது எண்ணப்படி தனித்தனியான சில நிர்வாகப் பிரிவுகளைப் (Administrative Divisions) உருவாக்கிக் கொள்ள முடிவதுடன் தனது எண்ணப்படி அவற்றை மாற்றவோ, கலைக்கவோ முடியும். எனவே ஒற்றையாட்சிமுறையில் மத்தியஅரசே இறைமையின் இருப்பிடமாக இருப்பதுடன் கூட்டாட்சியில் இறமை பங்கிடப்படுவதையும் உணரமுடிகின்றது. இதனால் கூட்டாட்சியில் விசுவாசமும், கீழ்ப்படிகின்ற தன்மையும் இருப்பதற்குப் பதிலாக இரு வேறு அரசுகளிடம் விசுவாசம் கொள்ளுதல், பிளவு மனப்பான்மை, (Divided loyalty) முடிவில்லாத பூசல்கள் என்பன உருவாக வழிபிறக்கும். அத்துடன் எளிமையற்ற தன்மை (Lack of simplicity) அதிக செலவு கொடுக்கும் தன்மை என்பன ஏற்பட வழி பிறக்கின்றது.

இன்றைய உலகில் கூட்டாட்சியினைப் பின்பற்றும் நாடுகளாக அமெரிக்கா, சுவிற்சர்லாந்து, ஜேர்மனி, கனடா, பிறேசில், மெக்சிக்கோ, ஆஜென்ரீனா, இந்தியா, மலேசியா, அவுஸ்திரேலியா, ஆபிரிக்க நாடுகள் சிலவற்றையும், மத்திய கிழக்கு நாடுகள் யூக்கோசிலாவியா, முதலியவற்றைக் கூறலாம். இருந்தபோதும் இவை அனைத்திலும் தூய கூட்டாட்சி நிலவுவதாக கூறமுடியாது. பெரும்பாலான நாடுகளில் மத்திய, மாநில அரசுகள் இருக்கின்ற கூட்டாட்சிச் சாயல்களே இருப்பதாக கூற முடியும். இங்கு சமத்துவ அடிப்படையில் மத்திய, மாநில அரசுகள் ஒன்றினை ஒன்று ஆக்கிரமிக்காது இருப்பதற்குப் பதிலாக மத்திய அரசின் அதிகாரமே மேலோங்கி காணப்படுகின்றது. இதனால் மாநில அரசுகளின் பலம் படிப்படியாக குறைந்து வருவதும் இதற்கு எதிராக அவை எழுச்சி பெற்று வருவதனையும் காண முடியும். இதற்கு உதாரணமாக 1871 ஆம் ஆண்டில் ஜேர்மனியின் மத்திய அரசு பலம் வாய்ந்த பிரஷ்சிய மாநிலத்திற்கு கட்டுப்பட வேண்டி ஏற்பட்டமையும், மாறாக தென் ஆபிரிக்கா இந்தியா போன்றவற்றில் மத்திய அரசின் வலு மென்மேலும் அதிகரித்து இருப்பதனையும் நோக்க முடிகின்றது. இவ்வாறு சமஷ்டியின் சாயல்களையுடைய இரு வேறுபட்ட கூட்டாட்சி நிர்வாகப் பிரச்சினைகளையும் காணக்கூடியதாகவுள்ளது.

இந்த வகையில் இன்றைய உலகில் தூய கூட்டாட்சியினை நாம் எங்குமே காண முடியாத போதும் அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, சுவிற்சர்லாந்து ஆகிய நான்கு நாடுகளையும் நாம் கூட்டாட்சி முறைக்கு ஓரளவு பொருந்தக்கூடிய உதாரணங்களாகக் கொள்ளலாம். இத்தகைய சமஷ்டி அரசாங்க முறையானது ஒரு சிக்கலான அமைப்பினையுடையத்தாக இருப்பதனால் நடைமுறையில் அது பல பிரச்சினைகளை எதிர் கொள்ள வேண்டியிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இதற்கு அடிப்படையாக அமையும் காரணிகளை அறிதல் அவசியமாகின்றது.

## அதிகாரப் பங்கீடு
## (Distribution of Powers)

தற்காலத்தில் அதிகாரத்தினை மையமாகக் கொண்டே பெரும்பாலான பிரச்சினைகள் எழுவதனால் கூட்டாட்சி முறையில் எவ்வாறு அதிகாரங்கள் பங்கிடப்படுகின்றன என்பதனை அறிந்து கொள்ளுதல் அவசியமாகும். இங்கும் மத்திய, மாநில அரசாங்கங்களுக்கிடையிலான அதிகாரப் பங்கீடு திருப்தியற்றதாக இருக்கின்ற போது பிரச்சினைகள் எழுவது இயல்பாகி விடுகின்றது.

இன்றைய கூட்டாட்சி முறையினை நோக்கும் போது இங்கு அதிகாரப் பங்கீடானது சகல நாடுகளிலும் ஒரே மாதிரியாக இருக்காது வெவ்வேறு முறைகளே பின்பற்றப்படுகின்றது. மத்திய அரசுக்குரிய அதிகாரங்களை ஒதுக்கிவிட்டு ஏனையவற்றை மாநிலங்களிடம் ஒப்படைப்பது ஒரு முறையாகவும் (அமெரிக்கா, சுவிற்சர்லாந்து, அவுஸ்திரேலியா) மாநில அரசுகளுக்குரிய அதிகாரங்களை ஒதுக்கி விட்டு ஏனையவற்றை மத்திய அரசிடம் ஒப்படைப்பது இன்னொரு முறையாகவும் (கனடா) பின்பற்றப் பட்டு வருகின்றது. ஆனாலும் இவ்விடயத்தில் இந்தியா வேறுபட்ட நடைமுறையினைப் பின்பற்றுகின்றது. இவ்வதிகாரம் தொடர்பாக மூன்று பட்டியல்கள் இருக்கின்றன.

1. மாநிலப் பட்டியல்
   (State list)
2. கூட்டாட்சிப் பட்டியல்
   (Federal list)
3. பொதுவான அதிகாரப் பட்டியல்
   (Concurrent Power list)

மேலும் இங்கு இம் மூன்று பட்டியலுக்குள் அடங்காத மீதமுள்ள அதிகாரங்கள் மத்திய அரசிடமே விடப்படுகின்றது. இவ்வாறு அதிகாரங்கள் பகுக்கப்பட்ட போதிலும் இங்கு மத்திய அரசின் அதிகாரங்களே கூடுதலானதாகக் காணப்படுகின்றது. திருப்திகரமான அதிகாரப் பங்கீடு இருப்பதன் மூலமே மாநில அரசுகளின் சுதந்திரமும் தனித்துவமும் பேணப்படுவதுடன் மத்திய அரசின் உறுதித் தன்மையும் பாதுகாக்கப்பட்டு பலமான சமஷ்டி முறை நிலவ முடியும். இதனையே Bryce பிரபுவும் வலியுறுத்தியுள்ளார். அதாவது சமஷ்டியில் மத்திய மாநில அரசுகளை ஒன்றினையொன்று ஆக்கிரமிக்காத வகையில் வைத்திருக்க வேண்டும் எனக் கூறியுள்ளார். இவ்வாறு இல்லாத போது பிரச்சினைகள் உருவாவது இயல்பாகி விடுகின்றது. தற்காலத்தில் மத்திய அரசின் அதிகாரங்கள் வலுவடைந்து வருவது வெளிப்படையாகவுள்ளது. இதனைத் தடுப்பதற்காக அல்லது மாநிலங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக நீதிப்புனராய்வு அதிகாரத்தினைக் கொண்ட சுதந்திரமான நீதித்துறை உருவாக்கப்படுதல் அவசியமாகும். அத்துடன் இங்குள்ள யாப்பு நெகிழ்ச்சித் தன்மையற்றதாகவும், சட்டசபை ஈரங்க சட்டசபையாக இருப்பதும் மேலும் கூட்டாட்சிக்கான வலுவினைக் கொடுப்பதாகவே கொள்ள முடியும்.

## அரசியல் யாப்புத் திருத்தம்
## (CONSTITUTIONAL AMENDMENT)

கூட்டாட்சி முறையினைப் பின்பற்றுகின்ற நாடுகள் மிகவும் இறுக்கமான எழுதப் பட்ட அரசியல் யாப்பினைக் கொண்டிருக்கும் போதே கூட்டாட்சி நிர்வாகம் ஒழுங்காக இயக்க முடியும். இங்கு யாப்பு ரீதியான திருத்தங்களை மேற்கொள்கின்ற போது மாநிலங்களது பெரும்பான்மை விருப்பத்தினைப் பெறுதல் அவசியமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகும். இந்த முறை அமெரிக்காவில் சரியாகப் பேணப்படுகின்றது. இங்கு இத்தகைய திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் போது மாநிலங்களது 2/3 விருப்பத்தினைக் கோருவதன் மூலமே காங்கிரஸ் அரசியல் யாப்பினைத் திருத்த முடியும். இதனால் இங்கு கூட்டாட்சிப் பண்பு வலுவடைந்துள்ளது.

அடுத்த யாப்புரீதியான திருத்தங்களை கொண்டு வருவதிலும் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு முறைகள் பின்பற்றப் படுகின்றன. இந்தியா, கனடா போன்ற நாடுகளில் மாநில அரசாங்கங்களுக்கு இத்தகைய அதிகாரங்கள் இருப்பதில்லை. அமெரிக்க மாநிலங்களுக்கு இவ்வுரிமை இருக்கின்றது. ஆனால் நடைமுறையில் இங்கு இவ்வதிகாரம் பயன்படுத்தப்படுவதில்லை. கனடாவில் கியூபெக், ஒன்ராறியோ, மாநிலங்கள் மத்திய அரசை எதிர்த்துக் கலகம் விளைவித்தன; எனவே அரசியல் யாப்பினைத் திருத்துவது தொடர்பான விடயத்திலும் பிரச்சினைகள் எழவே செய்கின்றன.

## இருமன்ற முறை
## ( BECAMERAL SYSTEM )

ஒற்றையாட்சி அரசுகளைப் போலல்லாது கூட்டாட்சி முறையில் சட்ட மன்ற பிரதிநிதித்துவ முறையானது சிக்கலானதாக காணப்படுவதனால் இதனைத் தீர்ப்பதற்கு ஏற்ற விதத்தில் ஈரங்க சட்டசபை முறை பின்பற்றப்படுகின்றது. இம்முறையினையுடைய அரசுகள் பொதுவாகப் பரந்த அளவிலான பிரதேசத்தையும் கூடுதலான சனத் தொகையினையும், கொண்டிருப்பதனாலும் கீழ் சபைக்கான பிரதிநிதித்துவம் சனத்தொகை அடிப்படையில் வழங்கப்படுவதனாலும் சிறுபான்மையினர் குறைந்த அளவிலான பிரதிநிதித்துவத்தையே பெற முடியும். இதனைச் சரிசெய்யும் நோக்கில் சிறுபான்மையினர் சமபிரதிநிதித்துவத்தைக் கோருகின்றனர். இதற்குரிய ஓர் வழியாக இரண்டாம் மன்ற அமைப்பும் அதன் பிரதிநிதித்துவ முறையும் விளங்குகின்றது. இந்தியாவைத் தவிர அமெரிக்கா, சுவிற்சர்லாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் மேற்சபைக்கு உறுப்பினரைத் தெரிவு செய்யும் போது ஒவ்வொரு மாநிலங்களுக்கும் சம அளவான பிரதிநிதித்துவமே வழங்கப்படுகின்றது. இதுவும் சரியான பலனைக் கொடுப்பதற்கு மத்திய, மாநில அரசுகளுக்கிடையில் நிலவும் சுமுகமான உறவே காலாகின்றது. அமெரிக்கா தவிர, ஏனைய கூட்டாட்சி நாடுகளில் மத்திய அரசின் ஆதிக்கம் மேலோங்கி இருப்பதினால் உரிய இலக்கு அடைய முடியாது போகப் பிரச்சினைகள் உருவாவதும் அவை நீடித்து வருவதும் தற்கால நிகழ்வுகளாகவுள்ளன. அத்துடன் இங்குள்ள மத்திய மாநில அரசுகள் தத்தமக்கென ஒதுக்கப்பட்டிருக்கும், அதிகார வரையறைக்குள் நின்று செயற்படாவிட்டால் உறவுகள் சரியாகப் பேணப்படமாட்டாது. இதனால் தற்போது கூட அவுஸ்திரேலியா, இந்தியா, கனடா போன்ற நாடுகளில் அங்குள்ள மேற்சபைகள், கீழ்ச்சபையின் அதிகாரத்திற்குட்பட்டிருப்பதால் பிணக்குகள் ஏற்படுவதைக் காணலாம், மாறாக சுவிற்சர்லாந்தில் இரு சபைகளும் இணைந்த தேசிய சபையின (National Assembly) சமமான அதிகாரத்தினை இவை கொண்டிருப்பதனாலும். நேரடி ஜனநாயக சாதனங்களது சிறப்பான செயற்பாட்டினாலும் இரண்டாம மன்றத்தின் மூலமாக ஓரளவு பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன எனலாம்.

## பிரிந்து செல்லும் உரிமை
## (Right of Secession)

கூட்டாட்சி நடைபெறும் நாடுகளில் பிரிந்து செல்லும் உரிமை வழங்கப்படுதல் அக்கூட்டாட்சிக்கே பாதகமாக அமையும். இங்கு மாநிலங்கள் தாம் நினைத்தபடி பிரிந்து தனியாகச் செல்வதற்கோ அல்லது மத்திய அரசு தான் நினைத்தவாறு மாநிலங்களை விலக்குவதற்கோ உரிமை இருத்தல் கூடாது. இதன் மூலம் ஓர் அலகு இன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னொன்றைப் பாதிப்புக்குட்படுத்த வாய்ப்பாகி விடும். இத்தகைய உரிமை முன்னைய சோவியத் யூனியனைத் தவிர எந்தவொரு கூட்டாட்சி அரசியல் யாப்பிலும் வழங்கப்படவில்லை. இவ்வுரிமை இல்லாத ஐக்கிய அரபு எமிரேற்று, மலேசியா போன்ற நாடுகளில் பிரிவினை ஏற்பட அங்கிருந்த சமஷ்டி முறை சீர்குலைந்தது. இதனால் பிரிந்து செல்லும் செயற்பாடானது, அதற்கான உரிமை வழங்கப்படாத போதும் நிகழ்ந்துள்ளது. இது சமஷ்டிக் கோட்பாட்டிற்கு பாதகமாகவே இருக்கின்றது. இதன் காரணமாக சமஷ்டிவாதிகள் இதனை வெகுவாக எதிர்க்கின்றனர். எனவே பிரிந்து செல்லும் உரிமையும் கூட்டாட்சிக்குப் பிரச்சினையாகவே உள்ளது.

### மத்திய மயப்படுத்தப்படுகின்ற போக்கு (Centralizing Tendency)

தற்காலத்தில் கூட்டாட்சி முறையின் பொதுவான பண்பினை அவதானிக்கின்ற போது மத்திய அரசின் அதிகாரங்கள் வலுவடைந்துவருவதையும். மாநில அரசுகளது அதிகாரங்கள் படிப்படியாகக் குறைந்து வருவதையும் காண முடிகின்றது. கூடுதலான அதிகாரங்கள் மத்திய அரசிடம் பொதிந்து காணப்படுவதனால் சமஷ்டியில் இணைந்துள்ள அலகுகளது ஆதிக்கம் குறைவடைந்து வந்துள்ளது. 20 ஆம் நூற்றாண்டில் இதனை மேலும் தெளிவாகக் காணக்கூடியதாகவுள்ளது. நவீன தொழில் நுட்ப சமூகத்தில் வளர்ச்சியடைந்து நகர கலாசாரம், முரண்பாடுகள் அதிகரித்தல், பொருளாதார குறைநிலை, தனியுரிமை வேலையின்மை, போன்ற பிரச்சினைகள் மலிந்து காணப்படுகின்றன. ஆனால் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் இவற்றினைத் தீர்க்க முயல்கின்ற போது மாநிலங்களுக்குக் கூடுதலான அதிகாரங்களை விடுவதற்குப் பதிலாக மத்திய அரசின் அதிகாரங்களைக் கூட்ட வேண்டியதாகவுள்ளது. எனவே இங்கு மத்திய மயப்படுதல் முக்கியப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

உள்நாட்டு சிக்கல்கள் அயல்நாட்டு ஆக்கிரமிப்புக்கள் என்பனவற்றிற்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும்போது நவீன இராணுவ உத்திகளை வகுக்க வேண்டியுள்ளது. இதன் மூலமே ஓர் அரசு தனது பரந்த அளவிலான பாதுகாப்பினைப் பேண முடியும். இதனால் தேசிய பாதுகாப்பினை மத்திய அரசு பொறுப்பேற்றுக் கொள்வதன் மூலமே அங்கு கூட்டாட்சி அமைப்பினைச் சரியாகப் பேணிப் பாதுகாக்க முடியும்.

மேலும் ஒரு கூட்டாட்சி நிர்வாகத்தை தகுந்த முறையில் நடாத்துவதற்குப் போதிய நிதி தேவைப்படுகின்றது. இதில் பெரும் பகுதி மத்திய அரசிடமிருந்தே மாநிலங்களுக்கு வழங்கப்படுவதால் மத்திய அரசு நிதியியல் ரீதியான நடவடிக்கைகளின் மூலம் மாநில அரசுகளைக் கட்டுப்படுத்தலாம். மாநில அரசுகள் நிதியினைக் கோரும் போது தமது செயற்திட்டங்களையும், மத்திய அரசின் பரிசீலனைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். இவற்றுக்கான அங்கீகாரத்தை வழங்குவதுடன் மத்திய அரசு சில நிபந்தனைகளையும் விதிக்கின்றது. இதன் மூலம் மாநில விவகாரங்களில் மத்திய அரசு தலையிடவும் கட்டுப்படுத்தவும் வழிபிறக்கின்றது. இவ்வாறு பல வழிகளில் மத்திய மயப்படுத்தல் இருப்பதனை ஓர் அரசியல் ஆய்வாளர் கூறும் போது ''அதிகாரங்கள் மத்திய மயப்படுத்தப்பட்டால் ஜனநாயகத்தின் உயிரோட்டமாகிய கீழ்மட்ட சமூகத்தினரது பங்களிப்புத் தடுக்கப்படுகின்றது. இது ஓர் அரசினைப் பலம் வாய்ந்ததாக ஆக்கி விடுவதுடன் சமூகத்தின் வளர்ச்சிக்கு ஆபத்தானது. வரலாற்றினை நோக்கினால் இது ஜனநாயகமூகத்திற்குப் பாதகமாக இருக்கும்'' எனக் கூறியுள்ளார். இத்தகைய மத்திய மயப்படுத்தல் தற்காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பப் படாததொன்றாக இருக்கின்ற போதும் தவிர்க்க முடியாததாகி விட்டது.

சமஷ்டி வாதம் தொடர்பான தற் காலக்கருத்துக்களை நோக்கும் போது 18 ஆம் நூற்றாண்டில் இருந்ததை விட மாறுபட்டே காணப்படுகின்றது. அக் காலத்தில் 'மாநில உரிமை' (State Rights) 'மாநில சுயாட்சி, (State Autonomy) போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத் திருந்தது. இவை தற்காலத்தில் மாற்றம டைந்து தேசிய ஒருமைப்பாடு, (National Interagration) தேசிய நலன் (National Interest) எனும் கருத்துக்களைக் கொண்டிருப் பதனால் பழைய சமஷ்டிவாதம் தற்போது காலம் கடந்ததொன்றாக மாறிவிட்டது. தற்காலத் தேவை "கூட்டுறவு ரீதியிலான சமஷ்டியேயாகும்" (Co-operative federalism) அதாவது ஜனநாயக சுதந்திரங்க ளுக்கு மதிப்பளிப்பதுடன் மத்திய மாநில அரசுகள் ஒன்றுடனொன்று முரண்படுவ தற்குப் பதிலாகத் தேசத்தின் நிர்மாணத் திற்காக இணைந்து செயற்படுதல் வேண் டும். இது அமெரிக்காவில் சிறப்பாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இத னால் இந்த நாட்டின் கூட்டாட்சி முறை யினை "Father of all federal system" என வர்ணிக்கப்படுகின்றது.

சமஷ்டி முறையின் எதிர்காலத்தை நோக்கும் போது தற்காலத்தில் மத்திய மயப்படுத்தப்பட்ட போக்கு உருவாகி வருவதனால் கீழ்நிலை அரசுகள் தமது சுய ஆதிக்கத்தினை நிலைநாட்ட முடி யாது போயுள்ளது. இதனால் சமஷ்டி அரசுகள் என்னும் பட்டியலில் அடங்கும் பெரும்பாலான நாடுகளில் ஒற்றையாட்சிப் பண்பே வலுவடைந்துள்ளது. இதன் கார ணமாக மத்திய, மாநில உறவுகள் சமுக மாக நிலவ முடியாததுடன் சில மாநிலங் களுக்கிடையில் தகராறு ஏற்பட்டிருப்பத னைக் காணமுடிகின்றது. இந்தியா, கனடா, யூகோசிலாவியா போன்ற நாடுகளில் இத்தகைய விளைவுகள் அண்மைக்காலங் களில் ஏற்பட்டிருக்கின்றன. சமஷ்டியின் எதிர்காலம் தொடர்பாக Friedrich, Lipson போன்றோர் அச்சம் தெரிவித்துள்ளனர். இவர்களது கருத்துக்களை நோக்கும் போது Lipson "அதிகாரப்பரவலாக்கும் பழைய முறையான ஓர் ஒற்றையாட்சியில் உள்ளூராட்சி என்றாலும் சரி, ஓர் சமஷ்டி கூட்டுறவில் மாநிலங்களின் உரிமை என் றாலும் சரி, 20ஆம் நூற்றாண்டின் அரசியல் பொருளியல், தொழில் நுட்பம் என்பன காரணமாக அழிந்தே போகும் என்பதுடன் மேலும் நவீன நாகரீக சமூகத்தில் அனைத்து உந்துவிசைகளும் ஒரு மத்திய திசையினை நோக்கிச் செல்கின்றன" C. J. Friedrich என்பவர் அமெரிக்காவின் சமஷ்டி முறைபற்றிக் கூறும் போதும் "ஒரு மிகவும் உயர்மட்டமான கைத்தொழில் சமஷ்டி மாதிரியையே கைவிட்டுவிடச் செய்தாலும் செய்து விடலாம்" எனக் கூறியுள்ளார். இவர்களது கருத்துக்களை நோக்கும் போதும் தற்காலத்தில் ஏற்பட் டுள்ள மாற்றங்கள் முன்னேற்றங்கள் கார ணமாக சமஷ்டிப் பண்புகள் படிப்படியாக அருகி வருவதையும், எதிர்காலத்தில் சமஷ்டிப் பண்புகள் நிலைக்குமோ? என் னும் வினாவையும் எழுப்பியுள்ளது. இவ் வாறான கருத்துக்கள் இருந்த போதும் சமஷ்டிவாதம் இன்று இறந்து விட்டதாக வும் கூறமுடியாதுள்ளது. நவீன சமூக மானது பன்மைத் தன்மையுடையதாக இருப்பதனால் பன்மையில் ஒருமை காணும் மையமாகக் கூட்டாட்சி அமைப்பு விளங்கி வருகின்றது. (Unity in Diversity can only be established in a Federal Government) ஓர் ஒற்றையாட்சி அரசாங்கத்தில் இதனை அடைந்து கொள்வது மிகமிகக் கடினமா கின்றது. இத்தகைய பன்மை நிலையில் ஒருமை காண்பது ஒற்றுமைத் தன்மை நிலவும் போதே சாத்தியமாகும், என்ப தனை Prof. K. C. Wheare கூறியுள்ளார் (Does not stand for multiplicity alone. It stand for multiplicity in unity) அதாவது சமஷ்டி நடைமுறைகள் சரியாக இருக்கும் போதே அவ்வாட்சி அதற்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பினைப் பெற முடியும். இவ்வாறு இல்லாது போகின்ற போது கூட்டாட்சியின் தத்துவம் அர்த்தமற்றதாகி விடும்,

இன்றைய கால கட்டத்தில் சில நாடுகளில் இருக்கின்ற உள்நாட்டுப் பிரச்சினைகளுக்குரிய தீர்வாக சமஷ்டித் திட்டம் எடுத்துரைக்கப்படுகின்ற போதும் சமஷ்டிச் செயற்பாட்டைக் கொண்ட அரசுகளிலும் பிரச்சினைகள் இருக்கவே செய்கின்றன. எனவே சமஷ்டி ஆட்சி முறை அதற்குரிய இலக்கினை அடைவதற்கு மத்திய அரசு மாத்திரம் பொறுப்பாக இருக்காது மாநில அரசுகளும் அதற்கேற்ப இயைந்து போகின்ற பண்பினை உருவாக்கிக் கொள்ளுதல் மிகவும் அவசியமாகும். அத்துடன் அரசியல், பொருளாதாரப் பிரச்சனைகள், அயல் நாட்டுத் தலையீடுகள் என்பனவும் சமஷ்டி அரசியல் செயற்பாட்டில் பிரச்சினைகளை ஏற்படுத்துவனவாகவே இருக்கின்றன. இவையாவும் சரியாகஅமையும்போதே கூட்டாட்சி சீராக இயங்க முடியும். இதன் சாத்தியமற்ற தன்மை காரணமாகவே இன்றைய உலகில் எந்த நாட்டிலும் தூய சமஷ்டியை நாம் காண முடியாதுள்ளது.

## REFERENCE


1. Agarwal R. C, Political Theory (Principles of Political Science) S. Chand & Company Ltd. New Delhi.
2. Appadurai, The Substance of Politics. Oxford University Press.
3. Rout B. C. Politcal Theories Concepts and Ideologies (1986) S. Chands & Company Ltd. New Delhi.
4. Strong G. F. Modern Political Constitution
5. இராமலிங்கம் டி. எஸ். தற்கால அரசாங்கங்கள்.


### ஆபிரிக்கா பற்றி.........

* உலகின் 40 வறிய நாடுகளில் 32 நாடுகள் ஆபிரிக்காவிலேயே உள்ளது.
* ஆபிரிக்காவின் சராசரி சனத்தொகை அதிகரிப்பு 3.2% ஆகும்.
* உலகில் அதிக சனத்தொகை வளர்ச்சி கொண்ட நாடு கென்யா ஆகும்.
* உலக அகதிகளில் 50% ஆபிரிக்கர்கள் ஆகும்.
* உலகில் இருண்ட கண்டமும் துயரக் கண்டமும் இதுவே ஆகும்.
* மொத்த சனத்தொகையில் 80% மான மக்கள் கிராமங்களில் வாழ்கின்றனர்.
* ஆபிரிக்க நாடுகள் பலவற்றின் முதன்மையான கவலை உயிர்வாழ்வதே அன்றி பொருளாதார வளர்ச்சி அன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் சிந்தனையில் மக்கியாவல்லி (கி. பி. 1469 - 1527)

# Machiavelli in Political Thoughts

அரசியல் வரலாற்றினை எடுத்து நோக்குவோமேயானால் அரசியல் பற்றிய ஆய்வுகள் மிக முற்பட்ட காலத்திலிருந்தே இடம் பெற்று வருகின்றன. பல்வேறு காலப்பகுதிகளில் பல்வேறு அறிஞர்கள் தோற்றம் பெற்று தமது கருத்துக்களையும், கோட்பாடுகளையும் தெரிவித்து இருப்பதை எம்மால் அவதானிக்க முடியும். இவ்வகையிலே நவீனகால அரசியலின் தந்தை என வர்ணிக்கப்படும், மக்கியாவல்லியின் அரசியல் கருத்துக்கள் யாவை என நோக்குவோம்.

மக்கியாவல்லி இத்தாலியிலுள்ள புளோரன்ஸ் இராச்சியத்தில் பிறந்து மிக இளம் பிராயத்திலேயே அரசசேவையில் பணியாற்றினார். சேவையின் போது பல உயர்ந்த பதவிகளை, அதாவது ராஜதந்திர தூதுவர் போன்ற பதவிகளை வகித்து வந்தார். ஆனால் புளோரன்ஸ் 1512 ஆம் ஆண்டு அந்நியராட்சிக்குட்பட்டிருந்தபோது, இவர் பதவி இழந்ததுடன் அந்நியரால் பல துன்புறுத்தல்களையும், அவமானங்களையும் அனுபவித்தார். தம்வாழ்வின் பெரும் பாகத்தை தனது நாட்டுப்புற பண்ணையில் தான் கழித்தார். அப்போதுதான் புகழ் பெற்ற நூலாகிய ''இளவரசன்'' எனும் நூலை எழுதினார்.

இந்த நூலின் கருத்துக்களை நோக்கும்போது இவரும் ஏனைய அரசியல் சிந்தனையாளர்களைப்போலவே சூழ்நிலையின் தாக்கத்திற்கு உட்பட்டவராகவே காணப்படுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. ஏனெனில் இவரின் கருத்துக்களில் முக்கியம் இடம் பெற்றது அரசே ஆகும். இவர் ஒழுக்கம், மதம், கலாசாரம் என்பவற்றினை முக்கியப்படுத்தவில்லை. அதிகாரத்தின் மூலமே அரசாட்சி செய்யலாம் என்பதை வலியுறுத்துகின்றார். எனவே தான் இவர் தனது ஆய்வின்போது கிரேக்க உரோம கால பகுதியிலிருந்து சில மூலங்களை எடுத்துக் கொண்டபோதும் மத்திய கால சிந்தனைகளை அறவே நிராகரிக்கின்றார்.

மக்கியாவல்லியின் கருத்துப்படி கடந்த கால வரலாறானது நிகழ்காலத்தை புரியவும், எதிர்காலத்தை திட்டமிடவும் வழிகாட்டும் ஓர் சாதனமாகும் என்கிறார். இவர் அரசியல் கருத்துக்களை புதிய கண்ணோட்டத்துடனேயே ஆராய்ந்து தெரிவித்துள்ளார். இதனால்தான் இவர் ஒழுக்கம், சமயம் என்பவற்றினை முக்கியப்படுத்தாமல் நடைமுறை பற்றியே அரசியலில் ஆராய்ந்தார்.

நடைமுறை அரசியல் பற்றி ஆராய்வதிலே அதிகார அரசியலுக்கு முக்கிய இடத்தினை கொடுப்பதனால்தான் இவரை நவீன அரசியலின் தந்தை என கூறுவதை சிலர் நிராகரிக்கின்றார்கள். அவர்கள் மக்கியாவல்லியை ''அதிகார அரசியலின் தந்தை''

ம. அனுஷா
3 ஆம் வருடம்
பொருளியல் சிறப்புக்கலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என கூறுவதே சாலச்சிறந்தது என தெரிவிக்கின்றனர்.

மக்கியாவல்லி தனது அதிகார அரசினைப் பற்றி வரைவிலக்கணப்படுத்தும் போது ஒரு தனியார் மூலமோ அன்றி வழிவழியாகப் பல நபர்கள் மூலமோ ஏற்படுகின்ற அரச அதிகாரத்தின் முக்கிய பண்புகளாக தலைமை தாங்கி நடாத்தும் வீரம், ஒற்றுமையை நிலைநாட்டவல்ல மனோசக்தி, நினைத்ததை செய்யும் துணிச்சல், ஈவு இரக்கமற்ற தண்டனை என்பனவே முக்கிய அம்சங்களாக இருக்கவேண்டும் என கூறுகின்றார்.

மேலும் இந்த அரசை ஆள்பவனுக்கு சில சிறந்த பண்புகள் இருக்கவேண்டும் என்கின்றார். அதாவது ஆள்பவன் சிங்கம் போன்ற வீரமுள்ளவனாகவும், நரிபோலத் தந்திரமுள்ளவனாகவும் காணப்படவேண்டும் என வலியுறுத்தும் இவர் பொதுமக்களின் உளவியல் தன்மையினை மிக கீழ்த் தரமானதாகவே வர்ணிக்கின்றார்.

இவ்வாறு எடுத்த காரியத்தை என்ன வழிமுறையினைக் கையாண்டு நிறைவேற்றலாம் என்பதே மக்கியாவல்லியின் கொள்கையாகும். அதை அடைவதற்கு தர்ம வழியாயினும் சரி, அதர்ம வழியாயினும் சரி அதை நிறைவேற்றவேண்டும். ஏனெனில் சமூகத்தில் ஒழுங்கை நிலைநாட்டுவதே குறிக்கோளாக அமையவேண்டுமே தவிர அந்த குறிக்கோளை அடையும் வழியை சிந்திக்கக்கூடாது என்பதே இவரின் வாதமாகும்.

மக்கியாவல்லியின் கருத்துக்கள் அரசியல் வரலாற்றிலே சர்ச்சைக்குரிய கருத்துக்களாகும். இவரின் கருத்துக்களை சிலர் ஏற்கின்றார்கள். பலர் நிராகரிக்கின்றார்கள். ஏற்பதும், நிராகரிப்பதும் அவரவர் மன நிலையினை பொறுத்த விடயமாகும்.

இவரின் கருத்துக்களை ஏற்பவர்கள் அதனை தாங்கள் ஏற்பதற்கு காரணங்களாக பலவற்றை கூறுகின்றார்கள். அதாவது மக்கியாவல்லியே முதன்முதலில் யதார்த்த பூர்வமான அரசியல் பற்றி சிந்தித்த ஒரு அறிஞர் என்றும், மத்திய கால சிந்தனையின் முடிவையும் நவீனகால சிந்தனையின் ஆரம்பத்தையும் இணைப்பவர் என்றும், தெய்வீக உரிமை கோட்பாடு, இயற்கை சட்டங்கள் போன்றவற்றினை முதன்முதலாக துணிவுடன் நிராகரித்து அரசியலுக்கும் மதத்திற்குமிடையில் உறுதியான பிரிகோட்டை வரையமுற்பட்டவர் என்றும் கூறி இவரின் கருத்துக்களை ஏற்கின்றனர்.

இக்காரணங்களை மட்டுமன்றி அதிகார அரசியல் பற்றி கூறிய முதல்வர் என்றும், ராஜதந்திரங்களுக்கு முக்கியம் கொடுத்ததோடு, சர்வதேச ரீதியில் நோக்கிய அறிஞர் என்றும் மக்கியாவல்லியினை மேன்மைபடுத்தி அவரின் கருத்துக்களை ஏற்கின்றார்கள்.

இவ்வாறு மக்கியாவல்லியின் கருத்துக்களை ஏற்பவர்கள் தமது காரணங்களைக் கூறுவதுபோல் அவரின் கருத்துக்களை நிராகரிப்பவர்களும் தமது காரணங்களை கூறுகின்றார்கள்.

அதாவது மக்கியாவல்லியின் கருத்துக்கள் மனித பண்புகளற்ற கருத்துக்கள் என்றும், பாசிஸ கொள்கைக்கு வித்திட்டவர் என்றும், இவரின் கருத்துக்கள் அரசியல் வரலாற்றிலே துர்அதிஸ்டவசமாக ஏற்பட்டவை என்றும், இவர் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டமையால்தான் இவ்வாறான அராஜக கருத்துக்களை தெரிவித்தார் என்றும் இலக்குகளைப் பற்றிச் சிந்தித்தாரேயன்றி வழிமுறைகளைப் பற்றி அக்கறைப்படவில்லை என்றும், இன்னோரன்ன காரணங்களை தெரிவித்து இவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்கள் அரசியலில் இருந்து முற்றுமுழுதாக நீக்கப்படவேண்டும் எனவாதிடுகின்றனர்.

எது எவ்வாறிருப்பினும் மக்கியாவல்லி அரசியல் வரலாற்றிலே புதிய திருப்பத்தினை ஏற்படுத்தியவர் என்பதை யாராலும் மறுக்க முடியாது. அது மட்டுமன்றி அவர் ஒரு தன்னம்பிக்கை மிகுந்தவர் என்பதை அவரின் கருத்துக்களிலிருந்து அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. ஏனெனில் ஏனையவர்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் மனம் தளராமல் தனது சொந்த கருத்துக்களை துணிவுடன் வெளியிட்டமையால் இவர் ஒரு தன்னம்பிக்கை உடைய அரசியல் அறிஞர் என்பதை எமக்கு காட்டிநிற்கின்றது.

உசாத்துணை நூல்கள்:

1. அரசியல் மூலத் தத்துவங்கள், அம்பலவாணர். சிவராசா
2. அரசியல் சிந்தனை – சீனுவாசன் சந்திரபோஸ்.
3. The Prince - Machiavelli.

விளையாட்டு பற்றி.........

* 25 வது ஒலிம்பிக்ஸ் விளையாட்டு போட்டி 1992 ஸ்பெயின் நாட்டில் பார்சிலோனாவில் நடைபெற்றது.

* 25 வது ஒலிம்பிக்ஸ் போட்டியில் சோவியத்யூனியன் இணைந்த நாடுகள் என்ற தலைமையில் அதிக பதக்கங்களை பெற்றது.

* 26 வது ஒலிம்பிக்ஸ் அமெரிக்காவில் ப்ளோரிடாவில் நடைபெற இருக்கின்றது.

* ஆசிய விளையாட்டு போட்டியில் இந்தியா அதிக பதக்கங்களை பெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக விஞ்ஞானத்தில் சுட்டெண்களின் பங்கு: சில உண்மைகள்

# The Role of Index Numbers in Social Science: Some facts

1. GENERAL:

விவரணப் புள்ளி விபரவியலின் பரந்து பட்ட பல்வேறு விஞ்ஞானப் பகுதிகளின் பிரயோகத்திலும் குறிப்பாக சமூக விஞ்ஞானத்தில் மைய நாட்ட அளவை எனும் பகுப்பாய்வுப் படியொன்று பிரயோகிக்கப்படுகையில் இடையெனும் அளவை நிலையான தரவுத் தொகுதிக்கு (Static Statistical Data) மூன்று வழிகளில் கணிக்கப்பட்டு வியாக்கியானப்படுத்தப்படுவது வழமையாகும். கூட்டல், பெருக்கல், இசை இடைகள் எனும் மூவகை அளவைகளில் யாதாயினும் ஒன்றே மிகப் பொருத்தமானதாக அமையும். இங்கு இந்த சுட்டெண் எனும் அளவையானது மாறக்கூடிய தரவுத் தொகுதிக்கு (Dynamic Statistical data) வரையறுக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் நேரத்தோடு மாறுகின்ற பொருளியல் காரணிகளுடன் (Economic Factors) தொடர்புபடும் மாறிகளின் தொகுதியொன்றில் ஏற்படுகின்ற மாறல்களின் இடைகள் (Mean of Changes) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுவது முக்கியமான அம்சமாகும். உதாரணமாக மொத்த விற்பனை விலைச் சுட்டி (Wholesale Price Index) ஆனது ஒரு அடிப்படை ஆண்டு (Base Year) தொடர்பாக பல்வேறு பண்டங்களின் விலைகளின் சராசரி மாறல் (Average Change), மொத்த வர்த்தகம் நடைபெறும் இடத்தினுடைய முக்கிய சேவைகளில் சராசரி மாறல் போன்றனவற்றை காட்டுவதாக அமைவதனை நோக்கலாம்.

இவ்வாறு சுட்டெண்கள் அமைக்கப்படுகின்ற பல சந்தர்ப்பங்களை நாம் நோக்கலாம். பல்வேறு அலகுகள் ரூபா, கிலோகிராம், மீற்றர், லீற்றர், போன்றவற்றினால் உணர்த்தப்படுகின்ற தொடர்புடைய பல மாறிகளின் கட்டத்திலுள்ள பலவிதமான மாறல்களையும் (Diverse Changes) காட்டுவதற்கு இவை பிரயோகிக்கப்படலாம். சுட்டெண்களானவை வீதம் (rate) விகிதம் (ratio), வீதாசாரம் (percentage) போன்ற தொடர்புப் பெறுமானங்களினால் (relatives) ஏனைய சராசரிகளுடன் சேர்த்து அமைக்கப்படுகின்றன. விலை விகிதம் (price relatives), கணிய விகிதம் (quantity) relatives) போன்றன மேற்படி தொடர்புப் பெறுமானங்களின் சராசரியாக பொருத்தமான – தோற்றப்பாட்டில் (phenomenon) அமைக்கப்படுவது முக்கியமான குறிப்பாகும். இவை முறையே விலையிலும், கணியத்திலும் ஏற்படுகின்ற மாறல்களை விளக்குவதாக அமையும். பொதுவாக இவை பொருளாதார மாற்றத்தின் அளவு கோலாக (Barometers of economic change) அமைவதாகச் சொல்லப்படுவது முக்கியமாக கவனிக்க வேண்டியதாகும்.

*C. Elankumaran*, *B. Sc. (Hons), M.Sc.*
*Lecturer – Mathematics & Statistics,*
*Dept, of Economics,*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டெண்களானவை சமூக விஞ்ஞானத்தில் முக்கியமாக பொருளியல், வர்த்தகவியல் பகுதியில் பல்வேறு பொருட்களின் விலைகள், கைத்தொழில் உற்பத்தி, விற்பனைகள், ஏற்றுமதி - இறக்குமதி, வாழ்க்கைச் செலவு போன்ற இடங்களில் புள்ளியியல் அணுகுமுறை ஆய்வில் (Research by Statistical approach) தாராளமாக பயன்படுத்தப்படுவதனை அவதானிக்கலாம். அவ்வளவீட்டு ஆய்வுகளானவை முகாமைத்துவம், அரச நிறுவனம், கைத்தொழிலகம் போன்றனவற்றில் நிலமை மீளாய்வு (position review), தேவைப்படின் செய்கைத் திட்டமிடல் (planning actions) போன்றனவற்றிற்கும் நிறைவேற்றுத் தீர்மானங்களை (executive decision) தயாரிப்பதற்கும் பெரிய அளவில் உதவுகின்றன. இவை பொருளாதாரத்தின் நாடித்துடிப்பினை (pulse of an economy) அளவிடுபவையாகவும் பணவீக்கம், பணச்சுருக்கம் போன்றனவற்றின் போக்குகளை (Infl-ationary or Deflationary tendencies) சுட்டிக் காட்டுபவையாகவும் அமைவதனையும் நோக்குதல் முக்கியமாகும். வாயு மண்டலத்தின் அமுக்கத்தினை பௌதீகவியலில் பாரமானி அளவிடுவதைப்போல ஒரு பிரதேசத்தின் பொருளாதாரத்தின் நடத்தையினை அளவிடும் அளவுகோலாக சுட்டெண் அமைவது ஒரு பொருத்தமான வியாக்கியானமாகும்.

## 2. SOME DEFINITIONS

பல்வேறு வரைவிலக்கணங்கள் சுட்டெண்களின் அமைவுக்கான பல்வேறு சந்தர்ப்பங்களில் வரையறுக்கப் படுகின்றன, கருத்தின் அடிப்படையில் இவை மூன்று வகையாக வகுக்கப்படலாம்.

அ) மாறலுக்கான அளவை
(Measure of change)

ஆ) மாறலை அளக்கும் சாதனம்
(Device to measure change)

இ) மாறல் செய்கையினை தரும் தொடர்
(Series representing the process of change)

மாறலுக்கான அளவை என்ற கருத்தில் மஸ்லோ (Maslow) இனது வரைவிலக்கணமானது யாதெனில் "ஒரு குறித்த காலப் பகுதியில் ஒரு பிரதேசத்திலுள்ள சிக்கலான பொருளாதார தோற்றப் பாட்டினை (Complex Economic phenomena) சிறப்பாக விளக்கும் ஒரு எண் பெறுமானம்" என்பதாகும். இதே கருத்தில் ஜோன் றபின் (John. I. Raffin) வரைவிலக்கணப்படுத்துகையில் சுட்டெண்ணானது "ஒரு அடிப்படை ஆண்டு தொடர்பாக ஒரு காலப் பகுதியில் அளவிடைகளின் மாறல்களை விளக்கும் கணியம்" என்கிறார். இப் பொருளியலாளர்களின் வரைவிலக்கணங்கள் ஒரு பொருளாதாரப் புள்ளியியலாளன் ஸ்பைக்கல் (Speigel) இனால் பின்வருமாறு மெருகூட்டப்படுகிறது. "காலம், பிரதேசம் போன்ற சிறப்பியல்புகள் தொடர்பாக மாறிகளில் அல்லது தொடர்புடைய கூட்டமான மாறிகளிலுள்ள மாறல்களை காட்டும் அல்லது வெளிக்கொணரும புள்ளியியல் அளவை (Statistical measure)" என்பதாகும். ரேற்றில (A. M. Turtle) என்பவரின சிறிது வித்தியாசமான வரைவிலக்கணம் யாதெனில் சுட்டெண்ணானது "இரு வெவ்வேறான காலம், இடம், சந்தர்ப்பங்களில் பல மாறிகளின் கூட்டு மாறுகையை (Combined change) அளவிடும் தனி விகிதம்" என்பதாகும். இவை யாவற்றையும் ஒட்டு மொத்தமாக பொதுமைப் படுத்தினால் ஒருசிறப்பானவரைவிலக்கணம் எமக்கு கிடைக்கும்.

மாறலை அளக்கும் சாதனம் என்ற கருத்தில் குறொக்ஸ்ரனும், கௌடனும் (Croxton and Cowden) வரைவிலக்கணப் படுத்துவது பின்வருமாறு அமைகின்றது. "தொடர்புபட்ட பல மாறிகளின் தொகுதியில் பெறுமானங்களின் வித்தியாசங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை அல்லது மாறல்களை அளவிடுகின்ற சாதனம் சுட்டெண்'' என்பதாகும். மாறல் செய்கையினை தரும் தொடர் என்றகருத்தில் அமைகின்ற வரைவிலக்கணங்கள் பின் வருமாறு. ''காலத்துக்கு காலம், இடத்திற்கு இடம் ஒரு தோற்றப்பாட்டினது பெறுமான மாறல்களை தொடர்ச்சியாக தருகின்ற எண்களின் தொடர் சுட்டெண்ணாகும்'' என செக்றிஸ்ற் ( Horace Secrist) வரைவிலக்கணப் படுத்துகிறார். போளி ( B. L. Bowley ) எனும் பொருளாதாரப் புள்ளியியலாளனோ ''தொடர்புடைய கணியப் பெறுமானமொன்றினது போக்கினையும் புள்ளிவிபரப் பெறுமானத் தளம் பலையும் வெளிக்கொணரும் தொடர் எண்கள்'' சுட்டெண் என வரையறுக்கின்றார். இறுதியாக கப்லான் ( Lowrence J. Kaplan) எனும் பிரயோகப் புள்ளியியலாளனின்வரைவிலக்கணத்தையும் நோக்கலாம். ''அடிப்படை ஆண்டு ஒன்றுடனான ஒப்பீட்டுக்காக தொடர் வடிவில் ஒழுங்குபடுத்தப்படும் ஒரு மாறியின் தளம்பல்களை தரும் புள்ளியியல் அளவை சுட்டெண்'' என்பது இவரின் வரைவிலக்கணமாகும். இவ் வரைவிலக்கணங்கள் யாவற்றையும் ஒப்பிட்டு ஆய்வு செய்வது பொருளாதாரப் புள்ளியியலாளர்களின் தற்போதைய ஆய்வுத் திட்டங்களில் தற்போதும் இடம்பெறுகின்றது.

## 3. DIFFERENT KINDS OF INDEX NUMBERS

சுட்டெண்கள் பல்வேறு வகைகளில் அமைவது அவதானிக்கப்பட்டுள்ளது. ஆய்வாளர்களின் பல்வேறுபட்ட நோக்கங்களை நிவர்த்தி செய்வதே இதன் நோக்கமாகும். அடிப்படையில் பின்வரும் வகைகளில் அவற்றை வேறுபடுத்தலாம்.

அ) விலைச்சுட்டி ( Price Index )

ஆ) கணியச் சுட்டி ( Quantity Index )

இ) பெறுமானச்சுட்டி ( Value Index )

ஈ) பரவல் சுட்டி ( Diffusion Index )

ஒரு தொகுதி பண்டங்களின் விலைகளை ஒரு குறித்த நேரத்தில், குறிப்பிட்ட இடத்தில் அடிப்படை ஆண்டொன்றினது விலைகளுடன் அல்லது இடத்துடன் ஒப்பிடுவதற்கு விலைச்சுட்டிகள் பயன்படுகின்றன. பல்வேறு பொருளியல், வர்த்தகப் புலங்களில் பொதுவாகப் பிரயோகிக்கப்படும் பணப் பெறுமதியை அளவிடும் முக்கிய அளவையாக இவ்விலைச்சுட்டி அமைவது முக்கியமான உண்மையாகும். பின்வரும் வகுப்புக்களாக இவை பிரிக்கப்படுகின்றன.

1) மொத்த விற்பனை விலைச்சுட்டி
( Wholesale price Index )

2) சில்லறை விலைச்சுட்டி
( Retail price Index )

வாழ்க்கைச் செலவுச் சுட்டி ( Cost of Living Index ) என பொதுவாக அழைக்கப்படுகின்ற நுகர்வோன் விலைச்சுட்டி ( Consumer Price Index ) சில்லறை விலைச்சுட்டிகளில் மிக முக்கியமானதும் சமூக விஞ்ஞானத்திலுள்ள பல்வேறு துறைகளிலும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுவதுமாகும். ஒரு சமூகத்தினது அல்லது பிரிவினது பொருளாதாரத்தை அளவிடுவதாக அதாவது கொள்வனவு வலு ( Purchasing Power ) வினை காட்டுவதாக இச்சுட்டி அமைவது இன்னுமொரு முக்கிய குறிப்பாகும். விவசாயிகள், கைத்தொழிலாளர்கள், கூலித் தொழிலாளர் போன்றோரின் சமூக பொருளாதார நிலை ( Socio-Economic Status ) யினை வெளிக்கொணர இச்சுட்டி பெரிதும் உதவும்.

விவசாய உற்பத்தி, கைத்தொழில் உற்பத்தி, ஏற்றுமதி - இறக்குமதி போன்றனவற்றில், உற்பத்திப் பொருளளவு, கொள்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னவுப் பொருளளவு, நுகர்வுப் பொருளளவு போன்றனவற்றின் மாறல்களை விளக்குவதற்கு கணியச் சுட்டிகள் உதவுகின்றன. ஒரு பொருளாதாரத்தின் இயல்பு வெளியீட்டின் ( Physical output of an economy ) மட்டத்தினை ஆய்வு செய்வதற்கான முக்கிய அளவை இதுவாகும். பெறுமானச் சுட்டியானது விலையையும் கணியத்தையும் இணைத்து மொத்த பெறுமானம் கணிக்கப்பட்டு ஒரு குறித்த ஆண்டினை அடிப்படை ஆண்டுடன் ஒப்பிடுவதாக அமையும். விற்பனை, இருப்பு, வெளிநாட்டு வர்த்தகம் போன்றனவற்றில் பெறுமானச் சுட்டி முக்கியமாக தொடர்புபடுகின்றது. பரவல் சுட்டியானது ஒரு பொருளாதார சக்கரத்தின் ( Economic Cycle ) திரும்பு புள்ளி அல்லது மாறு நிலைப்புள்ளி யொன்றினை காட்டும் பொருளாதாரத் தொடரினை ( Economic Series ) தொகுத்து தருவதாக அமைவது குறிப்பிடத்தக்கது. இவற்றை விட இலாபம், விளைச்சல் போன்ற பல் வேறு பொருளியல் காரணிகளின் நடத்தையினை விளக்குவதற்கு வேறு சிலவகை சுட்டிகளும் வரையறுக்கப்படுவது அறியப்பட்டுள்ளது.

எனவே '' Index numbers, almost alone in the domain of Social Sciences, may truly be called an exact science, if it be permissible to designate as science: the theoretical foundations of a uneful art '' எனும் இர்விங் பிசரின் ( Irving Fisher ) கூற்றுடன் முடிவுரைக்கு வருவது பொருத்தமாக இருக்கும். □

## தெரிந்துகொள்ளுங்கள்

* தெற்காசிய சம்மேளன போட்டி 1993 டிசெ. 20 இல் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் ஆரம்பமானது
* 1990 ஒக் 03 இல் கிழக்கு ஜெர்மனியும் மேற்கு ஜேர்மனியும் இணைந்தது
* செஞ்சிலுவைச் சங்கம் 1863 இல் J. H ஒனான்ட் என்பவரால் தாபிக்கப்பட்டது தலமையகம் ஜெனீவாவில் உள்ளது.
* சாரணர் இயக்கம் 1907 இல் லெப்பினன்ட் ஜெனரல் ரொபர்ட் பேடன்பவுல் என்பவரால் அமைக்கப்பட்டது.
* திறந்த பொருளாதாரக் கொள்கையினால் முதல் முதல் வெற்றி பெற்ற நாடு சிலி என்ற இலத்தீன் அமெரிக்க தேசம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச வர்த்தகக் கோட்பாடுகளில் முழுநயக்கோட்பாடும் - ஒப்பீட்டு நயக்கோட்பாடும்

# Absoulute and Comparative Advantage in International Trade Theory

உலகிலுள்ள எந்தவொரு நாடும் இன்று தனது நாட்டு மக்களுக்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் தானே உற்பத்தி செய்வதில்லை. இதனால் ஒவ்வொரு நாடும் சில பொருட்களை உற்பத்தி செய்து அவற்றில் ஒரு பகுதியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து தனக்குத் தேவையான சில பொருட்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலையுள்ளது. இதுவே சர்வதேச வர்த்தகத்திற்கு வழி கோலியது.

முழுநயம்:

குறிப்பாக ஒரு நாடு குறிப்பிட்டளவு உற்பத்திக் காரணிகளைக் கொண்டு குறிப்பிட்ட ஒரு பொருளில் ஏனைய நாடுகள் உற்பத்தி செய்கின்ற அளவிலும் பார்க்க கூடுதலாக உற்பத்தி செய்யுமாயின் அந் நாடு அப்பொருளில் முழுநயம் அனுபவிக்கின்றது என்று கூறமுடியும். இதனை இன்னொரு வகையில் கூறினால் குறிப்பிட்ட ஒரு பொருளில் ஓர் அலகினை உற்பத்தி செய்வதற்கு ஒரு நாடு ஏனைய நாடுகள் பயன்படுத்துகின்ற உற்பத்திகாரணிகளின் அளவுகளிலும் பார்க்க குறைந்த அளவையே பயன்படுத்தின் அது அப்பொருளில் முழுநயம் அனுபவிக்கும் என்று கூற முடியும். இம்முழுநயக் கோபாட்டினை அடம் சிமித் என்பவர் 1776 ஆம் ஆண்டு முன் வைத்தார். அவர் எடுகோள்களாக

1. இரு நாடுகள் உள்ளன.
2. இரண்டு பொருட்களே உற்பத்தி செய் யப்படுகின்றன.

என்று கூறினார்.

முழுநயத்தின் அடிப்படையில் நாடுகள் உற்பத்தியினை மேற் கொண்டு சிறப்புத் தேர்ச்சியினைப்பெற்று வர்த்தகத்தில் ஈடுபடின் உலக உற்பத்தி அதிகரிப்பதுடன் நாடுகளும் நன்மை பெறலாம். இம்முழுநயத்தினை வினக்குவதற்கு இலங்கை, இந்தியா என்ற நாடுகளையும் தேயிலை, றபர், என்ற பொருட்களையும் உற்பத்தி செய்கின்றன எனக் கொண்டு பின்வரும் அட்டவணை மூலம் விளங்கிக் கொள்வோம்.

ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு உற்பத்தியிலும் தலா 1 அலகு ஊழியத்தினை பயன்படுத்துகின்றது என்போம்.

| நாடு | தேயிலை (kg) | றபர் (kg) |
|---|---|---|
| இலங்கை | 20 | 10 |
| இந்தியா | 10 | 20 |
| உலக உற்பத்தி | 30 | 30 |

வர்த்தகத்தின் பின்பு உற்பத்தி

| நாடு | தேயிலை (kg) | றபர் (kg) |
|---|---|---|
| இலங்கை | 40 | 0 |
| இந்தியா | 0 | 40 |
| உலக உற்பத்தி | 40 | 40 |

*T. Kritharan,*
*3rd Year,*
*Economics Special.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தகத்தின் முன்பு இரு நாடுகளும் தனித்தனியே இரு பொருட்களையும் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டிருக்கும் இலங்கை ஒரு அலகு உழைப்பினை தேயிலை உற்பத்தியில் ஈடுபடுத்தியிருப்பின் 20 அலகுகளையும் றபர் உற்பத்தியில் ஈடுபடுத்தியிருப்பின் 10 அலகினையும் உற்பத்தி செய்ய முடியும் எனினும் இந்தியா ஒரு அலகு உழைப்பினை தேயிலையில் பயன்படுத்தின் 10 அலகினையும், றபரின் உற்பத்தியில் பயன்படுத்தியிருப்பின் 20 அலகுகளையும் உற்பத்தி செய்ய முடியும் எனவும் எடுத்துக் கொள்வோம். இந்நிலையில் இலங்கை தேயிலையிலும் இந்தியா றபரிலும் முழு நயத்தை அனுபவிக்கின்றன.

நாடுகள் வர்த்தகத்தின் மூலம் பெறும் நன்மையினை அறிவதற்கு முன்னர் வர்த்தகம் நடை பெறாத நிலையில் வர்த்தக மாற்று விதம் பற்றி நோக்குவோம். உள்நாட்டு வர்த்தகமாற்று விகிதம் அப்பொருட்களை உற்பத்தி செய்யப்பயன்படுத்திய உழைப்பளவினால் நிர்ணயிக்கப்படுகின்றது என அடம் சிமித் கருதினார். இலங்கையில் இரு பொருட்களுக்கிடையிலான உள்நாட்டு வர்த்தக மாற்று விகிதம் 20T=10R எனக் காட்டலாம். ஏனெனில் தேயிலையில் பயன்படுத்தப்பட்டளவு உழைப்பே றபரிலும் பயன்படுத்தப்படுவ தனாலாகும். இதே போன்று இந்தியாவில் இரு பொருட்களுக்குமான உள்நாட்டு வர்த்தக மாற்று விகிதம் 10T=20R ஆகும். இந்நிலையில் இரு நாடுகளும் முழு நயத்தினடிப்படையில் உற்பத்தியை மேற்கொண்டு சிறப்புத்தேர்ச்சி பெற்று வர்த்தகத்தில் ஈடுபகின்றன என்போம்.

தற்போது இரு நாடுகளும் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளன என்போம். இலங்கை தேயிலையிலும் இந்தியா றபரிலும் முழு நயம் பெறுகின்றன. இலங்கை தேயிலையை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்து அங்கிருந்து றபரை இறக்குமதி செய்ய வேண்டும். இதே போன்று இந்தியா றபரை இலங்கைக்கு ஏற்றுமதி செய்து தேயிலையை அங்கிருந்து பெறல் வேண்டும். இரு பொருளுக்குமிடையிலான சர்வதேச வர்த்தக மாற்று விகிதம் ஒரு அலகு தேயிலை – 1 அலகு றபராகும். இலங்கை தேயிலையில் 1 அலகை இந்தியாவிற்கு கொடுத்து றபரில் 1 அலகை பெறுவதன் மூலம் ஒவ்வொரு முறையிலும் 1 அலகு தேயிலையினை மீதப்படுத்த முடியும். இதே போன்று இந்தியாவும் நன்மை பெற முடியும். குறிப்பாக எல்லா நாடுகளும் முழுநயத்தினை அனுபவிப்பதில்லை.

ஒப்பீட்டு நயக்கோட்பாடு:-

1817 இல் டேவிட் றிக்காடோவினால் அரசியல் பொருளாதார தத்துவங்கள் என்ற நூலில் இக்கோட்பாட்டை விளக்கி உள்ளார். அவர் கூறிய எடுகோள்களாவன.

1. இரு நாடுகள் இரு பொருட்கள்
2. நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் சுதந்திரமாக இடம் பெறல்.
3. உழைப்பு ஒன்றே உற்பத்தி காரணி ஆகும்.
4. உற்பத்தி செலவு மாறா உற்பத்தி செலவு.
5. போக்குவரத்துச் செலவு இல்லை.
6. தொழில்நுட்ப முன்னேற்றம் இடம் பெறவில்லை.
7. பண்டமாற்று முறையில் வர்த்தகம் நடைபெறல்.
8. ஊழியப் பெறுமதிக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது.
9. சர்வதேச சந்தை நிறை போட்டியில் இயங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் உதாரணம் மூலம் ஒப்பீட்டு நயத்தை விளக்குவோம். ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு உற்பத்தியிலும் தலா 1 அலகு ஊழியத்தினை பயன்படுத்துகின்றது என் போம்.

| நாடு | தேயிலை (kg) | றபர் (kg) |
|---|---|---|
| இலங்கை | 30 | 15 |
| இந்தியா | 5 | 10 |

அட்டவணையின் படி இலங்கை இரு பொருட்களிலும் முழு நயத்தினை அனுப விக்கின்றது. ஆனால் ஒப்பீட்டு நய அடிப் படையில் பார்த்தால் இலங்கைத் தேயிலை யில் தான் கூடிய ஒப்பீட்டு நயத்தைப் பெறுகின்றது. அதே போன்று றபரினை தேயிலையுடன் ஒப்பிடும் போது இலங்கைக்கு றபர் ஒப்பீட்டு நன்மை குறைவாகும். இலங்கை இந்தியாவிலும் பார்க்க தேயிலை யில் 6 மடங்கு திறமையுடையதாகும். றப ரில் $\frac{1}{2}$ மடங்கு திறமையுடையதாகவும் காணப்படுகிறது. மாறாக இந்தியாவை எடுத்தால் இரு பொருட்களிலும் ஒப்பீட்டு நயமின்மையை அனுபவிக்ககும் ஒப்பீட்டு ரீதியில் தேயிலையைவிட றபர் ஒப்பீட்டு நயமின்மை குறைவாகும். எனவே இலங்கை தேயிலை உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சி பெற்று ஏற்றுமதி செய்வதன் மூலமும் இந் தியா ஒப்பீட்டு நயமின்மை குறைந்த பொரு ளில் றபரில் சிறப்பத் தேர்ச்சி பெறுவதன் மூலமும் நன்மை பெறமுடியும்.

அடுத்து உள்நாட்டு வர்த்தமமாற்று விகிதத்தை நோக்கினால் இலங்கையில் இரு பொருட்களுக்குமிடையிலான உள்நாட்டு வர்த்தக மாற்று விகிதம் 30T = 15R (2T = 1R) ஆகும். ஏனெனில் இலங்கை யில் தேயிலையை 1 அலகு உற்பத்தி செய் யவும் பயன்படும் உழைப்பு ஒரேயளவின தாகும். இந்தியாவில் இரு பொருட்களுக்கு மான உள்நாட்டு வர்த்தக மாற்று விகிதம் 5T = 10R (1T = 2R) ஆகும்.

இனி நாடுகள் வர்த்தகத்தில் ஈடுபடின் இலங்கை ஒப்பீட்டு நயம் கூடிய தேயி லையை உற்பத்தி செய்து இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்து அங்கிருந்து ஒப்பீட்டு நயமின்மை குறைந்த றபரினை இறக்கு மதி செய்யவும் அதே போல் இந்தியா ஒப்பீட்டு நயமின்மையை மிகக் குறைவான தாக அனுபவிக்கும் றபரில் ஆகும்.

இரு நாடுகளுக்குமிடையிலான வர்த் தக மாற்று விகிதம் 1T = 1R என்போம். இந்நிலையில் இரு நாடுகளும் நன்மை யையே பெறமுடியும். உதாரணமாக இலங்கையை எடுத்தால் வர்த்தகம் இல் லாத நிலையில் றபரில் ஒரு அலகினை பெற்றுக் கொள்வதற்கு தேயிலையில் 2 அலகினை இழக்க வேண்டும். அதாவது றபரில் மேலதிகமாக ஒரு அலகினை உற் பத்தி செய்வதற்கு 2T அலகினை விட்டுக் கொடுக்க வேண்டும். ஆனால் வர்த்தகத் தின் மூலம் தேயிலையில் இலங்கை சிறப்பு தேர்ச்சி பெற்று அப்பொருளில் 1 அலகை ஏற்றுமதி செய்வதன் மூலம் இந்தியாவில் இருந்து 1 அலகு றபரினை இறக்குமதி செய்யலாம். இவ்வாறு ஒவ்வொரு முறை யும் இலங்கை 1T பொருளை ஏற்றுமதி செய்து 1R பொருளை இறக்குமதி செய் யும் போது ஒவ்வொரு அலகு தேயிலையை மீதப்படுத்த முடியும். இது வர்த்தகத்தின் மூலம் இலங்கை பெறும் நன்மையாகும். இதே போல் இந்தியா 1R இனை இலங் கைக்கு ஏற்றுமதி செய்து அங்கிருந்து 1T பொருள் அலகினை இறக்குமதி செய்யும் ஒவ்வொரு Rஇனை (2R = 1T) மிதப்படுத்த முடியும். எனவே வர்த்தகம் நடைபெறு வதற்கு முழுநயம் அவசியமில்லை எனலாம்.

இருந்தாலும் முழுநயக் கோட்பாட் டினை விட ஒப்பீட்டு நயக் கோட்பாடு முன்னேற்றகரமானதாக இருக்கின்றது. ஆனாலும் சில குறைபாடுகள் காணப்படு கின்றன. ஊழியப்பெறுமதிக் கோட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டில் இருந்து பல குறைபாடுகள் உள்ளதை கண்டுபிடித்தனர். அதனால் ஒப்பீட்டு நயக் கோட்பாடு ஊழியப் பெறுமதிக் கோட்பாட்டை எடுகோளாக வைத்ததனால் குறைபாடு உடையதாகக் காணப்படுகின்றதை அவதானிக்க முடிகின்றது. முடிவாகக் கூறின் முழுநயம் ஒப்பீட்டு நாயக்கோட்பாடுகள் சர்வதேசக் கோட்பாடுகளில் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றன.

உசாத்துணை நூல்கள்;-


1. International Economics – Sidney J. Wells with Revisions By Fw - BRA - ss-Loff
2. The Theory of International Trade Ali m. Et Agraa


## உலக நிறுவனங்களும் பிரதான நோக்கும்

1. ஐக்கிய நாடுகள் சபை:- U.N.O 1945 இல் உலக சமாதானத்தை நிலைநாட்ட உருவாக்கப்பட்டது.
2. ஆசிய அபிவிருத்தி வங்கி:- ADB 1966 இல் ஆசிய நாடுகளில் வளர்ச்சிக்கு உதவுதல் தலைமையகம் மணிலா (பிலிப்பைன்ஸ்) வில் உள்ளது.
3. ஐரோப்பிய பொருளாதார கூட்டமைப்பு EEC:- 1957 இல் ஐரோப்பாவை ஒன்று இணைத்து இவற்றின் வளர்ச்சிக்கு உதவுதல்
4. நேட்டோ NATO:- 1949 இல் வட அத்திலாந்தி ஒப்பந்தத்தை அமெரிக்காவுடன் ஏற்படுத்தி மேற்கு ஐரோப்பிய நலனுக்காக அமைக்கப்பட்டது. தலைமையகம் பெல்ஜியத்தில் உள்ளது.
5. ஒபெக் OPEC :- 1960 இல் பெற்றோலிய எண்ணெய்க்கு சிறந்த விலையை பெற்றுக் கொடுத்தல். தலைமையகம் ஆஸ்திரியாவில் உள்ளது.
6. சார்க் SAARC :- 1985 இல் தென்னாசிய நாடுகளின் நலனுக்கு உதவுதல். தலைமையகம் நேபாளத்தில் உள்ளது.
7. உலக பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சிக் குழு. OECD
   1961 இல் உறுப்பு நாடுகளின் அபிவிருத்திக்கு உதவுவதற்காக அமைக்கப்பட்டுள்ளது. பிரான்ஸ்ஸில் தலைமையகம் உண்டு.
8. தென் கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு ASEAN
   1967 இல் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பொருளாதார பலத்தை உருவாக்க ஆரம்பிக்கப்பட்டது. தலைமையகம் மலேசியாவில் உள்ளது.
9. G – 77 :- 1964 இல் மூன்றாம் உலக நாடுகளின் வணிக பொருளாதார வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்டது.
10. G –7 :- உலகில் கைத்தொழில் மய நாடுகள் தங்களுக்குள்ளே ஏற்படுத்திய அமைப்பு
11. பொதுநலவாயம் :- பிரித்தானியாவின் குடியேற்றத்தின் கீழ் இருந்த நாடுகள். :- சுதந்திரம் அடைந்து அமைக்கப்பட்ட அமைப்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாசிய பிராந்திய ஒத்துழைப்பு: சார்க் பற்றிய நோக்கு

# Regional Co-operation in South Asia: SAARC - An Over View

அறிமுகம்:

இரண்டாம் உலக மகா யுத்தத்துக்கு பின்பு உலகம் முழுவதும் பிராந்திய ஒத்துழைப்பு அமைப்புகள் ஆங்காங்கே உருவாகின. அவை அரசியல், இராணுவக் கூட்டுக்களாகவும், பொருளாதாரக் கூட்டுக்களாகவுமே அடையாளம் காணப்பட்டன. பொதுவாக நேட்டோ (Nato) வார்சோ (Warsaw) சென்டோ (Cento) சியாட்டோ (Seato) ஏஷியான் (Asean) போன்ற அமைப்புக்கள் உருவாகின. அந்த வகைப்பாட்டுக்குள் ஒன்றாகவே சார்க் (SAARC) அமைப்பும் உருவானது. இது தென்னாசிய நாடுகளின் புவிசார்த் தன்மைக்குட்பட்டதாக வடிவமைக்கப்பட்டது. இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், வங்காளதேஷ், மாலைதீவு, நேபாளம், பூட்டான் போன்ற ஏழு நாடுகளையும் கொண்டது. இது தென்னாசியாவின் பொருளாதார சமூக, ஒத்துழைப்பு நிறுவனமாகும்.

முழு உலகத்திலும் குறிப்பிட்ட சில நாடுகளே அரசியல் பொருளாதார செல்வாக்கினைப் பெற்று வருகின்றன. அமெரிக்கா, பிரிட்டிஷ், பிரான்ஸ், கனடா, ஜேர்மனி, ஜப்பான் என்பனவே சக்தி பெற்ற நாடுகளாக விளங்குகின்றன. இதில் மூன்றாம் உலகநாடுகளே அதிகம் பாதிப்படைந்து வருகின்றன. பிராந்திய அமைப்புக்கள் சில சக்தி வாய்ந்த அரசுகளால் உருவாக்கப்படுகின்றன. சில இயல்பாக தோன்றுகின்றன. ஆனால் எல்லாப் பிராந்திய அமைப்புக்களும் சக்தி பெற்ற அரசுகளின் பாதிப்பிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கே உருவாகியிருக்கின்றன என்பதை ஏற்றுக் கொள்ளலாம். பனிப்போர்க்காலத்தில் உருவான பல பிராந்திய அமைப்புகள் மறைந்து விட்டன. ஒரு சில தொடர்ந்தும் இயங்கிவருகின்றன. புதிய சர்வதேச ஒழுங்கில் மேலும் சில பிராந்திய பொருளாதார அமைப்புக்கள் உருவாகி வருகின்றன. இந்த வகையில் சார்க் அமைப்பு தனித்துவமானதகாவும் விளங்குகின்றது. பிராந்திய நலனையும், ஒத்துழைப்பையும், பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டது.

இந்து சமுத்திரத்தின் மிகப்பிரதான பிராந்தியங்களில் தென்னாசியாவும் ஒன்றாகும். இது தென்மேற்கு ஆசியாவுடனும் கிழக்காசியாவுடனும் தென்கிழக்காசியாவுடனும் தரைவழித் தொடர்புகளை (இலங்கை, மாலைதீவு தவிர) கொண்ட பிராந்தியமாகும். இது லச்சாதீவுகள், மாலைதீவு, அந்தமான், நிக்கோபார் தீவுகள், இலங்கை போன்ற கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தீவுகளைக் கொண்டுள்ளது. இவை இந்து சமுத்திரத்தை கண்காணிக்கும் மையங்களாகவுள்ளன. மிகப்பிரதானமாக கராச்சி, கல்கத்தா, பம்பாய், கொச்சி,

த. கணேசலிங்கம்
உதவி விரிவுரையாளர்,
பொருளியல் துறை,
( அரசறிவியல் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு, திருகோணமலை, சென்னை விசாகப்பட்டினம் போன்ற துறைமுகங்களையும் கொண்ட பிராந்தியமாகும் (நிழற்படத்தைப்பார்க்க) இப்பிராந்தியத்தில் இந்தியாவே வலுவான பெரிய அரசாகும். மாலைதீவு, இலங்கை, தவிர ஏனைய நாடுகள் இந்தியாவிலிருந்தே விடுவிக்கப்பட்டவையாகவுள்ளன. ஆனால் இலங்கையும், மாலைதீவும் தீவுகளாக எடுக்கப்பட்டாலும் இந்தியாவின் நேரடிச் செல்வாக்குள் உட்பட்டிருந்தன. இலங்கை வங்காள விரிகுடாவால் தனித்துவமாக பிரிக்கப்பட்டிருந்தாலும், அரசியல், பொருளாதார, சமூக வாழ்வில் இந்தியப் பேரரசின் செல்வாக்கிலிருந்து தப்பிக்க முடியவில்லை. ஐரோப்பியர் வந்த பின்னரும் இந்நிலமை நீடித்தது. அவர்கள் இந்தியாவை மையமாகக் கொண்டே ஆட்சி முறைமையை நிர்வகித்தனர். பிரிட்டிஷ்காரர் 18 ஆம் 19 ஆம் நூற்றாண்டுகளில் இந்தியாவை தளமாக பயன்படுத்தி தமது பேரரசை விரிவுபடுத்தினர். இன்றைய இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேஷ், மியான்மீர் (பர்மா) ஆகியவற்றுடன் ஏடன் பாரசீகவளைகுடாவில் சில பகுதிகள் இமாலயப்பகுதி அரசுகளான பூட்டான், நேபாளம் சீக்கிம், ஆகியவற்றை உள்ளடக்கி ஆட்சி செய்தனர். எனவே ஐரோப்பியர் வரமுன்னும், வந்த பின்னரும், இந்தியர்கள் தென்னாசியாவில் ஆதிக்கம் பெற்றிருந்தனர். என்பதை மறுக்க முடியாது.

தொன்னாசியாவின் இதயபூமி இந்தியா. இது பெரிய நிலப்பரப்பையும், மக்கள் தொகையையும், கொண்ட இஸ்திரமான அரசாகும். ஏறக்குறைய 78 சதவிகிதமான நிலப்பரப்பையும், 73 சதவிகித மக்கள் தொகையையும் 78 சதவிகித உள்நாட்டு உற்பத்தியையும் இப்பிராந்தியத்தில் இந்தியா கொண்டுள்ளது. இது சுதந்திரத்திலிருந்து இறுக்கமான அரசமைப்பைக் கொண்டுள்ளது. ஜனநாயகப் பாரம்பரியத்தை தொடர்ந்து பின்பற்றுகின்ற நாடாக உள்ளது. பாகிஸ்தான், வங்களாதேஷ், மாலைதீவு, என்பன இராணுவ ஆட்சி நாடுகளாகவுள்ளன. இடையிடையே ஜனநாயக மரபுகள் தோன்றுவதும், மறைவதுமாகவுள்ளது. இலங்கை மார்கோஸ் பாணியிலான இராணுவ ஆட்சி நாடாகவுள்ளது. ஜனநாயக மரபும் இராணுவமரபும் கலந்த ஓரமைப்பாகவுள்ளது. நோபாளம், பூட்டான், மன்னராட்சி முறைமைக்குட்பட்ட நாடுகளாகும். எனவே இந்தியா தவிர்ந்த தொன்னாசிய நாடுகளது ஆட்சி தளம்பலுக்குட்பட்டதாக இருக்கிறது. ஒப்பீட்டடிப்படையில் இந்தியா உறுதிமிக்க அரசாக இருக்கிறது. நெருக்கடியான காஷ்மீர், பஞ்சாப் பிரச்சினைகளில் கூட இந்தியா தனது முழுமையை இழந்துவிடவில்லை.

மத ரீதியான வேறுபாடு இப்பிராந்தியத்தை அதிகம் பாதித்து வருகிறது. பிரதான மதங்களாக இந்து, இஸலாம், பௌத்தம் காணப்படுகிறது. இந்து மதத்தைப் பின்பற்றும் நாடுகளாக இந்தியா, நேபாளம் இலங்கையில் தமிழ் மக்கள் அதே போன்று இஸ்லாம் மதம பாகிஸ்தான் வங்களாதேஷ், மாலைதீவு, நாடுகளால் பின்பற்றப்படுகிறது. உலகத்தில் அதிக முஸ்லீம்கள் வாழும நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். பௌத்தம் பூட்டானிலும் இலங்கையில் வாழுகின்ற சிங்கள மக்களாலும் பின்பற்றப் படுகின்றது. இதில் பெருமளவு செல்வாக்குச் செலுத்தும் மதமாக இந்து மதம விளங்குகிறது. இந்துக்கள் அதிகமாக வாழும் நாடு இந்தியாவே. தென்னாசிய மக்கள் அதிக முரணபாடுடையவர்களாக காணப்படுவதற்கான அடிப்படைக் காரணம் மதமென்றே கூறலாம்.

பாதுகாப்புக்கான போட்டித் தன்மை தென்னாசிய நாடுகளில் அதிக பாதிப்பை ஏற்படுத்திவருகிறது. பாகிஸ்தான், வங்காளதேஷ், இலங்கை என்பன தமது உள் நாட்டுப் பிரச்சினையை கையாளுவதுடன் இந்தியாவிலிருந்து தம்மைப்பாதுகாப்பதற்கும் இராணுவத்தை அதிகரிக்கின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இந்நாடுள் ஓரளவு இராணுவப் பலத்தையே தென்னாசியாவில் வைத்திருக்கின்றன. இந்தியா ஏறக்குறைய முழுத் தென்னாசிய நாடுகளது இராணுவத் தொகையையும் விட பல மடங்கு அதிகமான இராணுவத்தைக் கொண்டுள்ளது. ஆனால் இந்திய அரசியலில் அல்லது ஆட்சியியலில், இராணுவத்தினர் செல்வாக்கு அதிகம் உணரப்படவில்லை என்றே கூறலாம். உலகத்திலேயே நான்காவது காலாற்படையணியைக் கொண்ட நாடு இந்தியாவாகும். (சோவியத் வீழ்ச்சிவரை) அணுவாயுத நாடாகவும் விளங்குகிறது. பாகிஸ்தான் நவீன தொழில் நுட்பத்தில் வளர்ச்சியடைந்த இராணுவ தளபாடத்தை கொண்டுள்ளது. அத்துடன் அணுவாயுதத்தை உற்பத்தி செய்யும் நாடாகவும் உள்ளது. ஆனால் தென்னாசியாவில் இந்தியாவே பெரும் படைநகர்த்தலை செய்யக்கூடிய நடாக உள்ளது. இலங்கை, மாலைதீவு, வங்களாதேஷ் அனுபவங்கள் நல்ல எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

எனவே தென்னாசியாவில் இந்தியா எல்லா வகையான செல்வாக்கையும் பெற்ற பெரிய நாடாகும். அரசியல், சமூக, பொருளாதார, கலாசார, இராணுவ பலத்திலும், வளத்திலும் உறுதி மிக்க நாடு இந்தியா. அதனால் தென்னாசியாவின் ஒத்துழைப்பு இந்தியாவின் முழுமையிலுண்டு என்ற முடிவுக்கு வரலாம்.

## டாக்காவிலிருந்து கொழும்பு வரை

சார்க் அமைப்பு 1985 ஆம் ஆண்டு வங்காளதேஷ் முன்னாள் ஜனாதிபதி ஸியாவுர் ரகுமான் (Ziaur Ruhman) முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டது. இது பிராந்திய ஒத்துழைப்புக்கான கொள்கைகளையும், கோட்பாடுகளையும் கொண்டதாக இருந்தது. இது அரசியல் தலையீடுகளை தவிர்க்கவே விரும்பியது. இறைமை,, சமத்துவம், பிரதேச ஐக்கியம் அரசியல் சுதந்திரம் ஏனைய அங்கத்துவ நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருத்தல். மேலும் கொள்கை அமைப்பில் தீர்மானங்கள் ஒருமனதாக மேற்கொள்ள வேண்டும். சர்ச்சைக்குரிய விடயங்கள் சேர்க்கலாகாது. முன்னேற்றத்துக்கான பொது வாழ்க்கைத் திட்டங்கள் பல சேர்க்கப்பட்டன. சமூக அணுகு முறைகளைக் கொண்ட கலாசாரம், பொருளாதார வளர்ச்சி, அதற்கான வளங்களை திருப்தியாக பயன்படுத்துதல், சிறப்பான ஒழுங்கமைப்பையும், பரஸ்பர உதவிகளையும் பொருளாதார, சமூக, கலாசார, விஞ்ஞான தொழில்நுட்ப துறைகளில் பரிமாற்றிக் கொள்ளுதல், பலமான உறவுகளை ஏனைய அபிவிருத்தி அடைந்த நாடுகளுடன் ஏற்படுத்துதல், சர்வதேச நிகழ்வுகளில் பொதுநலனையும், பலமான ஒத்துழைப்பையும் ஏற்படுத்துதல்' ஏனைய பிராந்திய ஒழுங்கமைப்புக்களுடன் மேற்கூறப்பட்ட இலட்சியத்தை, நோக்கங்களை அடையவழி செய்தல், நலன்புரி சேவைகளை உயர்வடையச் செய்வதன் மூலம் தென்னாசிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.

1985 ஆம் ஆண்டு முதலாவது சார்க் உச்சிமாநாடு டாக்காவில் (வங்களாதேஷ்) நடந்தது. அது சார்க் அமைப்பின் கொள்கைகள், இலட்சணைகளை ஏற்றுக் கொண்டது. அத்துடன் மேலும் பல விடயங்கள் சேர்க்கப்பட்டன. அதாவது போதை மருந்து கடத்தலும், துஷ்ப்பிரயோகமும், அபிவிருத்தியில் மகளிரின் பங்களிப்புக்கான புதிய நடைமுறைகள், பயங்கரவாதப் பிரச்சினை என்பனவாகும். இதில் பயங்கரவாதப் பிரச்சினை பெரும் சர்சையை ஏற்படுத்தியது. இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா இந்தியாவுடன் தொடர்புபடுத்தி இலங்கை தமிழ் மக்களது பிரச்சினையை விமர்சித்தார். ஆனால் இம்மாநாடு முடுந்த சில நாட்களில் இந்தியாவும் பாகிஸ்தானும் பரஸ்பரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது அணு நிலைகளைத் தாக்குவதில்லை என்று முடிவுக்கு வந்தன. நேபாளம், வங்களாதேஷ் உடனான இந்திய நதி நீர்ப் பிரச்சினை ஓரளவு முன்னேற்றமடைந்தது.

1986 ஆம் ஆண்டு இரண்டாவது உச்சி மாநாடு பெங்களூரில் (இந்தியா) நடைபெற்றது. இதில் பின்வரும் அம்சங்கள் அங்கீகரிக்கப்பட்டன. தெற்காசிய கட்புல, செவிப்புல சாதனங்களின் பரிமாற்றம் சார்க் ஆவணப்படுத்தல் மையம் ஒன்றின் ஸ்தாபகம், (நேபாளம்) பிராந்திய நாடுகளுக்கிடையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துதல், சார்க் புலமைப் பரிசில்களையும், தொழிலாளர்களையும் பரிமாற்றிக் கொள்வதற்கான திட்டமிடல்கள் என்பதுடன் இம்மாநாட்டில் பயங்கரவாதம் சம்பந்தமாக எல்லா நாடுகளும் ஒரு முடிவுக்கு வந்தன. மனித உயிர் மீதும், அரசியல் இஸ்திரத் தன்மை மீதும், சர்வதேச சமாதான ஒத்துழைப்பு மீதும் பயங்கரவாதம் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தைக் கண்டித்தன.

1987 ஆம் ஆண்டு மூன்றாவது உச்சிமாநாடு கட்மண்டுவில் (நேபாளம்) நடைபெற்றது. இது நெருக்கடியான காலகட்டத்தில் நிகழ்ந்தது. இந்திய - இலங்கைப் பிரச்சினை கொதி நிலையிலிருந்த காலகட்டம். இதில் பயங்கரவாதத்தை ஒடுக்குவது தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. கட்புல - செவிப்புலச் சாதனப் பரிமாற்றம் தொடர்பானநிகழ்வு தொடக்கிவைக்கப்பட்டது. உணவுப் பாதுகாப்புக்குரிய ஒதுக்கமொன்று மேற்கொள்ளப்பட்டது.

1989 ஆம் ஆண்டு நான்காவது மாநாடு இஸ்லாமாபாத்தில் (பாகிஸ்தான்) நடைபெற்றது. இதில் புதிய விடயங்கள் பல ஏற்றுக்கொள்ளப்பட்டன. சார்க் பிராந்தியத்தில் கல்வி தொடர்பான விடயங்களில் ஒத்துழைப்பு சார்க் பிராந்தியத்தில் பாராளுமன்ற உறுப்பினருக்கும், நீதிபதிகளுக்கும் இலவசப் பயணச்சீட்டு அறிமுகம், போதைவஸ்து துஷ்பிரயோகத்துக்கு எதிராக போராடுவதற்கான கொள்கைப் பிரகடனம் போன்ற நிகழ்வுடன் இம்மாநாடு முடிவடைந்தது.

1990 ஆம் ஆண்டு ஐந்தாவது உச்சிமாநாடு மலே (மாலைதீவு) யில் நிகழ்ந்தது. குறிப்பாக பொருளாதார ஒத்துழைப்பின் மீள்பரிசீலனையையே அதிகம் கவனத்தில் கொள்ளப்பட்டது. பிராந்திய செய்திட்ட நிதியமொன்றை ஸ்தாபிப்பதும் உயிரினத் தொகுதிகளைப் பேணிப் பாதுகாப்பது, விதைகளுக்கான வங்கியொன்றினை பராமரிப்பது, போதை வஸ்துக்களின் துஷ்பிரயோகம், சுற்றுச்சூழல், சுற்றுலாத்துறை என்பனவற்றின் ஒத்துழைப்பு மற்றும் பிரகடனங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

1991 ஆம் ஆண்டு ஆறாவது உச்சிமாநாடு கொழும்பில் (இலங்கை) நடைபெற்றது. இதில் வர்த்தகம், வங்கியமைப்பு தொடர்பாக புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டது. அதாவது தென்னாசிய நாடுகளின் ஏற்றுமதி, இறக்குமதிக்கான சுங்க வரிச்சலுகைத் திட்டம் முன்வைக்கப்பட்டது. (தீர்வை முன்னுரிமைப் பிரதேசம்) அவ்வாறே தென்னசிய நாடுகளுக்கான வங்கியமைப்பும் அவசியமென கூறப்பட்டது. மேலும் ஏனைய ஆசிய நாடுகளுடன் (தென் கிழக்காசியா) பரீட்சார்த்தமாக வர்த்தகப் பரிமாற்றங்களை பொருத்தமான விடயங்களில் மேற்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டது. 1993 ஆம் ஆண்டு ஏழாவது உச்சிமாநாடு டாக்காவில் நடைபெற்றது.

## நெருக்கடிகள்

தென்னாசிய நாடுகளின் ஒத்துழைப்புக்கு பல காரணிகள் தடையாகவுள்ளன. ஒவ்வொரு நாட்டுக்குமான •தனித்துவமான பிரச்சினைகள், தென்னாசிய நாடுகளுக்கு இடையிலான பிரச்சினைகள் தென்னாசியா தவிர்ந்த ஏனைய நாடுகளது தலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யீடுகள் என்ற வகையில் நோக்கலாம். மிகப் பிரதான நாடான இந்தியா ஏகப் பட்ட நெருக்கடிகளைக் கொண்டுள்ளது. பல இன, மத, மொழி, கலாசாரப் பின்னணியைக் கொண்ட மக்கள் கூட்டத்தின் ஐக்கியமே இந்தியக் கூட்டாட்சியாகும். இது இந்தியாவுக்கான தனித்துவப் பிரச்சினையல்ல, ஆனால் அதிக தாக்கமுடையது. மொழி, இன, அடிப்படையில் தனிநாடு கோரிப் போராடும் மாநில அரசுகள் இந்தியாவின் அரசியல் உறுதிப்பாட்டினை சிதைக்கின்றன. காஷ்மீர், பஞ்சாப், இந்தியாவின் பிரரந்திய அரசியலை தீர்மானிக்கும் சக்தி பெற்றனவாக உள்ளன. அரசியலமைப்பின் குறைபாட்டினால் மத்திய, மாநில அரசுகளுக்கான பிரச்சினைகள் இந்திய வளர்ச்சியை பாதிக்கின்றது. அண்மைக்காலத்தில் எழுச்சியடைந்துவரும் இந்துத் தேசியவாதம் இந்திய தேசியக் கட்டுமானத்துக்கான அடிப்படையை ஆட்டங்காண வைத்துள்ளது. மறுபுறத்தில் பொருளாதார வளர்ச்சி சனத்தொகைப் பெருக்கத்துக்கேற்ப வளரவில்லை. உணவு, சுகாதார வசதிகள், கல்வி, வேலைவாய்ப்பு, வீடமைப்புத் திட்டங்கள், சமூக மேம்பாட்டுத் திட்டங்கள், விஞ்ஞான கைத்தொழில் தொழில்நுட்பம் என்பன முன்னேற்றமடையாது உள்ளது. இலங்கையின் தனியொருவருக்கான பொதுத்தேசிய உற்பத்தியைவிட இந்தியாவினது தேசிய உற்பத்தி குறைவானது.

இந்தியாவைப் போன்று பாகிஸ்தானும் அதிக நெருக்கடிக்கு உட்பட்டு வருகிறது. இராணுவம் அரசியலில் முதன்மை பெறுவதனால் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. பஞ்சாப், சிந்து, மாகாணங்களின் அரசுக்கு எதிரான போராட்டங்கள் மத்தியரசை தளம்பலடையச் செய்கின்றது. இதனால் ஆட்சி மாற்றங்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. இது பொருளாதார வளர்ச்சிப் போக்கில் அதிக ஈடுபாட்டை ஏற்படுத்தாது தடுத்து வருகிறது. இதே போன்று இலங்கை, வங்களாதேஷ், நேபாளம் போன்ற நாடுகளிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. தனிநாட்டுக்கான போராட்டத்தில் இலங்கை அதிகம் பாதிப்படைந்து உள்ளது. ஜே. வி. பி. யின் கிளர்ச்சி மறுபுறத்தில் தமிழீழத்துக்கான போராட்டம், இலங்கையின் ஸ்திரப்பாட்டை குலைவடையச் செய்துள்ளது. தென்னாசிய நாடுகளது வறுமை கொடுமையானதாக உள்ளது. உலக சனத்தொகையில் ஏறக்குறைய 21 சதவிகிதம் தென்னாசிய நர்டுகள் பெறுகின்றன. உணவு, வேலையின்மை, கல்வி, சுகாதாரம், அகதிகள் தொடர்பான பிரச்சினைகள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

அடுத்து இந்தியாவின் மேலாதிக்கவாதம் பிரதான நெருக்கடியாகவுள்ளது. இதுவே தென்னாசிய நாடுகளுக்கிடையிலான பிரச்சனைக்கான காரணமாகவுள்ளது. பிரிட்டிஷ்ன் நேரடி ஆதிக்கம் இரண்டாம் உலக யுத்தத்துடன் முடிவடைந்தது. 1947 ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரமடைந்தது. அப்போது பாக்கிஸ்தானும் சுதந்திரமடைந்தது. இந்தியாவின் பிரதான யுத்தத் தடுப்பு வலயமாக இருந்த பாகிஸ்தான் தனிநாடாகியது. இதிலிருந்து மூன்று பெரும் போர்களை இவ்விரு நாடுகளும் சந்தித்தன. காஷ்மீர் தொடர்பான எல்லைப் பிரச்சினையே இதற்கான அடிப்படைக் காரணமாகும். ஆனால் காஷ்மீர் மக்கள் தனிநாட்டுக்காக போராடுகின்றனர். மேலும் இந்தியாவின் பஞ்சாப்பியரின் போராட்டத்துக்கு பாகிஸ்த்தான் ஆயுத உதவியும், பயிற்சியும் வழங்கி வருகிறது. இந்தியக் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீருக்குள்ளும் பாகிஸ்தான் அவ்வாறே நடந்து வருகிறது. இதே போன்று இந்தியாவும் பாகிஸ்தானின் உறுதியை குலைப்பதற்கு தீவிரவாதிகளுக்கு பயிற்சியும், ஆயுத உதவியும் வழங்கி வருகிறது. 1971 ஆம் ஆண்டு நிகழ்ந்த இந்திய - பாகிஸ்தானிய போர் பாகிஸ்தானுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தியது. இந்தியாவுக்கு ஏறக்குறைய சமாதையாக இருந்த பாகிஸ்

தானை இந்தியா துண்டாடியது. எதிரியை தனிமைப்படுத்துவதில் இந்தியா வெற்றி யடைந்தது. இதன் பின்னர் பாகிஸ்தான் தொழில்நுட்ப ரீதியில் இராணுவத்தை வளர்க்கத் திட்டமிட்டது. இந்தியாவுடன் மோதுண்டக் கூடிய இராணுவத் தொகையை கட்டி வளர்ப்பதில் ஏற்பட்ட தோல்வியை ஈடு செய்ய இராணுவத்தை நவீன மயப்படுத்தியது. 1972 ஆம் ஆண்டு காஷ்மீர் பிணக்கு சம்பந்தமாக சிம்லா உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

இந்தியாவால் உருவாக்கப்பட்ட வங்காளதேஷ் ஆரம்பத்தில் இந்தியாவை ஆதரித்தது. அவாமி லீக் அரசு வீழ்ச்சியடைந்ததுடன் இந்தியாவுக்கு எதிரான கருத்துக்கள் எழுந்தன. இதே போன்று 1950 களில் ஏற்பட்ட நேபாள நெருக்கடியில் இந்தியா உதவியது. கம்யூனிஸ்டுகளை அடக்குவதற்கு நேரு தனது இராணுவத்தையே அனுப்பியிருந்தார். நேருவின் மறைவுக்கு பின்பு படிப்படியாக கொள்கையை நேபாளம் மாற்றிக்கொண்டது. சீன உதவியை நாடியது. இந்தியாவுக்கு முரணான வெளிநாட்டுக் கொள்கையை வகுத்தது. சீனாவின் உதவியுடன் நக்ஷலைட்டுகளுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கியது. ஆனால் நேபாளத்திலுள்ள இந்தியர்களது உதவியினால் இந்தியா, நேபாள அரசாங்கத்தை மாற்றியமைத்தது. இந்த வகையில் பூட்டான் வங்களாதேஷ், நேபாளம் என்பன இந்தியாவின் அரசியல், சமூக, பொருளாதார விடயங்களில் இந் நாடுகளில் வாழும் இந்தியர்களால் செல்வாக்கு செலுத்தப்படுகிறது. இது இலங்கையிலும் குறிப்பிட்ட காலத்தில் சாத்தியப்பட்டது.

இலங்கையைப் பொறுத்தவரை சுதந்திரத்திலிருந்து இந்தியாவுக்கு எதிரான கொள்கையையே பின்பற்றப்பட்டு வருகிறது. (பண்டாரநாயக்காவைத் தவிர) ஆனால் இந்தியா தனது மேலாதிக்கத்தை அவ்வப்போது சாதித்து வருகிறது. 1971 ஆம் ஆண்டு இலங்கையிலேற்பட்ட ஜே.வி.பி. கிளர்ச்சியினை இந்திய இராணுவமே அடக்கியது. 1977 ஆம் ஆண்டு ஜே. ஆர் ஜெயவர்த்தனா தலைமையிலான அரசின் கொள்கைகள் தனக்கு பாதகமானது என இந்தியா கருதியது. அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் தான் இலங்கை தமிழ் மக்களது போராட்டத்தை தூண்டியது. எதிர் பார்த்த நலன் சாத்தியப்படாத போது 1987 இல் படையை இறக்கியது. இந்தியா தனக்கு எதிரான இரு சக்திகளை அடக்கவே இலங்கைக்குள் புகுந்தது. ஒன்று ஜே.வி.பி. மற்றையது எல்.ரி.ரி.ஈ. இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக வடக்கிலும் தெற்கிலும் ஒரே நேரத்தில் கூர்மையடைந்த போராட்டத்தை அடக்கியதன் மூலம் இலங்கை அரசை இந்தியா பாதுகாத்தது. இதே போன்று 1989 இல் ஏற்பட்ட மாலை திவு மீதான சதிப்புரட்சியை முறியடித்தது. எனவே இந்தியா, தென்னாசியப் பிராந்தியத்தை கட்டுப்படுத்தி வருகிறது என்ற முடிவுக்கு வரலாம். இப்பிராந்தியத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் இந்தியாவிடமேயுள்ளது.

மூன்றாவது நெருக்கடியான சர்வதேச வல்லரசுகளது தாக்கம் மிகப்பிரதான இடத்தைப் பெறுகின்றன. 1962 ஆம் ஆண்டு நடந்த இந்திய – சீன யுத்தம் தென்னாசியாவில் பெரும் மாறுதலை ஏற்படுத்தியது. தென்னாசியா பாதுகாப்புப் பற்றி அச்சமடைந்தது. இது இந்திய – சோவியத் உறவை விரிவடையச் செய்தது. இது இராணுவ ரீதியில் இந்தியா வளர வேண்டிய தேவையை ஏற்படுத்தியது. இதனுடன் வல்லரசுப் போட்டி ஆரம்பித்தது. 1971 ஆம் ஆண்டு வங்களாதேஷ் பிரிவினை சோவியத்யூனியனினதும், அமெரிக்காவினதும் நடமாட்டத்தை அதிகரிக்கச் செய்தது. பாகிஸ்தான் – அமெரிக்க உறவு பலமடைந்தது. பரஸ்பரம் வல்லரசுகள் இரண்டும் இப் பிராந்தியத்தை நெருக்கடிக்கு உள்படுத்தினர். பாகிஸ்தானும் இந்தியாவும்

போட்டிபோட்டுக் கொண்டு இராணுவக் குவிப்பில் வளர்ந்தன. இக் காலத்தில் 1979 ஆம் ஆண்டு சோவியத்யூனியன் படைகள் ஆப்கானிஸ்தானுள் புகுந்தன. இது தென்னாசியாவின் அமைதியை முழுமையாக குலைத்தது. பாகிஸ்தானின் இராணுவம் நவீனமடைந்தது. இந்தியாவும் அதை நோக்கி நகரவேண்டியிருந்தது. இதே போன்று சீன – நேபாள உறவு வலுவடைந்தது. இதுவும் இந்தியாவுக்கு பல பிரச்சினைகளை ஏற்படுத்தி வந்தது. இலங்கை–அமெரிக்க உறவு விரிவடைந்ததும் இந்தியா அதிகம் அச்சமடைந்தது. இலங்கையைப் பொறுத்து இந்தியா புதிய கொள்கையை பின்பற்ற வேண்டிய நிலைமையை இலங்கையின் திறந்த பொருளாதாரக் கொள்கை ஏற்படுத்தியது. எனவே வல்லரசுகளது போட்டிகள் தென்னாசிய நாடுகளிடையே முரண்பாட்டை அதிகரித்தது. இந்தியா, பூட்டான், மாலைதீவு ஓரணியாகவும், பாகிஸ்தான், இலங்கை வங்களாதேஷ், நேபாளம் எதிரணியாகவும் காணப்பட்டன. பனிப்போர் பரஸ்பரம் தென்னாசிய நாடுகளது இயல்பு நிலையை பாதிப்புக்குட்படுத்தியது என்று கூறலாம்.

நவீன யுகத்தில் வர்த்தகத்திலும், பொருளாதாரத்திலும் ஒத்துழைப்பை வளர்க்காமல் நாடுகளது அரசியல் உறவுகளை நெருக்கமடையச் செய்வது கடினம். அந்த வகையில் தென்னாசிய நாடுகளது பொருளாதார நோக்கு நிலை பின்தங்கியதாகவே உள்ளது. இவை விவசாயம் சார்ந்த பொருளாதாரக் கட்டமைப்பையே கொண்டிருக்கின்றன. இலங்கை, நேபாளம் போன்ற நாடுகளது வருமானத்தில் அதிக பங்கு முதல்நிலைப் பொருள்களாலேயே தங்கியுள்ளன. இலங்கை ஆடைக் கைத்தொழிலில் அதிக வருமானத்தை பெற்றாலும் எதிர்பார்த்த இலாபத்தை ஈட்டிக்கொள்ள முடியவில்லை. பெறப்படும் வருமானத்தில் 75 சதவிகிதத்தை ஆடைக் கைத்தொழிலின் உள்ளீடுகளுக்கு செலவு செய்ய வேண்டியுள்ளது. இந்நாடுகளது வர்த்தகக் கைத்தொழிலில் பெரும் பிரச்சினையை மேற்கூறிய அம்சம் ஏற்படுத்தி வருகிறது. இதே போன்று இறக்குமதி அதிகரிப்பு, அதிகமான பெற்றோலியம், உணவு என்பனவற்றுக்காக வருமானத்தில் 20 சதவீதத்தை செலவு செய்கின்றன. பொறியியல் துறையில் மட்டுப்படுத்தப்பட்ட வளர்ச்சி இயந்திரப் போக்குவரத்துத் துறைகளில் அதிக இறக்குமதியை வேண்டி நிற்கிறது. இத்தகைய இறக்குமதிகளில் வளர்ச்சியடைந்த நாடுகளுடனேயே தொடர்புபடுவதனால் அதிகம் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இதனுடன் தொடர்பு பட்ட விடயமாக இராணுவத் தொழில் நுட்ப இறக்குமதியில் அதிகரிப்பு கணிசமான இடத்தைப் பெறுகிறது. தென்னாசிய நாடுகளது பிரச்சினைகளில் அதிக பாதிப்பை இராணுவத் தளபாட இறக்குமதி ஏற்படுத்துகிறது. இதில் கவனத்தில் கொள்ளக்கூடிய இன்னோரம்சம் இறக்குமதிக்கான நிதிப்படுத்தலில் நிபந்தனைகள் விதிக்கப்படுதல்.

எனவே தென்னாசிய நாடுகளது ஒத்துழைப்புக்கும், வளர்ச்சிக்கும் பல காரணிகள் தடையாக இருந்து வருகின்றன.

விமர்சனம்:

இன்று உலகம் ஒரு பொருள்சார் அரசியல் பாதையிலேயே நகர்ந்து செல்கிறது. பொருளாதார வளர்ச்சியைக் கருத்தில் கொண்டே அரசியல் உறவுகள் நிர்ணயம் செய்யப்படுகின்றன. சுருக்கமாக கூறினால் உலகம் முழுவதும் பொருளாதார நலன்களுக்காக அரசியல் யதார்த்தத்தை விட்டுக் கொடுக்கும் தன்மை எழுச்சியடைந்து வருகிறது. இதனால் இன்றைய அரசியலை பொருள்சார் அரசியல் என்றே கூற வேண்டியுள்ளது. இது தற்போது அதிகமாக உணரப்பட்டு வருகிறது. இந்த யதார்த்தத்தை தென்னாசிய நாடுகள் உணர்ந்தவையாக தென்படவில்லை. மாறாக அரசியல் போட்டிகளிலேயே அதிக கவனத்தைச் செலுத்தி வருகின்றன. காஷ்மீர், பஞ்சாப், தமிழீழம் போன்ற போராட்டங்கள் முடிவில்லாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீடித்து வருகின்றன. இம்மக்களது தனி நாட்டுக் கோரிக்கைகள் பயங்கரவாதப் பிரச்சினையாக நோக்கப்படுகிறது. இம்மக்களது தேசவிடுதலைக்கான போராட்டம் பிழையான சொற்பதத்தால் விமர்சிக்கப்படுவது முட்டாள்தனமான பார்வையாகும். இம் மக்களது போராட்டம் உணர்வுபூர்வமானது, நிர்வாகத்திலும், அரசியல் – சமூக– பொருளாதார விடயங்களிலும் வழங்கப்பட்ட உரிமைகள், சுதந்திரங்கள் மறுக்கப்பட்ட போதுதான் இம்மக்கள் கிளர்ந்தெழுந்தனர். எனவே இம்மக்களுக்கு உரிமையை வழங்குவதற்குப் பதிலாக அடக்குவது தனிநாட்டுக்கு இட்டுச் செல்வதை தவிர வேறுவழியில்லை. இது ஒரு நாட்டின் முழுமையான உற்பத்தியை பாதிக்கும், அதற்கான வர்த்தகப் பரிமாற்றங்களைப் பாதிக்கும், தேசிய, உள்நாட்டு உற்பத்திகளிலும், ஏற்றுமதி, இறக்குதிகளிலும் பாதிப்பை ஏற்படுத்த வாய்ப்பதிகமுண்டு.

இலங்கை திறந்த பொருளாதாரக் கொள்கையை முன்னெடுக்க ஆரம்பித்ததும் தமிழ் மக்களது போராட்டமும் சடுதியாக வளரத் தொடங்கியது. இதற்கான பின்னணியை இந்தியாவின் கொள்கை அமைப்பிலிருந்து தான் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைக்கு முரண்பாடாக இலங்கைப் பொருளாதாரக் கொள்கையை வகுத்தது. அதனை முறியடிக்க இந்தியா எடுத்த முயற்சியாகத் தான் தமிழ் மக்களது போராட்டத்தின் ஆரம்பம் காணப்பட்டது. ஆனால் நடைமுறையில் மாறுபட்ட வடிவத்தை எடுக்கும்போது இந்தியா தமிழ் மக்களையும் நிராகரித்தது. இதற்கான விளக்கத்தை பின்வரும் எடுத்துக் காட்டு மூலம் தெளிவுபடுத்தலாம். 1947 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் பலமான இந்தியா ஒன்றிணைந்திருப்பது ஐரோப்பிய நலனுக்கு பாதகமானதென இந்திய-பாகிஸ்தான் பிரிவினையை ஏற்படுத்தியது. அதே இந்தியா 1971 ஆம் ஆண்டு தென்னாசியாவில் தனது நலனுக்குப் பாதகமாக பாகிஸ்தானின் ஐக்கியம் அமைந்துவிடும் என்ற எண்ணப்பாட்டில் பாகிஸ்தான் – வங்களாதேஷ் பிரிவினையை ஏற்படுத்தியது. இங்கு இந்தியாவுக்கும், பிரிட்ஷ்க்கும் இடையில் ஏறக்குறைய ஒரே கொள்கைப் போக்குத்தான் காணப்படுகிறது. இது இந்தியாவின் மேலாதிக்கத்தை சரிவர அடையாளங் காணப் போதுமானது.

சார்க் அமைப்பின் திறவுகோல் இந்தியாவிடம் என இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா குறிப்பிட்டார். ஏனெனில் இந்தியாவிடம் போதிய வழங்களுண்டு, சந்தை வாய்ப்பு அதிகமாகவுள்ளது. அரசியல், இராணுவ பலம் அடிப்படையிலுண்டு. ஒரு பெரிய நாடு என்ற வகையில் ஒத்துழைப்பை ஏற்படுத்துவது இந்தியாவின் கையில்தானுண்டு. ஆனால் இந்தியா அதனை பயன்படுத்திக் கொண்டதாகத் தெரியவில்லை. அவ்வாறு இந்தியா விரும்பாமைக்கு தென்னாசிய நாடுகளது வளர்ச்சி தொடர்பான அச்சம் தான் காரணமாக அமைந்திருக்கலாம். ஒத்துழைப்பால் எல்லா நாடுகளும் பொருளாதார வளர்ச்சியடைந்தால் அல்லது இந்தியாவுக்கு சமதையாக வளர்ந்தால் பிராந்திய தலைமைக்கு அச்சுறுத்தல் ஏற்படலாமென இந்தியா நினைக்கிறது. அதை விடவும் இந்தியாவுக்கு சமபலமுடைய நாடு சார்க் அமைப்பில் இல்லாமையும் பிரதான குறைபாடாகும், அதாவது ஐரோப்பிய சமூகத்தை (EC) எடுத்துக்கொண்டால் ஏறக்குறைய எல்லா நாடுகளும் சமமான வளர்ச்சியைக் கொண்ட நாடுகளாக உள்ளன. இதனால் ஒரு நாடு முன்வைக்கும் கொள்கை பிழையெனக் கண்டால் பகிரங்கமாக நிராகரிக்கப்பட்டு மாற்றப்படும். ஆனால் சார்க் அமைப்பில் இந்தியாவின் கொள்கையை மாலைதீவு, பூட்டான் போன்ற நாடுகள் ஒரு போதும் நிராகரிக்காது. காரணம் இந்தியாவிலே இவை தங்கியிருக்கின்றன. அடுத்து சார்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பில் புதிய திட்டங்களுக்கான முதலீடுகள், பங்களிப்புகள் எல்லா நாடுகளினாலும் சமமாக வழங்க முடியாது. சார்க் அமைப்பில் இந்தியாவே முதலீட்டில் அதிக பங்கை வழங்க வேண்டியேற்படும். அதனால் இந்தியா தனது விருப்பத்துக்கு ஏற்ப செயற்பட விரும்புகிறது. ஐரோப்பிய சமூக அமைப்பில் அவ்வாறு செயற்பட முடியாத இறுக்கத் தன்மையுண்டு. 1991 ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த சார்க் மாநாடு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

சார்க் அமைப்பின் மாற்றங்கள் தொடர்பாக இரண்டு புள்ளிவிபரத் தொகுப்புக்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. பகுதி 1 இல் சார்க் நாடுகளுக்குள்ளேயே ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது. அவை சில குறிகாட்டிகளில் மட்டுமே அடையாளம் காட்டப்பட்டாலும் அவை நாட்டின் வளர்ச்சிக்கான பிரதான அம்சங்கள்.

| நாடுகள் | உள்நாட்டு உற்பத்தி 1987 ($) | உள்நாட்டு உற்பத்தி 1992 ($) | தலைக்குரிய தேசிய வருமானம் 1987 ($) | தலைக்குரிய தேசிய வருமானம் 1992 ($) |
|---|---|---|---|---|
| மாலைதீவு | 55 | 470 | 300 | 470 |
| பூட்டான் | 250 | 190 | 150 | 190 |
| இலங்கை | 6040 | 463 | 400 | 430 |
| நேபாளம் | 2560 | 160 | 160 | 170 |
| பாகிஸ்தான் | 31650 | 380 | 350 | 380 |
| வங்களாதேஷ் | 17600 | 208 | 160 | 179 |
| இந்தியா | 770830 | 350 | 300 | 350 |

பகுதி I: ஆதாரம்: பொருளியல் நோக்கு பெப்/மார் 1992.

இதன்படி 1985 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்வமைப்பு 1992 ஆம் ஆண்டு வரை பெரிய மாற்றம் எதனையும் அடையவில்லை. உள்நாட்டு உற்பத்தியில் பாரிய வீழ்ச்சியை இப்புள்ளிவிபரம் காட்டுகிறது. தலைக்குரிய தேசிய வருமானத்தில் எதிர்பார்த்த அல்லது ஒரு பொருளாதார ஒத்துழைப்பு நிறுவனத்திற்கிருக்க வேண்டிய அளவை எட்டவில்லை. இதே போன்று இதில் காட்டப்படாத சமூக குறிகாட்டிகளை எடுத்துக் கொண்டாலும் அதிக வளர்ச்சியடைந்ததாக இல்லை. அதாவது சிசுமரணம், எழுத்தறிவு வைத்திய வசதி, இதர நவீன தொழில் நுட்ப விடயங்களில் ஏற்படும் மாற்றங்கள் வளர்ச்சியடைந்ததாக இல்லை. எனவே பிராந்திய அபிவிருத்தியில் சர்ர்க் எதனையும் சாதிக்கவில்லை என்றே கூறலாம். மாறாக எல்லா நாடுகளின் தலைவர்களையும் சந்திப்பதற்கான வாய்ப்பைத் தான் ஏற்படுத்தியிருக்கிறது. அடிப்படையில் சிறிய மாற்றங்களை மட்டும் ஏற்படுத்தி வருகிறது. எனவே சார்க் அமைப்பின் கொள்கை கோட்பாடுகளில் மாற்றங்கள் செய்வதுடன் நடைமுறைப்படுத்துவதற்கான தெரிவுகளையும் கொண்டதாக ஆக்கப்பட வேண்டும்.

பகுதி 11 இல் ஏஷியான் அமைப்புடன் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஏனெனில் பிராந்திய ஒத்துழைப்பில் ஏஷியான் வெற்றி கண்டு வரும் அமைப்பாக உள்ளது. இது மூன்றாம் உலக நாடுகளில் வித்தியாசமான தன்மையைக் கொண்டது. இவற்றுடன் ஒப்பிடும் போதும் சார்க் அமைப்பின் குறைபாட்டைக் காணலாம். ஆனால் ஏஷியான் வளர்ச்சிக்கு பல வாய்ப்புக்கள் இருந்தது என்பதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுக்க முடியாது. இது நீண்டகால அமைப்பாகும். (1967) அத்துடன் அமெரிக்காவின் பின்னணியில் உருவான அமைப்பு, பனிப்போர்க் காலத்தில் மேற்குலகம் இரண்டு| சோஷலிஸ அணிக்குள்ளும் (சோவியற்யூனியன், சீனா) இப்பிராந்திய நாடுகள் உட்படாது தனிமையான நாடுகளாக்கவே அதிகம் விரும்பியது. அதற்காக பலகோடிக்கணக்கில் நிதியுதவிகளை வழங்கி வந்தது. ஆனால் இவ்வகையான உதவிகள் தென்னாசிய நாடுகளுக்கு கிடைக்கவில்லை என்பதல்ல. ஆனால் அந்நிதியினை சரிவரப் பயன்படுத்தப்படவில்லை என்பதே பிரதான குறைபாடாகும். தூரநோக்கு சிந்தனையற்ற கொள்கை வகுப்பாளரும், தலைமையும் தென்னாசிய நாடுகளது வளர்ச்சிக்கு தடைகளை ஏற்படுத்தியது என்று கூறலாம். மேலும் தென்னாசிய நாடுளுக்கு அரசியல் நெருக்கடிகள் அதிகம்பாதிப்புடையன எனக் கூறப்படுகிறது. ஆனால் அவை ஏஷியான் அமைப்புக்கு இல்லை என்றும் கூற முடியாது. மலேசியா – பிலிப்பைன்ஸ், மலேசியா, – இந்தோனேசியா, மலேசியா-தாய்லாந்து போன்ற நாடுகளுக்கிடையில் அதிக முரண்பாட்டைக் கொண்டிருக்கின்றன. சார்க் அமைப்பைப் போன்று இந்தோனேசியாவில் கிழக்கு திமோர் பிணக்கு மலேசியாவில் சீனர்களது பிரச்சினை, பிலிப்பைன்ஸில் மிண்டானோ இனத்தவர் பிரச்சினை, தாய்லாந்தில் புரட்சியாளர் பிரச்சினை என பல பிரச்சினைகளைக் கொண்ட நாடுகளாகத்தான் உள்ளன. ஆனால் இப் பிரச்சினைகள் பொருளாதாரத்துக்கான கொள்கைத் தீர்மானங்களை பாதிப்பதில்லை. அவ்வாறான பிரச்சினைகளை ஏஷியான் தவிர்க்கவே விரும்புகிறது. இவ்வாறு சார்க் அமைப்பு உணர்ந்து கொள்ளுமாயின் அதற்கான வளர்ச்சியில் மாற்றங்கள் நிச்சயம் ஏற்படும். இந்த வகையில் தான் பகுதி 11 சேர்க்கப்பட்டுள்ளது.

| நாடுகள் | | மொ. உ. உ (அமெரிக்க டொலர்) | ஆண்டுக்கான ஏற்றுமதி | சனத்தொகை (பத்துலட்சம்) | ச. வ. விகிதம் |
|---|---|---|---|---|---|
| பூட்டான் | | 190 | 0.07 (b) | 1.5 | 9.0 |
| இந்தியா | சார்க் | 350 | 19.3 (,,) | 845.7 | 5.0 |
| மாலைதீவு | | 470 | 0.06 (,,) | 0.2 | 10.8 |
| நேபாளம் | | 170 | 0.2 (,,) | 19.6 | 2.0 |
| பாகிஸ்தான் | | 380 | 6.1 (,,) | 115.6 | 5.6 |
| வங்களாதேஷ் | | 179 | 1.5 (,,) | 115.6 | 6.2 |
| இலங்கை | | 430 | 1.8 (,,) | 17.5 | 5.1 |
| புருணை | | 1700 | 1.9 (,) | 0.2 | 4.5 |
| இந்தோனேசியா | | 555 | 26.8 (,,) | 180.2 | 7.0 |
| மலேசியா | ஏ | 2305 | 29.1 (,,) | 18.4 | 10.0 |
| பிலிப்பைன்ஸ் | ஷி | 691 | 8,2 (,,) | 63.0 | 3.3 |
| சிங்கப்பூர் | யா | 11575 | 52.2 (,,) | 3.0 | 8.3 |
| தாய்லாந்து | ன் | 1418 | 20.3 (,,) | 56.3 | 10.0 |

பகுதி II Economic Review August 1992



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாசியா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே அரசியல் வரலாற்று முரண்பாடுகளினால் தென்னாசியா நாடுகளது பொருளாதாரம் பார்க்கப்படாது கையாளுதல் வேண்டும். ஏஷியான் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதுடன் தென்கிழக்காசிய நாடுகளுடன் பொருளாதாரத் தொடர்புகளை ஏற்படுத்தல் அவசியமானது. சார்க் அமைப்பு நாடுகள் அரசியல் விட்டுக்கொடுப்புகளை செய்தல் வேண்டும். புதிய சர்வதேச ஒழுங்கில் பிராந்திய கூட்டுக்கள் அவசியம் அதிகம் உணரப்பட்டுள்ளது. புதிய அரசியல் ஒழுங்கில் இந்தியா தனித்துவமாக செயல்பட முனைவது தவறானது. பிராந்திய ஒத்துழைப்பு அவசியமானது. இந்தியாவின் தனித்துவத்தை ஏனைய தென்னாசிய நாடுகள் புரிந்துகொள்ளுதல்வேண்டும். இந்தியாவும் பிராந்திய நலனைக் கருத்தில் கொண்டு செயல்படுதல் வேண்டும். அவ்வாறு செயல்படுவதே தென்னாசியாப் பிராந்தியத்துக்கு இலாபகரமானதாக அமையும். எனவே அரசியல் சார் பொருளாதார நோக்கு சார்க் அமைப்பின் வளர்ச்சியில் பிரதான மாற்றத்தை ஏற்படுத்தும்.

## உதவிய கட்டுரைகள்

1. P. Ramod. K. Mishra. South - Coperation and SAARC. STRATEGIC ANALYSIS. August 1989. Vol. XII No. V. Institute for Difference studies and Analyses, pp. 549 - 562

2. Christian Wagner. Regional Cooperation in South Asia. Review of the SAARC. AUSSEN POLITIK. German Foreign Affairs Review Vol. 44, 2/93. pp 81 - 190.

3. Ariya Abeyasinghe., Emerging Trade Alliances in Asean and Trade and Bank Opportunities Among the SAARC Countries, Economic Review August 1992. People's Bank publication, pp. 21 - 28, 33,

4. Mervyn De Silwa, Lessons of SAARC Non Summit, Lanka Guardian Vol. 4 No. 14, November 15th 1991 pp 2 - 3.

5. ஆரிய அபேசிங்க, சார்க் அமைப்பு, டாக்காவிலிருந்து கொழும்பு வரையில் 1985-1991. பொருளியல் நோக்கு, ஏப்ரல்/மே 1992. பக். 23-28.

6. வ. கணேசலிங்கம். தென்னாசிய பிராந்திய ஒத்துழைப்பின் ( சார்க் ) சாதனைகள் பற்றிய ஒரு மதிப்பீடு. மார்க்கம், தொகுதி 1, இல. 1 ஏப்ரல் 1992. பக். 26-32

7. வேணன், எல். பி. மெண்டிஸ்; ( தொகுப்பாசிரியர் ) தென்னாசியாவில் இந்தியாவின் பங்குபணிகள். எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா நினைவு மன்றம். 1992.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரம்பரையை மிஞ்சும் சூழல்

# Environment Winning Heridity

பொதுவாக மனித ஆளுமையினை உயிரியற் காரணிகள், பௌதீகசூழல், பண்பாடு, குழு அனுபவங்கள் அல்லது தனிப்பட்ட அனுபவங்கள், பயன்மதிப்புப் பண்புகள், உளவியல் போன்ற பல காரணிகள் நிர்ணயிப்பதாக கூறப்படுகின்றது. இவை யாவற்றையும் மரபு சூழல் என்ற இரண்டு விதமான வகைப்பாட்டினுள் வைத்து விளக்கமுடியும். ஆளுமை வேறுபாட்டிற்கு பரம்பரை காரணமா? சூழல் காரணமா? அவை இரண்டும் காரணமா? அப்படியாயின் இவற்றின் செல்வாக்கு எத்தகையது? என்பன போன்ற வினாக்களுக்கு விடை காணல் சமூகவியலாளர்கள் (Sociologist) உளவியலாளர்கள் (Psychologists) உயிரியலாளர்கள் (Biologists) மானிடவியலாளர்கள் (Anthropologists) ஆகியோரின் ஆய்வு மையமாக இருந்து வந்துள்ளது.

பரம்பரை:-

"ஒருவனது வளர்ச்சியுடன் இணைந்ததாக உருவ அமைப்பு, உடலியல் ரீதியான தகமைகள் (முடி, கண்மணியின் நிறம், தோலின் அமைப்பு) சில பரம்பரை நோய்கள் போன்றன எச்சங்களுக்கு அதன் பெற்றோரில் இருந்து வருகின்றன" (Shankar Rao, 1993) என்பது பாரம்பரியவியலறிஞர்களது கருத்தாகும். மெண்டலின் முடிவின் படி பெற்றோரின் இயல்புகள் எல்லாம் அதன் முதலாவது சந்ததியில் வெளிக்காட்டப்படும் என்ற நியதிஇல்லை. ஆனால் இவ்வியல்புகள் மூன்று நான்கு தலைமுறை கடந்தும் வெளிக்காட்டப்படலாம். ஒருவரின் பரம்பரை அமைப்பினுள் இரு எதிர் முரண் தன்மைகள் உள்ளடங்கி இருக்கலாம். உதாரணமாக தோலின் நிறம் கறுப்பாக வருவதற்குரிய காரணியும் வெள்ளையாக அமைவதற்குரிய காரணியும் ஒருவரது பரம்பரை அமைப்பினுள்ளே அமைந்து இருக்கலாம். இவ்வாறான நிலையிலே இவற்றுள் ஆட்சியானதன் இயல்பு வெளிக்காட்டப்பட பின்னடைவானதன் இயல்பு உள்ளே அடங்கி இருக்கும் என்பது அவரது கோட்பாடு.

மக்டுகல் எனும் உளவியலாளர் தனது சமூக உளவியல் (Social Psychology) என்ற நூலில் ஒருவனது சிந்தனைகளும் செயற்பாடுகளும் பிறப்புரிமை இயல்பூக்கங்களின் விளைவே என்கின்றார். தெக்காட்டே (Rene descartes) அறிவைப் பெறுகின்ற அடிப்படை ஒருவர் பிறக்கும்போதே அவருடன் சேர்ந்து பிறக்கின்றது என்கின்றார். பிரான்சிஸ் கல்றன் (Francis Galton 1872 - 1911) தனது "Hereditary Genius" எனும் நூலில் மனித ஆளுமைக்கு மரபினை முதன்மைப்படுத்துகின்றார். (Shankar Rao 1993)

சூழல்:-

பிற்காலத்து அறிஞர்கள் பலரும் பாரம்பரியவியலாளர்களின் கருத்துடன் பெரிதும் முரண்படுவதனைக் காணக்கூடியதாக உள்ளது. அதாவது பெற்றோரின் இயல்புகளை பிள்ளைகள் பிரதிபலிப்பதற்குக் காரணம் குழந்தைகளுக்கு அவற்றின் ஆரம்பகால

ச. கிருபானந்தன்,
சமூகவியல்,
3ம் வருடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமைவிருத்தியின் பெரும்பகுதி பெற்றோரின் சூழலாக அமைந்துவிடுவதேயாகும் என்கின்றனர். யோன்லொக் (Lock) மனிதன் பிறக்கும்போது அவனது மனம் ஒரு வெற்றுப்பலகை போன்று வெறுமையாக இருக்கும் எனவும் சூழற்காரணிகளின் தாக்கத்தினாலேயே அதில் பதிவுகள் தோன்றுகின்றன எனவும் விளக்குகின்றார். சிறில்பேக் (W. Cyrilburgh) டி. கண்டோல் (De Candolle) ஆகியோர் அறிவுத்திறன் என்பது சூழலின் வழியேதான் ஏற்படும் எனவும், சூழலை மாற்றி அமைப்பதன் மூலம் ஒரு மோசமான குடும்பத்தைக் கூட மாற்ற முடியும் எனவும் கூறுகின்றார்.

''ஒருவன் பிறந்ததிலிருந்து அவன் பிறந்த இடத்தில் இருக்கும் வழக்கங்கள் அவனது அனுபவங்களையும் நடத்தைகளையும் உருவாக்குகின்றன. அவன் பேச ஆரம்பிக்கும்போது அவனுடைய பண்பாட்டின் ஓர் உயிரியாக அவன் இருக்கின்றான். அப்பண்பாட்டின் பழக்கங்களே அவனது பழக்கங்களாகி விடுகின்றன. அதன் நம்பிக்கையே அவனது நம்பிக்கையாகவும் அச்சமூகம் இயலாது எனக் கருதுபவை அவனுக்கு இயலாததாகவும் அமைந்து விடுகின்றன.'' (ருத்பெனிடிக்ற் 1964) இச்சூழற் காரணிகளே ஒருவனிடத்தில் தாராண்மை (liberal) தன்மை அல்லது அடித்தளமாற்று (Redical) தன்மை, சிந்தனையினை தூண்டுகின்றது. (Watson 1966)

சமூக அடிப்படையில் எழும் மனவெழுச்சிவயப்பட்ட எண்ணங்களின் தொகுப்பான பயன்மதிப்புக்கள் ஒருவனது ஆளுமையில் செல்வாக்கு செலுத்துவதனை ஆராய்ச்சியாளர்கள் வலியுறுத்துகின்றார்கள். ''பயன் மதிப்புக்களே ஒருவனது நடத்தையில் செல்வாக்கு செலுத்தும் பிரதான காரணியாக அமைகின்றது'' (அப்துல் கரீம் 1975) என்கின்றார் (White head). பயன் மதிப்புக்கள் ஆளுமைத் தன்மைகளுடன் ஒருமுகப்படுத்தப்பட்டு ஒன்றிணைக்கப்பட்டபின் அப்பயன் மதிப்புக்கள் எதிர்மாறானதாக மாறுமாயின் அவை ஒருவனது வளர்ச்சியினைத் தடை செய்யும் காரணியாக அமைந்து விடுகின்றன.

குடும்ப சூழலிலோ அல்லது சமூக சூழலிலோ குழந்தைகள், சிறுவர், சிறுமியர், வயது வந்தவர்கள், முதியவர்கள் ஆகிய எல்லோரது அந்தஸ்துக்களும் ஒரேவகையாக அமைவதில்லை. இந்த வேறுபாட்டின் காரணமாக ''ஒருவனுடைய மனோபாவம் (temparament) நடத்தைப்பாங்கு (attitudes) சார்புப் பண்பு (Tendencies) சிந்தனை முறைகள், விருப்பு வெறுப்பு செயற்பாடுகள் என்பன நடிபங்கிற்கு ஏற்ப வேறுபட்டு அமைகின்றன. (Watson 1966)

குழந்தைப் பருவத்தில் சூழலில் ஏற்படும் நிகழ்வுகள், மாற்றங்கள், அனுபவங்கள் என்பன ஒருவரது ஆளுமையின் பெரும்பங்கினை வகிக்கின்றன என்கின்றார் பிராய்ட் (Freud) குறிப்பாக முதல் ஆறு வருடங்களுக்குள் ஏற்படும் அனுபவங்கள் தாக்கங்கள் என்பன அவரது வாழ்க்கை முழுவதும் தங்கி இருந்து அவரது ஆளுமை விருத்தியில் நேராகவோ அல்லது எதிராகவோ அழுத்தத்தினைச் செலுத்திக்கொண்டிருக்கும் என்கின்றார். இதனை உளவியல் ரீதியான பாலியற் பருவங்கள் என ஐந்தாகப் பகுத்து ஒவ்வொரு பருவத்திலும் சூழலின் தாக்கம் எந்த வகையில் ஆளுமையில் செல்வாக்கு செலுத்துகின்றது என விளக்குகின்றார்.

சூழலானது குழந்தை பிறக்கு முன்பே (கருத்தரித்ததிலிருந்து) அதனைப் பாதிக்கின்றது. பிறந்த பின்பும் அதன் ஒவ்வொரு வளர்ச்சிப் பருவத்திலும் இச்சூழலின் தாக்கம் மாறுபட்டுக் கொண்டும் தொடர்ச்சியானதாகவும் சென்று கொண்டிருக்கும் சூழலின் தாக்கத்தினால் அகஞ்சுரக்கும் தொகுதியின் சுரப்பில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக கபச்சுரப்பியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்பாட்டால் உயர், குறழ், பருமன், மெலிவு போன்ற மாற்றங்நள் ஏற்படுகின் றன. மேலும் தட்பவெப்ப புவியியல் சூழல், குடும்ப சூழல், பாடசாலை, சகபாடி கள், நிறுவனங்கள், செய்தித்தொடர்புச் சாதனங்கள் போன்ற பல வகையிலும் சூழல் மனிதனில் செல்வாக்கு செலுத்துகின்றது. ஒத்த இரட்டையர்கள் ஒரே பரம்பரை அமைப்பினைக் கொண்டிருப்பினும் அவர்க ளிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. எனவே பாரம்பரியம் மட்டுமே ஒருவரது நடத்தையினை தீர்மானிக்கின்றது என்ற கருத்து முரண்படுகின்றது. எனவே இவ் வேறுபாட்டிற்கு சிக்கலாக அமைந்த சூழலே காரணம் எனலாம்.

பரம்பரை இயல்புகளை மாற்றும் சூழல்:

ஒக்போனும் (Ogburn) நிம்கோவும் (Nimkoff) பண்பாடு அல்லது சமூக சூழலே அனேகமான வேறுபட்ட ஆளுமைக்கு வாய்ப் பினைக் கொடுக்கின்றது என்கின்றனர். பாரம்பரியவியலில் பாரம்பரிய மாறல் என் னும் ஒரு விடயம் பேசப்படுகின்றது. பரம் பரை அமைப்பின் வழி இயங்கும் உயிரியில் சூழலின் தாக்கத்தால் ஏற்படும் மாற்றங் கள் எல்லாம் அதன் சந்ததிக்குக் கடத்தப் படுவதில்லை. உதாரணமாக விபத்தில் அங் கம் இழந்த ஒருவரது (அதன்பின் கருத்த ரித்த) பிள்ளை அங்கவீனமாக பிறப்ப தில்லை. ஆனால் சில சந்தர்ப்பங்களில் சூழலின் செல்வாக்கினால் பரம்பரை அமைப்பில் விகாரங்கள் அல்லது மாற்றங் கள் ஏற்படுகின்றன. இவ்வாறான சந்தர்ப் பங்களில் சந்ததி அப்புதிய இயல்பைப் பெறும். இதன் அடிப்படையிலேயே பரிணா மக் கொள்கை கூர்ப்புக் கொள்கை என்பன அமைகின்றன. எனவே ஒரு உயிரியின் பாரம்பரியத்தையே சூழல் மாற்றும் தன்மை வாய்ந்தது எனலாம். இவ்விடத்தில் (lysenco) லைசென்கோ என்பவரின் ''சூழற் காரணிகள் பாரம்பரிய இயல்புகளைக் கூட மாற்றும் தன்மை வாய்ந்தன'' என்ற கூற்று பொருத்தமாக அமைகின்றன.

பரம்பரை காரணிகளை முதன்மைப் படுத்துபவர்களும் பரம்பரை இயல்புகள் வெளிக்காட்டப்படுவதற்கு ஏற்ற சூழல் அவ சியமானதாக அமைதல் வேண்டும் எனவும் பொருத்தமான சூழல் அமையாத விடத்து அவ்வியல்புகள் வெளிக்காட்டப்படாது உள்ளே அடங்கி இருக்கும் எனவும் கூறு வதன் மூலம் சூழற் காரணிகளின் செல்வாக் கினை வலியுறுத்துவதனைக் காணலாம். ஆக பரம்பரைக் காரணிகளின் செல்வாக்கு இருந்தாலுங் கூட அதனை வளர்த்தெடுத் தல், வெளிக்காட்டப்படாது உள்ளே அடங் கியதாக இருக்கச் செய்தல், பரம்பரை அமைப்பிலேயே மாற்றத்தினை (விகாரம்) ஏற்படுதல் போன்ற பல வகையிலும் சூழல் மரபினை மிஞ்சிய ஒன்றாகவே அமைந்து விடுகின்றது. □

உசாத்துணை நூல்கள்

1. Shankar Rao - C. N - Sociology S. Chand & Company Ltd, 1993.
2. Good win Watson - Social Psychology) J. B. Lippincott Company New York 1966.
3. அப்துல்கரீம் - அ - இளையோர் உளவியல், தமிழ்நாடு 1975.
4. ரூத்பெளிடிக் – பண்பாட்டு கோலங்கள், தமிழ்நாட்டு வெளியீட்டு கழகம். 1964.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச வர்த்தகமும் வர்த்தகக் கொள்கைகளும்

# International Trade and Commercial Policies

வர்த்தகமானது பொருளாதார வளர்ச்சியைத் தூண்டும் ஒரு காரணியாக அமைவதால், வர்த்தகம் உலகில் முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. பின்வரும் வரைபடமானது உலக வர்த்தக பாய்ச்சலைக் காட்டி நிற்கின்றது. 1989 ஆம் ஆண்டு ஐரோப்பிய சமூகத்திலும் ஆசிய பசுபிக்கிலும், வட அமெரிக்காவிலும், உலகின் ஏனைய நாடுகளிலும் 3120 மில்லியன் (bn) பெறுமதியான பொருட்கள் சேவைகள் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. (பார்க்க இரட்டடிப்புப் படம்)

இன்று சர்வதேச வர்த்தகம், சுதந்திர வர்த்தகம் நோக்கி சென்று கொண்டிருக்கிறது. ஆனாலும் நடைமுறையில், சர்வதேச வர்த்தக சுற்றோட்டத்தில் சில காரணிகள் தடையை ஏற்படுத்துவதாக அமைகின்றன. இத்தடைகள் ஒவ்வொரு நாட்டினதும் நலன் நோக்கியே ஏற்படுத்தப்படுகின்றன. சர்வதேச வர்த்தக சுற்றோட்டத்தில் தடையை ஏற்படுத்துவதற்கு அரசால் மேற்கொள்ளப்படும் ஒழுங்குகளே 'வர்த்தகக் கொள்கைகள்' ஆகும். வர்த்தகக் கொள்கைகள் என்ற பகுதியினை தீர்வைகள் (Tariff) தீர்வையற்ற தடைகள் (Nontariff Barriers) என இரண்டாகப் பிரித்து நோக்கலாம்.

செல்வி கலைச்செல்வி ஜெயசீலன்,
விரிவுரையாளர் ([redacted],
பொருளியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்.

தீர்வைகள்:
(Tariff)

ஒரு நாட்டின் எல்லையைக் கடந்து, வேறொரு நாட்டிற்கு பொருட்கள் சேவைகள் பரிமாறப்படும் போது விதிக்கப்படும் வரியினை 'தீர்வை' எனலாம். இன்று சர்வதேச வர்த்தக சுற்றோட்டத்தில் இத்தீர்வை முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் மீது விதிக்கப்படும் தீர்வை இறக்குமதித் தீர்வை எனவும், ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் மீது விதிக்கப்படும் தீர்வை ஏற்றுமதித் தீர்வை எனவும் அழைக்கப்படும். இத்தீர்வைகள் பின்வரும் வடிவங்களிலும் விதிக்கப்படலாம். அவையாவன:

1. பெறுமான விகித வரி:
(Advalorem tariff)

வர்த்தகத்தில் இடம் பெறும் பொருட்களின் பெறுமதியில் குறித்த வீதத்தினை வரியாக அறவிடுவதனைக் குறிக்கின்றது.

2. அலகு வரி:
(Specific tariff)

வர்த்தகத்தில் இடம்பெறும் பொருட்களின் அலகு ஒன்றிற்கு விதிக்கப்படும் வரியினைக் குறிக்கின்றது.

3. இணைந்த வரி:
(Compound tariff)

வர்த்தகத்தில் இடம்பெறும் பொருட்களின் அலகிற்கும் பெறுமதிக்கும் சேர்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிக்கப்படும் வரியினைக் குறிக்கின்றது. எனவே இவ்வரியினுள் பெறுமான விகித வரி, அலகுவரி என்பன அடங்குகின்றன.

### தீர்வைகளின் விளைவுகள்:

சர்வதேச வர்த்தகத்தில் இடம்பெறும் பொருட்கள் மீது தீர்வைகள் விதிக்கப்படுகின்றது. அவ்வாறு தீர்வைகளை விதிக்கும் போது பல விளைவுகள் ஏற்படுகின்றன.

உதாரணமாக உலக விலையானது குறிப்பிட்டளவுள்ளது என்றும், அவ்விலையில் எவ்வளவு பொருட்களையும் நிரம்பல் செய்யக்கூடிய நிலையுள்ளதென்றும் கொள்வோம். குறிப்பிட்ட நாடொன்றில் மேற்குறித்த உலகவிலையில் நிரம்பல் குறைவாகவும், கேள்வி அதிகமாகவும் காணப்படுகிறது. எனவே இந்த மிகைக் கேள்வியினை நிவர்த்தி செய்ய வேண்டுமாயின் வெளிநாட்டிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டும். பொருட்கள் இறக்குமதி செய்யப்படும்போது, அவற்றின் மீது தீர்வை விதிக்கப்படும். ஆதலால் அப்போது உலக விலையுடன் தீர்வையும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கும். இதனால் உள்நாட்டு விலையானது உயர்வடையும். இந்நிலையில் பல விளைவுகள் ஏற்படும்.

உள்நாட்டு விலையானது உயர்வடையும் போது, குறிப்பிட்ட நாட்டின் உற்பத்தி அளவு அதிகரிக்கும். குறிப்பிட்ட நாட்டின் உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பு உற்பத்தி விளைவு (Production Effect) எனப்படும். தீர்வை விதிக்கப்பட முன்னருள்ள கேள்வியின் அளவானது தீர்வை விதித்ததன் பின்னர் விலை உயர்வடைந்தமையால் குறைவடையும். குறிப்பிட்ட நாட்டின் நுகர்வில் ஏற்படும் குறைவு நுகர்வு விளைவு (Consumption effect) எனப்படும். இறக்குமதிப் பொருட்களின் மீது இறக்குமதித் தீர்வை விதிப்பதன் மூலம், குறிப்பிட்ட நாடு வருமானத்தினைப் பெறலாம். இறக்குமதி செய்யப்படும் தொகையினை இறக்குமதித் தீர்வையின் அளவினால் பெருக்குவதன் மூலம் வருமானத்தினை அளவிடலாம். எனவே தீர்வை விதிக்கப்பட்டதன் பின்னர் இறக்குமதியின் அளவினை, இறக்குமதித் தீர்வையினால் பெருக்கி வருவதே வருமானவிளைவு (revenue effect) எனப்படும். தீர்வை விதிக்கப்படும் போது நுகர்வோரிடமிருந்து வருமானமானது வாடகை என்ற வடிவில் உற்பத்தியாளரால் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. நுகர்வோன் மிகையானது, நுகர்வோரிடமிருந்து உற்பத்தியாளருக்கு மாற்றப்படுவதே மறுபங்கீட்டு விளைவு (Radistribution effect) எனப்படும். தீர்வை விதிககப்படும்போது உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பதுடன் நுகர்வின் அளவும் குறைகின்றது. உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்புடன் நுகர்வு அளவுக் குறைப்பினையும் சேர்த்து வருவதே, வர்த்தக விளைவு (Trade effect) எனப்படும். தீர்வை விதிக்கப்படும் போது உள நாட்டில் விலை உயர்வடைவதால் நுகர்வோன் மிகை இழக்கப்படுகின்றது. இழக்கப்படும் நுகர்வோன் மிகையில் ஒருபகுதி உற்பத்தியாளர் மிகையாகவும், இன்னொரு பகுதி அரச வருமானமாகவும் குறிப்பிட்ட நாட்டினுள்ளே மாற்றப்படுகிறது. ஆனாலும் நுகர்வோன் மிகை உற்பத்தியாளா மிகையாகவும், அரசவருமானமாகவும் மாறினாலும எஞ்சிய நுகர்வோன் மிகை சமூகத்திற்கு ஏற்படும் இழப்பாக (Protection Cost or Deadweight Loss) உள்ளது. அதாவது விலை உயர்வடைவதால் குறிப்பிட்ட நாடு தனது உற்பத்திக் காரணிகளை வினைத்திறன் கூடிய உற்பத்தியிலிருந்து வினைத்திறன் குறைந்த உற்பத்திக்கு மாற்றுவதனால் செலவு அதிகரிக்கும். அதேவேளை நுகர்வோரைப் பொறுத்தவரையில் விலையுயர்வும் அதன்வழி நுகர்வு அளவு குறைப்பும் அவர்களது திருப்தியில் இழப்பை ஏற்படுத்துகிறது. எனவே இழக்கப்பட்ட நுகர்வோன் மிகை உற்பத்தியாளர் மிகையாகவும், வருமானமாகவும் மாறிய பின்னருள்ள எஞ்சிய பகுதியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித்த செலவும் திருப்தியில் ஏற்பட்ட இழப்புமாகும். எனவே அதிகரித்த செலவும் திருப்தியில் ஏற்பட்ட இழப்புமே சமூகத்திற்கு ஏற்பட்ட செலவு ஆகும்.

இவ்வாறாக சர்வதேச வர்த்தகத்தில் நாடுகளின் நலன்கருதி பாதுகாப்பு, உள்ளூர் உற்பத்தி, கேள்வியை முகாமை செய்தல் வருமானம் திரட்டல் போன்ற நோக்குகளுடன் தீர்வை விதிக்கப்பட்டாலும் கூட இறுதியில் அத்தீர்வைகள் சமூக நலனிற்கு கேடு விளைவிப்பதாகவே அமைகின்றன. இந்நிலையில்தான் தீர்வைக்கு எதிரான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. நவீன பழம் பொருளியலாளர்கள் சர்வதேச வர்த்தகம் திறந்த வர்த்தகமாகவே இருக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தி வருகின்றார்கள். உலக வர்த்தகத்தில் ஆதிக்கம் செலுத்தும் சர்வதேச நிறுவனங்களின் முதன்மையான நிறுவனமான, ஐக்கிய நாடுகள் வர்த்தகத்திற்கும் அபிவிருத்திக்குமான மாநாடு (UNCTAD - United Nations Conference On Trade and Development) 1964 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இது வளர்முக நாடுகளின் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண விளைகின்றது. இதன் முக்கிய செயற்பாடாக சர்வதேச வர்த்தக விலைகளை உறுதிப்படுத்துவதனை பிரதான நோக்கமாகக் கொண்டும், மூன்றாம் உலக நாடுகளுக்கு நியாயமான வருமானத்தைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் ஒருங்கிணைந்த செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இந்நோக்கத்தினை அடையும் வகையில் பல கூட்டத் தொடர்களை (Sessions) நான்கு வருடங்களுக்கு ஒரு முறை பல்வேறு தலை நகரங்களில் நடத்தி வருகின்றது.

வர்த்தக ரீதியான தீர்வைகளைக் குறைக்கவும், அவை தொடர்பான ஏனைய தடைகளை அகற்றுவதற்கும், வர்த்தகத்துக்கும் தீர்வைக்குமான பொது ஒப்பந்தம் (GATT – General Agreement On Tariff and Trade) 1947 இல் ஜெனீவாவில் உருவாக்கப்பட்டது. பல்பக்க வியாபார முறைமையின் காப்பாளனாக வர்த்தகப் பங்காளரைச் சமனாக மதிப்பளிக்கும் நிறுவனமாக இது செயற்படுகிறது. காலத்துக்கு காலம் பலபக்க வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் (Multlateral trade negotrations) இதனால் ஒழுங்கு செய்யப்பட்டன. இவை பொதுவாக சுற்றுப்பேச்சுக்கள் (Rounds) எனப்படும். இதனால் ஒழுங்கு செய்யப்பட்ட சுற்றுப் பேச்சுக்கள் 1947 இல் ஜெனீவாவிலும் (Geneva) 1948 இல் அனெசியிலும் (Annecy) 1950 இல் ரோகேயிலும் (Torquay), 1956 இல் ஜெனீவாவிலும் (Geneva), 1960 – 61 காலப்பகுதியில் டிலனிலும் (Dillon), 1964 – 67 காலப்பகுதியில் கெனடியிலும் (Kennedy), 1973 – 79 காலப்பகுதியில் டோக்கியோவிலும் (Tokyo) 1986 லிருந்து உருகுவேயிலும் (Uruguay) நடைபெற்றது.

1967 இல் நடைபெற்ற கென்னடி சுற்றுப் பேச்சில், கைத்தொழிற் பொருட்களின் மீதான சராசரி தீர்வையின் அளவு குறைக்கப்பட்டது. 1979 இல் டோக்கியோ சுற்றுப் பேச்சில் வளர்முக நாடுகளுக்கேற்ப தீர்வை நடைமுறைபற்றி ஆராயப்பட்டது. 1980 லிருந்து எட்டு வருடங்களுக்கு விவசாய கைத்தொழிற் பொருட்களுக்குத் தீர்வைக்குறைப்புச் செய்ய ஒப்புக் கொள்ளப்பட்டது. 1986 இல் உருகுவே சுற்றுப் பேச்சில், வர்த்தகத்தில் தொடர்ந்தேர்ச்சியாக இருந்துவரும் சிக்கலான நிலைமைகளை மாற்றியமைப்பது பற்றிப் பேசப்பட்டது. அத்துடன் வர்த்தகம் தாராளமயமாக்கல் பற்றியும் ஒத்துழைப்பினைப் பலப்படுத்துவது பற்றியும் ஆராயப்பட்டது. இச்சுற்றுப் பேச்சில் புதிய அம்சங்களாக வர்த்தகம் சார்ந்த புலமை சார் சொத்துரிமையும் (Trade – related intellectural Property rights - Trips), வர்த்தகம் சார்ந்த முதலீட்டு முறைமையும் (Trade related Investment Measures – TRIMS) சேவையில் வர்த்தகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீதான பொது ஒப்பந்தமும் (General Agreement On Trade In Services - GATS சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இந்த அமைப்பானது தற்போது 'உலக வர்த்தக அமைப்பு' (World Trade Organizations) என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறாக தீர்வைக்கு எதிரான கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட போது, சர்வதேச வர்த்தகத்தில் தீர்வையற்ற தடைகளின் ( Nontariff Barriers ) பங்கு அதிகரித்து வருவதனை காணமுடிகிறது. அதே வேளை தீர்வை பாதுகாப்பின் அவசியத்தை வலியுறுத்தும் வாதங்கள் இடம் பெறாமல் அல்ல. அதில் இளந்தொழில் பாதுகாப்பு ( The Infant - Industry Argument for Protections) முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. இதன்படி, இளந்தொழில் வளர வேண்டுமாயின் அதனை ஏற்கனவே வளர்ச்சியடைந்த நாடுகளுடைய தொழில்களின் போட்டிகளிலிருந்து பாதுகாப்பு கொடுப்பதற்காக தீர்வையினை விதிக்க வேண்டுமென்று கூறப்படுகிறது. குறிப்பிட்ட தொழிலானது, ஏனைய நாட்டு தொழில்களுடன் போட்டி போடக் கூடிய நிலை வரும் வரைக்கும் அத்தீர்வை தொடர்ந்து இருத்தல் வேண்டும். தீர்வையினை நீக்கிய பின்னர் குறிப்பிட்ட தொழிலாளனது ஏனைய நாட்டுத் தொழிலுடன் போட்டிபோடக்கூடிய திறனைப் பெற்றிருக்க வேண்டும்.

ஆனால் இவ்வாறான இளந்தொழில் வாதக் கருத்தினை எதிர்க்கும் பொருளியலாளரும் உண்டு. உதாரணமாக கின்டில் பேகரின் கருத்துப்படி, உள்நாட்டுத் தொழிலுக்கு வெளிநாட்டுப் போட்டியிலிருந்து பாதுகாப்பதற்கு தீர்வை விதிக்கப்படும் போது அத்தொழிலானது தேக்க முடையதாகவும், சோம்பேறித்தன முடைய தாகவும் மாறும் என கூறுகின்றார். எனவே இந்நோக்கத்திற்காக தீர்வையினை விதிப்பது பாதக விளைவினை ஏற்படுத்தும் எனக் கூறியுள்ளனர்.

## தீர்வையற்ற தடைகள்
## ( Non Tariff barriers )

சர்வதேச வர்த்தக சுற்றோட்டத்தில், தீர்வையல்லாத காரணிகள் தடையை ஏற்படுத்துமாயின், அவையே 'தீர்வையற்ற தடைகள்' ஆகும். அத் தீர்வையற்ற தடைகள் பல வழிகளில் ஏற்படலாம். அவை பின்வருமாறு;

### 1. அனுமதிப்பங்கு ( Quotas )

தீர்வையற்ற தடைகளின் அனுமதிப் பங்கு மிகவும் முக்கியமானது. இது நேரடியாக வர்த்தகத்தில் தொகை ரீதியான தடையை ஏற்படுத்துகின்றது. அதாவது குறிப்பிட்டளவு பொருட்கள் ஏற்றுமதி செய்யவும், இறக்குமதி செய்யவும் அனுமதிக்கிறது. இதில் ஏற்றுமதி அனுமதிப் பங்கினைவிட, இறக்குமதி அனுமதிப்பங்கு முக்கியமானதாகக் காணப்படுகிறது. இறக்குமதி அனுமதிப்பங்கு முறையானது, ஓர் நாட்டினது கைத்தொழிலைப் பாதுகாக்கவோ, விவசாயத்தைப் பாதுகாக்கவோ, சென்மதி நிலுவையினைப் பாதுகாக்கவோ பயன்படுத்தப்படலாம். இரண்டாவது உலக யுத்தத்தின் பின், மேற்கத்தேய ஐரோப்பாவில் இறக்குமதி அனுமதிப்பங்கு பொதுவானதாக இருந்துள்ளது. இன்று கைத்தொழில் நாடுகள் தங்கள் விவசாயத்தினைப் பாதுகாக்கவும் வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் இறக்குமதிப் பதிலீட்டினை ஊக்குவிக்கவும் சென்மதி நிலுவை பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், இறக்குமதி அனுமதிப்பங்கினை பயன்படுத்தி வருகின்றன.

ஒரு நாடானது, குறிப்பிட்ட கேள்வி, நிரம்பல் நிலைமைகளில் மிகைக் கேள்வி காணப்படும்போது, அம்மிகைக் கேள்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினை இறக்குமதி செய்வதன் மூலம் நிவர்த்தி செய்யலாம். இந் நிலையில் குறிப்பிட்ட நாடானது இறக்குமதி அனுமதிப் பங்கு முறையினை கையாண்டால் மிகைக் கேள்வி முழுவதனையும் இறக்குமதி செய்ய முடியாது. அதேவேளை இறக்குமதி அனுமதிப்பங்கினால், உள்ளூரில் குறிப்பிட்ட பொருளின் விலை உயர்வடையும், காரணம் இறக்குமதி செய்யப்படும் பொருள்மீது தீர்வை விதிக்கப்படுவதனாலாகும். இந் நிலையில் குறிப்பிட்ட நாடு இறக்குமதி அமைதிப்பங்கினை கையாளும் போது ஏற்படும் தாக்கம் யாதெனில், உள்ளூர் உற்பத்தி அதே வேளை நுகர்வின் அளவு குறைவடைகின்றது. இதனால் குறிப்பிட்ட நாடானது உள்ளூர் உற்பத்தியினைப் பாதுகாப்பதுடன், இறக்குமதியின் அளவினைக் குறைப்பதனால் சென்மதி நிலுவை பிரச்சினையினின்றும் விலக முடிகின்றது.

## 2. தன்னியல்பான ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் ( Voluntary Export Restraints )

ஓர் இறக்குமதி நாடு, இன்னொரு நாட்டினது ஏற்றுமதிகளை தானாகவே முன் வந்து குறைத்துக் கொள்ளுமாறு கோருதலை, ' தன்னியல்பான ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் ' எனலாம். எங்கும் உயர்ந்தளவிலான வர்த்தகக் கட்டுப்பாடுகள் காணப்படும் போது முழு உள்நாட்டு உற்பத்தியும் பாதிக்கக் கூடிய நிலை இருக்குமாயின் இவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம். 1950 களில், தன்னியல்பான ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் ஐக்கிய அமெரிக்காவினால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. ஜப்பானின் ஆடைத் தொழில் மீது முதன் முதலாக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு பின்னர் உருக்கு, பாதணி, ஏனைய உற்பத்திகள் என்பவற்றுடன் உலகின் ஏனைய நாடுகளுக்கும் நீடிக்கப்பட்டது. சில வேளைகளில், இது சந்தைப்படுத்தல் கட்டளைகளை ஒழுங்காக்கல் எனவும் அழைக்கப்படுகிறது. இவ்வாறான தன்னியல்பான ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஐக்கிய அமெரிக்காவையும், ஏனைய கைத்தொழில் நாடுகளையும் தொடர்ந்தும் சுதந்திர வர்த்தகத்தின் ஆதரவாளர் என்ற தோற்றப்பாட்டை உலகுக்கு உணர்த்த ஒரு கருவியாக அமைந்தன.

இவ்வாறான தன்னியல்பான ஏற்றுமதிக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் வெற்றிகரமாக அமையும் போது, அது இதற்குச் சமனான இறக்குமதி அமைதிப்பங்கினை எல்லா வழிகளிலும் ஒத்திருக்கும். ஆயினும் வருமான விளைவு ( Revenue Effect ) தவிர்க்கப்பட்டிருக்கும். இந்த வருமான விளைவினை வெளிநாட்டு நிரம்பலாளர்கள் விலைகளை உயர்த்துவதனூடாக பெற முயற்சிப்பார்கள். தன்னியல்பான ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் இறக்குமதிகளைக் குறைக்கும் செயற்பாட்டில் இறக்குமதி அனுமதிப்பங்கை விட குறைந்த செயற்திறன் வாய்ந்ததாகும். ஏனெனில் தன்னியல்பான ஏற்றுமதி கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஏற்றுமதி நாடுகளாலேயே மேற்கொள்ளப்படுவதுடன் இவை தமது ஏற்றுமதிகளை விருப்பமற்ற நிலையிலேயே குறைத்துக் கொள்கின்றனர். மேலும் இந்தக் கட்டுப்பாட்டு நடவடிக்கை பிரதான ஏற்றுமதி நாடுகளையே கருத்தில் கொள்வதால், இந்நாடுகள் தமது ஏற்றுமதியில் குறைத்துக் கொள்ளும் அளவினை வேறு சிறிய ஏற்றுமதியாளர் நாடுகள் பூர்த்தி செய்ய முயலலாம். அதே சமயம் வேறு நாட்டின் ஊடாகவும் பிரதான ஏற்றுமதியாளர் நாடுகள் நிரம்பலை மேற் கொள்ள முயலலாம்.

## 3. தொழில் நுட்ப, நிர்வாக, மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள்: (Technical, Administrative and Other Regulations )

சர்வதேச வர்த்தகத்தில் தொழில் நுட்ப நிர்வாக மற்றும் ஏனைய ஒழுங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிகளும் தடையை ஏற்படுத்துகின்றன. இவற்றுள் மோட்டார் வண்டி, மின்சார உபகரணங்களிற்கான பாதுகாப்பு ஒழுங்கு விதிகளும், உடல் ஆரோக்கியத்தை பேணும் உற்பத்திக்கும் ( Hygienic production ) இறக்குமதி செய்யப்படும் உணவு உற்பத்தியின் பொதியிடலுக்குமான சுகாதார ஒழுங்கு விதிகளும், உற்பத்தி இடத்தினையும் உள்ளடக்கங்களையும் காட்டுவதற்கான முத்திரை பதிக்கும் தேவையும் ( Labeling require ments ) உள்ளடங்கும். ஆனாலும் இந்த ஒழுங்கு விதிகளில் பல சட்ட சம்பந்தமான நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகிறது. சில இறக்குமதிகளில் தடையை ஏற்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுகிறது.

ஏனைய வர்த்தகத் தடைகள், அரசாங்கம் உள்நாட்டு நிரம்பலாளரிடமிருந்து கொள்வனவு செய்யும்போது தேவையேற்படும் சட்டங்களுக்கேற்ப தோற்றம் பெறுகிறது. உதாரணமாக, 1933 இல் பிரகடனப்படுத்தப்பட்ட அமெரிக்கன் கொள்வனவு சட்டத்தின்படி ( Buy American Act ) ஐக்கிய அமெரிக்க அரசாங்க பிரதிநிதிகள் உள்ளூர் நிரம்பலாளருக்கு 12% வரையிலான விலையுயர்வினை வழங்கினர். வர்த்தக தாராளமயமாக்கலின் டோக்கியோ சுற்றுப் பேச்சின் ஒரு பகுதியில் ஐக்கிய அமெரிக்காவும் ஏனைய நாடுகளும் இந்த நடைமுறையினையும், ஒழுங்கு விதிகளையும் திறந்த ரீதியில் ஏற்று, வெளிநாட்டு நிரம்பலாளருக்கும் சந்தர்ப்பம் கொடுத்தனர்.

அண்மைக்காலங்களில், கடவை வரியில் ( Border Taxes ) கூடிய கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இவை ஏற்றுமதியாளருக்கு உள்ளக மறைமுக வரிகளுக்காக. கழிவாக வழங்கப்படுவதுடன், இறக்குமதியாளர் மீது அறவிடப்படுகின்றது. உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவில் மறைமுக வரிகளாக தீர்வையும், விற்பனை வரியும் உள்ளன. ஐரோப்பாவில் கூட்டப்பட்ட பெறுமதி வரி காணப்படுகின்றது.

### 4. சர்வதேச கார்ட்டல்:- (International Cartels)

குறிப்பிட்ட ஒரு பொருளினை உற்பத்தி செய்யும் வேறுபட்ட நாடுகளின் இணைப்பினை 'சர்வதேச கார்ட்டல்' எனலாம். இவ்வமைப்பின் முக்கிய நோக்கம் யாதெனில், வெளியீட்டிலும், ஏற்றுமதியிலும் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கான ஓர் உடன்பாட்டை ஏற்படுத்துவதன் மூலம் குறிப்பிட்ட அமைப்பு உச்ச லாபத்தினைப் பெறுதலாகும். ஆயினும் உள்ளூர் காட்டல் (Domestric Carells) ஐக்கிய அமெரிக்காவில் சட்ட விரோதமானது. ஐரோப்பாவில் தடை செய்யப்பட்டுள்ளது. சர்வதேச கார்ட்டலின் சக்தியினை மதிப்பிடுவது கடினம். ஏனெனில் எந்த ஒரு நாட்டினதும் சட்டத்தினால் சர்வதேச கார்ட்டலின் சக்தியை இழக்கச் செய்ய முடியாது.

இன்று எல்லோராலும் பேசப்பட்டு வருவதும், வெற்றிகரமாக செயற்படுவதுமான 'பெற்றோலிய ஏற்றுமதி நாடுகள் நிறுவனம்' (OPEC – Organisation of Petroleum Exporting Countries) சர்வதேச கார்ட்டலாக அமைகின்றது. இது 1973 – 74 இடைப்பட்ட காலப்பகுதியில் உற்பத்தியினையும், ஏற்றுமதியினையும் கட்டுப்படுத்தி, மசகு எண்ணெயில் வெற்றிகரமாக நான்குமடங்கு விலையுயர்வினைப் பெற்றது. சர்வதேச கார்ட்டல் அமைப்பிற்கு இன்னொரு உதாரணமாக சர்வதேச வான் போக்குவரத்து சங்கத்தினைக் (International Air Transport Association) கூறலாம்.

சர்வதேச கார்ட்டல் அமைப்பு மிகவும் வெற்றிகரமானதாக அமைய வேண்டுமாயின் குறிப்பிட்ட பொருள் அத்தியாவசியமானதாகவும் குறைந்த சர்வதேச நிரம்பலாளரையும் கொண்டிருப்பதுடன், குறிப்பிட்ட பொருளுக்கு சிறந்த பதிலீடு இல்லாமல், இருக்கவேண்டும். ஒபெக் அமைப்பு இவ்வாறு தான் அமைந்துள்ளது. குறிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிட்ட பொருளுக்கு பதிலீடு காணப்படுமா யின் சர்வதேச கார்ட்டல் அமைப்பு உற்பத்தியினையும் ஏற்றுமதியினையும் கட்டுப்படுத்தி உயர்ந்த விலையினைப் பெற முடியாது. வெற்றிகரமான சர்வதேச கார்ட்டல் அமைப்பானது, ஒரு தனியுரிமை நிறுவனமாகவும், மொத்த லாபத்தினை உச்சப்படுத்தக் கூடியதாகவும் அமையும்.

5. குவித்தல்:-
(Dumping)

குவித்தல் என்பதிலிருந்தும் வர்த்தகத் தடை ஏற்படுகின்றது. குவித்தல் என்றால் என்ன? என்பதற்கு பின்வருமாறு விளக்கம் கூறலாம். குறிப்பிட்ட ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள் அந்நாட்டில் விற்பனை செய்யப்படுகின்ற விலையிலும் பார்க்க குறைந்த விலையில் மற்றைய நாட்டில் விற்பனை செய்யப்படுவதனைக் குறிக்கும். ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு பொருள் இறக்குமதி செய்யப்படும் போது போக்குவரத்துச் செலவு, வரிகள் போன்றவை இருக்கும். அந்த நிலையிலும் கூட குறைந்த விலையில் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதனையே குவித்தல் என்பது குறிக்கின்றது. இத்தகைய குவித்தல் மூன்று வகையாக அமைகின்றது. அவை, தொடர்ந்தேர்ச்சியான குவித்தல் (Persistent dumping), இடைக்கிடையேற்படும் குவித்தல் (Predatory dumping), எப்போதாவது ஏற்படும் குவித்தல் (Sporadic dumping) என்பவையாகும்.

தொடர்ந்தேர்ச்சியான குவித்தல் அதிக பாதக விளைவினை ஏற்படுத்துவதில்லை. ஏனெனில், தொடர்ந்தேர்ச்சியான குவித்தல் மூலம் குறித்த நாட்டிலுள்ள நுகர்வோர் குறைந்த விலையில் பொருட்களைக் கொள்வனவு செய்யக்கூடியதாக இருக்கும். எப்போதாவது ஏற்படும் குவிப்பினாலும் அதிக பாதக விளைவு ஏற்படமாட்டாது. இடைக்கிடை ஏற்படும் குவிப்பே இங்கு முக்கியமானதாகும். ஏனெனில் இடைக்கிடையேற்படும் குவிப்பு குறித்த நாட்டில் குறிப்பிட்ட தொழில் வளரவிடாமல் தடுப்பதாக அமைவதனாலாகும். எனவே குறிப்பிட்ட நாட்டில் தொழில் வளரக்கூடாது என்பதற்காக செய்யப்படும் குவிப்பினை தடுக்கும் நோக்குடன், பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் எனக் கூறப்படுகிறது.

6. பொருளாதார ஒருங்கிணைப்பு:-
(Economic Integration)

சர்வதேச வர்த்தகத்தில் தடையை ஏற்படுத்தும் ஒரு காரணியாக பொருளாதார ஒருங்கிணைப்பு அமைகின்றது. நாடுகள் ஒன்று சேர்ந்து வர்த்தகத்தில் உள்ள தடைகளை முற்றாகவோ அல்லது பகுதியாகவோ நீக்கும்பொருட்டு வர்த்தகக் கொள்கைகளை ஏற்படுத்திக் கொள்வதனை 'பொருளாதார ஒருங்கிணைப்பு' எனலாம். பொருளாதார ஒருங்கிணைப்புகள் பின்வரும் நிலைகளில் ஏற்படலாம்.

அ) தெரிவு செய்யப்பட்ட வர்த்தக ஒப்பந்தங்கள்:
(Preferential Trade Arrangements)

தெரிவு செய்யப்பட்ட வர்த்தக ஒப்பந்தங்கள் என்பது குறிப்பிட்ட பொருளாதார ஒருங்கிணைப்பிற்குள் அமையும் போது, அங்கத்துவ நாடுகள் தமக்கிடையே, அங்கத்துவமில்லாத நாடுகளின் மீது விதிக்கப்படும் வரியிலும் பார்க்க குறைந்த தடைகளை விதிப்பதைக் குறிக்கின்றது. உதாரணமாக 1932 இல் ஐக்கிய இராச்சியம் சில நாடுகளுடன் ஏற்படுத்திக் கொண்ட பிரித்தானிய பொதுநலவாய தெரிவுத் திட்டத்தினை (British Commonwealth Preference Scheme) குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) சுதந்திர வர்த்தக பிரதேசம்:
(A Free Trade Area)

சுதந்திர வர்த்தக பிரதேசம் என்பது பொருளாதார ஒருங்கிணைப்பிற்குள் அங்கம் வகிக்கும் நாடுகள் தமக்கிடையேயுள்ளதடைகள் யாவற்றையும் முற்றாக நீக்குவதனைக் குறிக்கின்றது. அதேவேளை அங்கத்துவமல்லாத நாடுகளுடன் தொடர்ந்தும் தடைகள் இருக்கும். உதாரணமாக 1960 இல் உருவாக்கப்பட்ட ஐரோப்பிய சுதந்திர வர்த்தக சங்கத்தினை (European Free Trade Association) குறிப்பிடலாம்.

இ) சுங்கக்கூட்டு:
(A Customs Union)

சுங்கக் கூட்டுக்குள் அமையும் நாடுகளிடையே எவ்வித தீர்வைகளும் இருக்கமாட்டாது. அதேவேளை அங்கத்துவ நாடுகள் அங்கத்துவமல்லாத நாடுகள் மீது ஒரு பொதுத் தீர்வையினை விதிக்கும். உதாரணமாக 1958 இல் உருவாக்கப்பட்ட ஐரோப்பிய பொருளாதார சமூகம் (EEC European Economic Community) அல்லது ஐரோப்பிய பொருளாதார சந்தையினைக் (European Common Market) குறிப்பிடலாம்.

ஈ) பொதுச்சந்தை:
(A Common Market)

பொதுச்சந்தை அமைப்பினுள் உள்ளடங்கும் நாடுகளிடையே மூலதனமும் உழைப்பும் எவ்விததடையுமின்றி அசையக் கூடிய நிலை காணப்படுகிறது. 1970 இல் ஐரோப்பிய சமூகம்பொதுச்சந்தை என்ற நிலையை அடைந்துள்ளது.

உ) பொருளாதார கூட்டு:
(An Economic Union)

பொருளாதார கூட்டுக்கள் என்ற அமைப்பினுள் அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் தமக்கிடையே நாணய நிதி நடைமுறைக் கொள்கைகளில் ஒத்த தன்மையினைப் பேணுகின்றன. பொருளாதார கூட்டு பொருளாதார ஒருங்கிணைப்பின் மிகச் சிறந்த நிலையாகக் காணப்படுகிறது. உதாரணமாக 1960 இல் உருவாக்கப்பட்ட (Benelux) ஐக் குறிப்பிடலாம்.

இவ்வாறாக நாடுகள் இணைந்து பொருளாதார ஒருங்கிணைப்புக்களை ஏற்படுத்துவதால், சர்வதேச வர்த்தகப் பாய்ச்சலில் பெரியளவிலான தடைகளை ஏற்படுத்தி வருகின்றன.

சர்வதேச வர்த்தகத்தில், உலகநலனை அதிகரிக்கும் நோக்குடன் வர்த்தகக் கொள்கைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், GATT (தற்போது WTO) போன்ற அமைப்புக்களின் காரணமாக தீர்வைகளின் பங்கு குறைவடைந்து சென்றாலும், தீர்வை யல்லாத தடைகளின் பங்கு அதிகரித்து வருவதனைக் காணமுடிகின்றது. இன்று சர்வதேச வர்த்தகம் சுதந்திர வர்த்தகம் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது எனக்கூற முடிந்தாலும், நடைமுறையில் சுதந்திர வர்த்தகம் என்பது ஒரு கோட்பாடு ரீதியான கருத்தாகவே உள்ளது. என்றால் மிகையாகாது.

உசாத்துணை நூல்கள்

1. Dominick Salvatore
International Economics, Macmillan Publishing Co., Inc, New York, 1983.
2. Charles P. Kindleberger,
International Economics, IRWIN Inc., U.S.A, 1973.
3. A Survey of World Trade,
The Economist, 1990 Sep 22.
4. ஜாஸ்பர் ஆகா, — இந்தியா ருடே, 1994 ஏப்ரல் 6-20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக வர்த்தக பாய்ச்சல் 1989 $bn
## வர்த்தகத்தின் அளவு $3120bn




(SOURCE :- THE ECONOMIST, Sept. 22, 1990)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தேசியவாதங்கள்: மேற்கு ஐரோப்பாவும், தென்னாசியாவும்

# Nationalism today: Western Europe and South Asia

### தேசிய இயக்கங்களும் இனப்போர்களும்:- (National Movements vs Ethnic Struggles)

தேசிய இயக்கங்கள் என்பவை அரச அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான அரசியற் போரின் ஒரு வகை. (சுதந்திரம் உட்பட அரசியல் சுயாட்சியின் வெவ்வேறு தரங்களும் அடங்கும். இந்தக் கட்டுரையானது சிறுதேசியங்கள் (சிறுபான்மையினர்) பல சிறு அரசுகளை (சிறுபான்மையினர்கள்) கொண்ட ஆதிக்கம் மிகுந்த முக்கிய அரசுக்கு எதிராகச் செய்யும் தேசிய இயக்கப் போராட்டத்தையே கருத்தில் கொள்கிறது) ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஓர் அரசு ஒரு பெரிய நாடாகவே இருப்பதால் அரசின் அதிகாரத்தைப் பறிக்க எடுக்கப்படும் முயற்சிகள் அனைத்தும் வெளித்தோற்றத்துக்கு சிறிய நாடுகளுக்கும், பெரிய நாடுகளுக்கும் இடையே நிகழும் இனப் போராகவே கருதப்படுகின்றது. ஆனாலும், இனப் போர்கள் ஒரு நாட்டில் இருக்கும் கலாசாரக் குழுக்கள் ஒரு குறிக்கோளைக் கொண்டு நடத்தும் போராட்டங்களே ஆகும். இப் போராட்டங்கள் வேறுபட்ட கலாசாரச் குழுக்களுக்கு இடையில் நிகழும் போட்டியின் நிமித்தமாகவே உண்டாகின்றது.

நிரஞ்ஜனா கந்தசாமி
அரசறிவியல் சிறப்புக்கலை,
இறுதி வருடம்

தேசிய இயக்கங்களுக்கும், இனப் போராட்டங்களுக்கும் இடையில் உள்ள இன்னொரு வித்தியாசம், இவை வெவ்வேறு வகையில் தமது பிரச்சனைகளைத் தீர்க்க முயல்கின்றன. தேசிய இயக்கங்கள் ஒன்றில் அதிகாரத்தைப் பரவலாக்கல் அல்லது பூரண சுதந்திரம் என்ற அடிப்படையிலேயே போராடுகின்றன. இதற்கு உதாரணம் இந்தியாவின் மொழி அடிப்படையில் உருவான மாநிலங்களைக் கொண்ட இந்திய அரசு அல்லது சுதந்திர வங்காள தேசத்தைக் குறிப்பிடலாம். இதற்கு மாறாக இனப் போராட்டங்கள் பெரும்பாலும் ஓர் இனத்தின் தனிமனித உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதன் மூலமாகவே தீர்த்து வைக்கப்படுகின்றது.

ஆனாலும் ஒரு குறிப்பிட்ட தேசிய இயக்கத்தில் இனவாதப் பிரச்சினைகளும் இருக்கலாம். உதாரணமாக, கலாசார சின்னங்களை உபயோகித்து ஒரு கலாசாரம் கொண்ட மக்களின் ஆதரவைத் திரட்டலாம். இவற்றை இனப் போர் என்றே மட்டந்தட்டப்படுகின்றது. ஆனால் தேசிய இயக்கத்துக்கும் இனவாதப் போராட்டத்துக்கும் இடையே உள்ள வேறுபாட்டை இரண்டு காரணங்களின் நிமித்தமாக கவனிப்பது அவசியம். ஒன்று, கூட்டான தேசிய உரிமை (உதாரணம் நில உரிமை) இது மொழி உரிமைக்காகப் போராடுவதை விட வித்தியாமானது. அதாவது நாட்டுக்காகப் போராடுவது மொழிக்காகப் போராடுவதை விட வேறுபட்டதாகும். இரண்டாவது, தேசிய இயக்கப் போராட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டத்தில் அரசு அதிகாரம் உண்டு. இது மொழிப் போராட்டத்தில் காணப்படமாட்டாது. ஆகவே, இவ்விரு வகைகளையும் ஆராய்வதற்கு இரு வகையான பகுத்தாய்வு அணுகு முறைகளே தேவைப்படுகின்றது.

## மேற்கு ஐரோப்பிய தேசிய இயக்கங்கள்

இன்று ஐரோப்பாவில் 40 க்கு மேற்பட்ட சிறு அரசுகளில் தேசிய இயக்கங்கள் உண்டு. இவற்றில் மிகவும் பிரபல்யமானவையாக ஐரிஷ் (வட அயர்லாந்து) ஸ்கொட்ஸ் வெல்ஸ் (பிரிட்டன்) பிரெட்டன்கள் கோசிக்கர்கள் (பிரான்சு) பிளெமிங் சாதியர் (பெல்ஜியம்) பாஸ்க், கட்டலன் (ஸ்பெயின்) என்பவை விளங்குகின்றன. இதனைப் பற்றி 1990 நவம்பரில் பாரிசில் இடம் பெற்ற மாநாடு ஒன்றில் (Conference on Security and Co-operation in Europe) மிகேல் கொபேர்சேவ் அவர்கள் ஐரோப்பிய அரசாங்கங்களை எச்சரித்தார். அதாவது, தங்களுக்குச் சாதகமான ஒரு அரசியல் முறையை இன்னொரு நாட்டின் மேல் திணிக்க முயலுவது ஆபத்தாகும். இதற்கு ஒரு பதில் நடவடிக்கையாக ஐரோப்பிய சமூகத்துக்குள் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்க இன்னொரு தாபனத்தை நிறுவுவதாகும். ஆனால், இது சாத்தியப்படாது என்று கூறிப் பிரான்சு நிராகரித்தது. காரணம் ஒரு மொழியினர் தாம் அந்த மொழியிலேயே அரசை நடத்த வேண்டும் என அடம்பிடிக்கும் பட்சத்தில் மத்திய அரசு என்ன செய்யலாம் என்ற ஒரு கேள்வியையும் கேட்டது. இதனால் இந்தச் சிறுபான்மையினங்களின் உரிமை பிரான்சிய ஒற்றையாட்சிக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்பதாலாகும்.

பிரிட்டனில் ஸ்கொட்ஸ், வெல்ஸ் தேசிய இயக்கங்கள் இப்போது தீவிரமடைந்து விட்டன. 1960 களின் பிற்பகுதி வரை இந்த ஸ்கொட் மக்களின் இயக்கம் ஆங்கிலேயரால் கேலிக்குரியதாகக் கூறப்பட்டது. ஆனால் தொடர்ந்த 20 ஆண்டுகளில் ஸ்கொட்லாந்து மக்களின் உணர்ச்சி வேகம் மாறிவிட்டது. 1992 இல் எடுக்கப்பட்ட அபிப்பிராய வாக்கெடுப்பில் ஸ்கொட்லாந்து மக்களில் அரைவாசிப்பேர் சுதந்திரத்தையே ஆதரித்தனர்.

இந்த அபிப்பிராயம் பிரித்தானிய அரசைத் திகைக்க வைத்தது. 1979 தேர்தலின் போது மார்க்கிரட் தட்சர் அதிகாரம் பரவலாக்கப்படும் என வாக்களித்தார். ஆனால் அவரது கட்சி தேர்தலில் அமோக வெற்றி எடுத்தபின், இந்தப் பரவலாக்கல் யோசனை அறவே கைவிடப்பட்டது. ஆனாலும், ஸ்கொட்டிஷ் தலைவர்கள் அதிகாரப் பரவலாக்கல் அரசைப் பிளவுபடாமல் வைத்திருக்கும் என்ற கருத்தைக் கொண்டிருந்தார்.

தொழிற் கட்சி அதிகாரப் பரவாக்கலை மிகவும் ஆதரித்தது ஏனெனில், அதற்கு ஆதரவாக அளிக்குப்பட்ட வாக்குகளில் 40 சதவீதம் ஸ்கொட்டிஷ் மக்களின் வாக்குகளே. ஆனாலும், தொழிற்கட்சி ஒரு சமஷ்டி அரசுக்கு ஆதரவு தெரிவித்தால் அது ஆங்கிலேய மக்களின் ஆதரவை முற்றாகவே இழந்துவிடலாம். ஆகவே தொழிற்கட்சி உறுப்பினர்கள் (இலங்கையின் சிங்களத் தாராளவாதிகள் போல), சமஷ்டி என்ற சொல்லைத் தவிர்த்துவிட்டு 'சுயாட்சி' என்று கூறி வந்தார்கள். ஆனால், சாதாரண ஆங்கிலேய வாக்காளர் (இலங்கையின் சாதாரண சிங்களவர் போல) இந்தச் செப்படி வித்தையை விரைவிலேயே கண்டுபிடித்து விட்டனர். இதனை இட்டே 1992 இல் தொழிற்கட்சித் தலைவர் Chris Patten ஸ்கொட்டிஷ் மக்களுக்கு ஒரு அரசியற் சபையை வழங்கும் பட்சத்தில் தொழிற்கட்சி பிரித்தானிய நாடாளுமன்றத்தில் ஒரு சிறுபான்மைக் கட்சி ஆகிவிடும் என்று எச்சரித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை வலியுறுத்தும் முன்பே இனவாதம் தாராளமாகப் பிரயோகிக்கப்பட்டது. SNP (ஸ்கொட்லாந்து தேசியகட்சி) பூரண சுதந்திரத்திற்காகவே 1934 இலிருந்தே பகிரங்கமாக வேலை செய்தது. இது 1983 இலிருந்து (TULF) தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி கோரிவந்த சலுகைகளைப் போன்றதே. அதாவது SNP யும் TULF போன்றே தனது இலக்கை அரசியல் ரீதியாகவே எட்ட முயல்கிறது. ஸ்கொட்லாந்து பொருளாதார ரீதியில் சுதந்திரமாக இருக்கமுடியும் என்றது. ஏனெனில், ஷெட்லாந்துத் தீவை அண்டிய பிரதேசத்தில் எண்ணெய் வளம் ஏராளமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஆங்கிலேயர் இதனை மறுத்துவிட்டனர். ஸ்கொட்டிஷ் மக்கள் இப்போது பாதுகாப்புச் சேவையில் உள்ள 50,000 பேரின் சம்பளங்களை இழந்துவிடுவர். (இது இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களைப் பிரித்தாளும் தந்திரம் போலுள்ளது) மேலும், ஷெற்லாந்துத்தீவு, ஸ்கொட்லாந்துத் தீவுக்கு உரிமை இல்லாமலும் போய்விடலாம் எனப் பயமுறுத்தப்பட்டது.

பழமை பேண் கட்சியின் விடாக்கண்டமும், தொழிற்கட்சியின் சந்தர்ப்பவாதமும் SNP யின் மிதவாதப் பரோபகாரத்தை ஆதரித்தன. அவர்கள் IRA (ஜரிஷ் குடியரசு இராணுவம்) போன்று, ஸ்கொட்லாந்து தேசிய விடுதலை இராணுவத்தை (SNLA) உருவாக்கினார்கள். SNLA உம், LTTE போல தேசிய விடுதலைப் போரிலேயே ஈடுபட்டுள்ளது.

வெல்ஷ் மக்களும்தான் இதில் பின்தங்கவில்லை. அவர்களும் ஒரு வெல்ஷ் சபையைக் கோருகிறார்கள்.

மேற்கு ஐரோப்பிய (பிரித்தானிய பிரான்சிய) அரச முறைகள் ஒரு தனி அரசு சாத்தியமாகாது என்பதையே காட்டுகின்றன. ஆகவே, இது தென்ஆசியா போன்ற கீழைத்தேசங்களுக்கும் சாத்தியப்படுமா என்பதனைப் பின்வரும் கட்டுரைகளில் ஆராயப்படும்.

Eric J Hobsbawm, Antony D Smith ஆகியவர்கள் இரு மேற்கத்தைய அரசியல் விமர்சகர்கள். Hobsbawm 19 ஆம் நூற்றாண்டு மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவ அபிவிருத்தியின் போது தேசிய இயக்கங்கள் ஒன்றில் தேசிய ஒன்றிப்பு அல்லது விஸ்தரிப்பு ஆகவே இருந்தது. இதுதான் தேசிய முன்னேற்றம் என்றும் கருதப்பட்டது. ஆகவே, இதன் மறுபுறத்தில் கருத்து என்னவெனில், பெரிய இனங்கள் சிறிய இனங்களை விழுங்கி விடுவதாகும் என்றார். ஆனால், அவர், அதேசமயம் அது இனக் கொலையாகாது என்றும் கூறினார். அவர் நிர்வாக ஒத்துழைப்பு, பிரஜாவுரிமைதான் மேற்குலகத்தில் அரசின் அடிப்படையாக இருந்தது. அதாவது, ஒவ்வொரு மேற்கு நாட்டிலும் நிர்வாகம் விஸ்தரித்தது. அரசு அரசின் பிரஜைகளை இடைமுகாமை இல்லாமல் நேரடியாகவே ஆண்டது. புகைவண்டி, தந்தி போன்ற போக்குவரத்து தொலைத் தொடர்பு சாதனங்கள் இதற்கு உதவின. இதனால் மத்திய அதிகாரத்துக்கும், மிகவும் தொலைவில் உள்ள பகுதிகளுக்கும் சுலபமாகத் தொடர்பு கொள்ள முடிந்தது. இது அரசியலை ஜனநாயகமாக்கியது. அதாவது ஒரு அரசின் மக்கள் அரசின் பிரஜைகளாக ஆக்கப்பட்டனர். அதாவது, நிர்வாகத் திறனும், அரசியல் ஜனநாயகமும் அடக்குமுறைக்கு முற்றுப்புள்ளி வைத்தது. இதற்குமாறாக, கலாசாரத்தால் ஒற்றுமையுள்ள அரசுகளை 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் மத்திய ஐரோப்பாவிலும், கிழக்கு ஐரோப்பாவிலும் உருவாக்க முயன்றதால் சிறு அரசுகள் துரத்தப்பட்டன. அல்லது அழிக்கப்பட்டன இதனால் அரசிலும், அரசுகளுக்கு இடையிலும் என்றும் இல்லாத குடியகல்வுகள் உண்டாயின. இதற்கு உதாரணம், முந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூகோஸ்லாவியாவில் குரோசியா, சேபியர், பொஸ்னியர் ஆகிய இனங்களின் அரசுகள் உருவானது.

இந்தக் கோட்பாடுகளுக்கு Smith உம் ஆதரவு கொடுத்தார். அவர் இந்த அரசுகள் உருவாக்கப்பட்டபின் நடந்தவற்றைவிளக்கு கிறார். இந்த அரசுகள் வித்தியாசமான கலாசாரங்களை உடைய அரசுகளையும் இணைத்துக் கொண்டன. இதற்கு உதார ணமாக அவர் பிரிட்டனையும், பிரான்சை யும் சுட்டிக்காட்டுகின்றார். மேலும் உதா ரணமாக 1 ஆம் எட்வேட் மன்னன் வெல்ஷ் அரசுகளைத் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து வெல்ஷ் மக்களை ஒரு இரண்டாம் தரப்பிரஜைகளாக ஆக்கி னான். இதே போலத்தான் பிரான்சிலும் 8 ஆம் லூயி மன்னனும் செய்தான். ஆகவே தேசிய முன்னேற்றம் என்பது சிறிய அரசு களை இணைப்பதாக இருந்தது.

நாடு சிறு பான்மையாகல்:-

Smith இரு தொடர்புள்ள செயற்பாடு களைப் பிழையாகக் கருதுகிறார். ஒன்று ஆங்கில இன உருவாக்கம். ஆங்கில அரசு ஸ்கொட் மக்களையும், வெல்ஷ் மக்களை யும் இணைத்து ஒரு நாடாக உருவானது. ஒரு வித்தியாசமான தன்மை உடைய அர சைத் தனது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்து விட்டால் அதனை அரசில் ஒன்றி ணைத்து விடலாம் என்கின்றார்.

Benedict Anderson மனோவியலைக் கொண்டு வருகிறார். அதாவது ‘கற் பனை’ இனங்கள் என்கிறார். ஸ்கொட்டிஷ் மக்களும், வெல்ஷ் மக்களும் தாங்கள் ஆங் கிலேயர் எனக் கருதலாம் என்பதாகும். ஆனால் இந்த ஸ்கொட்டிஷ் மக்களும் வெல்ஷ் மக்களும் சுயமாகவே தான் இப் படிக் கருதினார்கள் என்பது நம்பமுடியாத தொன்றாகும். ஏனெனில், ஆங்கிலேயர் ஸ்கொட்மக்களையோ வெல்ஷ் மக்களையோ தம்மினம் எனக் கருதவில்லை.

மேற்கு ஐரோப்பிய அரசுகளை நியாயப் படுத்துவது தேசியவாதம் என்ற ஒரே கோட்பாடு ஆகும். ஓர் அரசின் பிரஜை, அவன் எந்த இனத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும் அந்த அரசுக்கு விசுவாச முடையவனாக இருப்பான் என்று கருதப் படுகின்றது. ஆனால், பெரும்பாலும் ஒரே இனமுள்ள நாட்டிலும் மொழி, மத வேற் றுமைகளும் இருக்கலாம். இப்படியான முரண்பாடுகள் இருக்கும் போது ஜனநாய கம் வேலை செய்யாது. ஆகவே ஜனநாய கம் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்குப் பொருத்தமாக இருந்தாலும், இப்போது வளரும் நாடுகள் எனப்பட்ட அரசுகளுக் கும் சாத்தியப்படாது. ஏனெனில் மேற்கைத் தைய ஜனநாயகத்தில் இனம் தவிர்ந்த வேறு வேற்றுமைகள் மறைக்கப்பட்டு வருகிறது. உதாரணமாக, பிரான்சிய மஜியாரிச (Magyarys) இனத்தார் பிரான்சு மொழியை உத்தியோக பூர்வமாகவே ஏற்றுக் கொண் டுள்ளனர். இங்கிலாந்திலும் கலாசார ஒன் றிப்பால் வெல்ஷ் மொழி கிட்டத்தட்ட மறைந்து விட்டது.

மேலும், பெல்ஜியத்திலும் பிரான்சி யரே பெல்ஜிய அரசைக் கட்டுப்படுத்தி னர். பிளெமிஷ் (Blemish) மொழிக்கு அதிக அந்தஸ்து வழங்கப்படவில்லை. இதனால் தான் பெல்ஜியம் ஒரு சமஷ்டி அரசாக்கப் பட வேண்டியதாயிற்று.

மேலே குறிப்பிட்ட பிரான்சிய பெல்ஜிய அனுபவங்கள் பிரஜாவுரிமை மூலமாகவே தேசியவாதம் உருவானதாகக் காட்டுகின் றது. தனியார் உரிமையின் சமத்துவம் ஐரோப்பிய சமூகத்தில் காணப்பட்டும் அது வல்லரசுகளுக்கும், ஏனைய அரசுகளுக்கும் இடையே உள்ள கருத்துக்கள் ஒன்றிணை வதாகக் காணப்படுகின்றது. எந்தத் தேசிய வாதமானாலும் அதில் உள்ள தனியாரின் உரிமைகள், அதன் ஒற்றையாட்சியின் கீழ் ஒவ்வொரு சிறு தேசத்தினதும் மக்களின் கூட்டுரிமைகள் காக்கப்படும் என உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் முழுவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் அலகுகளின் கூட்டைவிடப் பெரியது என்பதே கோட்பாடு. இந்தத் தனிமனித உரிமை மேல் அழுத்தம் செலுத்துவது சிறு அரசுகளின் கூட்டு உரிமைகளைப் பேணு வதற்கு எடுக்கப்பட்ட ஒரு புதிய அணுகு முறையே. இதனால் இனக்கொலை நியா யப்படுத்தப்படுகிறது. அதாவது, ஒற்றை ஆட்சியை உருவாக்குதல் என்ற போர்வை யிலும், தனியார் உரிமை என்ற கருத்தி லும் இது நியாயப்படுத்தப்படுகிறது.

இந்த முறையில், இலங்கை அரசு தமி ழர்களையும், முஸ்லிம்களையும் அரசு எனக் கருத மறுப்பது சிந்தனைக்குரியது.

சிறிய அரசுகளின் உறுப்பினர்கள் தமது கூட்டு உரிமைகளைப் பாதுகாக்க எடுக்கும் முயற்சிகள் சாடப்படுகின்றது. இதனை Smith, Hobsbawm Anderson ஆகியோர் ஆதரிக்கின்றார்கள். ஏனெனில் இந்த தேசி யப் பிரச்சனை இருப்பதை இவர்கள் மறுக் கின்றார்கள். மேலும், ஐரோப்பிய அரசு களில் தேசிய இயக்கம் மீண்டும் உருவாகி யுள்ளதால் ஒற்றையாட்சியின் நியாயத் தைப் பொய்ப்படுத்துகின்றது. மேலும் 20 ஆம் நூற்றாண்டில் மிகவும் கஷ்டமாகக் கட்டி எழுப்பிய அரசுகள் இப்போது குழம் பியுள்ளன. உதாரணமாக, பிரிட்டனில் அரசின் அரசியல் முறையால் தொழிற்சங் கங்கள் பின்வாங்க முயல்கின்றன.

மேற்கு ஐரோப்பாவில் மீண்டும் தேசிய இயக்கங்கள் தலை எடுத்து ஒற்றையாட்சி அரசு ஜனநாயகமற்றுப்போய் பழங்கால ஒரு அரசியல் முறையாக ஆகிவிட்டது என்பதை Smith, Hobsbawm ஆகியோர் ஒப்புக் கொள்ள மறுக்கின்றார்கள். ஆனா லும், இன்றைய பொருளாதார ஒத்துழைப்பு உலகம் முழுவதும் இருக்கும் போது இப் படியான குறுகிய தேசிய வாதம் ஒவ்வாத ஒரு கோட்பாடு ஆகும். ஆனால், நூறுக்கு மேற்பட்ட சிறிய அரசுகள் உருவாகித்தான் உள்ளது.

சிறிய அரசுகள் உருவாகுவதை Smith மேலும் நியாயப்படுத்துகின்றார். சிறிய அரசுகளின் தேசிய விருப்பத்தைக் கொண்டே உள்ளூர் மட்டத்திலும், தேசிய மட்டத்திலும், பிரதேச மட்டத்திலும், இறு தியாக சர்வதேச மட்டத்திலும் கூட்டுக்கள் உருவாகும் சாத்தியம் உண்டு. இதற்கு ஒவ் வொரு அரசிலும் ஒரு வகையிலாவது ஒன் றிப்பு இருப்பது அவசியமாகும். இதனால் இனமும் பின்னர் அரசுகளும் தான் புறக் கணிக்கப்பட்டுச் சிலவேளை ஒடுக்கப்படப் பட்டும் வருகிறது.

இந்த அடிப்படையிலே தான் SNP பிரிட்டனிலிருந்து விலகிவிட நினைத்தது. இதனால் ஸ்கொட்லாந்து ஐரோப்பிய சமூ கத்தில் ஒரு தனிச் சமூகமாகக் கணிக்கப் பட்டு அதனால் பெறக் கூடிய சலுகைகளை யும் பெற்றுக் கொள்ளலாம் என நினைத் தது. ஸ்கொட் லாந்தின் கோரிக்கையும் நியா யமானது. ஏனெனில், இப்போது ஸ்கொட் லாந்தின் பொருளாதாரம் பிரிட்டனின் பொருளாதாரத்துடன ஒன்றிணைந்து விட வில்லை.

இதைப் போலவே சிறிய அரசுகள் பெரிய அரசுகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் வரை அவை பொருளாதார ரீதி யாகத் தனியாக இயங்க முடியாது. ஆகவே, இப்படியான பிரதேசக் கூட்டுக்கள் உருவாகி யுள்ளதால் அரசின் அதிகாரம் போய் அந்த அதிகாரம் பிரதேச மையத்துக்கே வந்து விட்டது. இதன் பிரகாரம் ஐரோப்பாவில் பிரதேசவாரியான கூட்டுக்கள் உருவாகுவது சாத்தியமாகும்.

ஐரோப்பாவில் சமூகமுறையை மாற்றி யமைத்துக் கொள்ள முயன்று கொண்டி ருக்கும் வேளையில், தென்ஆசிய தேசிய இயக்கங்களுக்கு, ஒரு சமூக முறையை முதன் முதலாக அமைப்பதே இப்போது தேவை யாக இருக்கிறது. இது சுலபமானதல்ல, சிக்கலானது. இவை, ஒன்றில் திருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்ட சமஷ்டி அரசுகள் அல்லது புதிதாகச் சுதந்திரம் பெற்ற அரசுகளின் முயற்சியாலேயே உருவாகலாம். இதற்கு இலங்கை ஓர் உதாரணம். இது ஒரு ஒற்றையாட்சி உடைய தேசிய அரசாக உருவாக முயல்கிறது. ஆனால், ஆசியாவில் சமூக நிலையை உபயோகித்து தேசியவாத இயக்கங்களின் விரைவான அரசியற் போக்கை மழுங்க வைப்பதே நோக்கமாகக் காணப்படுகின்றது. அதேசமயம், அரசை மேலும் ஜனநாயக மயமாக்கவும் ஊக்கிவிக்கப்படுகின்றது. இதில் ஒரு கருத்துக் கொள்ளப்படுகின்றது. அதாவது, குடியேற்ற வாதத்திலிருந்து விடப்பட்ட அரசுகள் ஜனநாயகத்தை ஏற்றுக் கொள்ளும் என்பதாகும். ஆனால், இவ் அரசுகள் அதிகாரத்தை மத்தியிலேயே வைத்திருக்க முயல்வதால் இக்கருத்துப் பொருத்த மற்றதாகி விடுகின்றது. அத்தோடு, இவ்வரசுகளில் ஏதோ ஒரு வகையில் ஜனநாயகம் செயற்பட்டு வந்தது எனவும் கருதப்படுகின்றது. இது தவறான ஒரு கருத்து. ஆனால், சுதந்திரம் கிடைத்த உடனேயே ஒற்றையாட்சித் தேசிய அரசை அரசியல் ரீதியாக ஒன்றிணைக்க எடுத்த முயற்சி இக்கருத்துக்கு முரணானதாகவே இருந்தது. கலாசார ஒன்றிப்பால் அரசைக் கட்டியெழுப்ப எடுத்த முயற்சிகள் எதிர்விளைவுகளையே உருவாக்கின. உதாரணமாக. மொழி மூலம் அரசை ஒன்றிக்க எடுத்த முயற்சிகள் எதிர்விளைவுகளையே உருவாக்கின. இந்தியாவில் இந்தி மொழியைத் திணிக்கவும் பாகிஸ்தானில் உருது மொழியைத் திணிக்கவும். இலங்கையில் சிங்கள மொழியைத் திணிக்கவும் எடுத்த முயற்சியால் சிறு அரசுகளிடமிருந்து எதிர்ப்பு உருவானது. அவை, ஒன்றில் கூடிய ஜனநாயகம் வழங்கப்பட வேண்டும் அல்லது சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என வற்புறுத்தின. தென் ஆசியாவில் அரசு, தேசிய இயக்கங்கள் யாவும் குடியேற்றக் கட்டுக்கோப்பை மெதுமெதுவாகக் குறைத்துச் சீரழியச் செய்வதேயாகும்.

இரண்டு அல்லது கூடிய அரசுகளைக் கொண்ட ஒரு நாட்டின் எல்லைகள் வெற்றி பெற்றதால் கிடைத்தவை அல்ல. அல்லது அவை, தானமாகக் கொடுக்கப்பட்டவை யல்ல இவையாவும் குடியேற்ற காலத்தில் நிர்வாக சுலபத்திற்காக ஒன்றிணைக்கப்பட்டவையே ஆகும். இவ் அரசுகள் இருப்பதற்கு எவ்வித நியாயமும் இல்லாத போதிலும், முடியேற்றக் காலத்தில் இருந்தது போலவே இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டானது. உதாரணமாக ஆபிரிக்க ஒற்றுமைச் சங்கம் (OAV) உள்ளபடியே தான் எல்லைகள் இருக்க வேண்டும் என வற்புறுத்தியது. ஆனால், வரலாறு இப்படியான தீர்மானங்கள், அரசியல் கட்டுப்பாடுகளால் மாறிவிட்டது. ஆகவே, இப்போதும் ஆபிரிக்காவில் அரசுகளின் எல்லைகள் மிகவும் வரையறுக்கப் பட்டே வருகின்றது.

பிரித்தானிய இந்தியாவானது பாரதம் பாகிஸ்தான் எனப் பிரிக்கப்பட்டதும். பின்னர் வங்காளதேசம் உருவானதும் தென் ஆசியாவிலும் இந்த நிலைமை இருக்கத்தான் செய்கிறது என்பதைத் துலக்கமாகக் காட்டுகின்றது. தேசிய இயக்கங்களின் வலிமையே அரசுகள் இப்போது ஜனநாயகமாக்கப்பட்டு வருவதற்குக் காரணமாகும். இதற்கு உதாரனம், இந்தியாவின் தேசிய இயக்கங்களே, சுதந்திரம் பெற்ற இந்தியாவை அரசியற் சீர்திருத்தம் உண்டாகக் வைத்தது. இதன் விளைவாக உருவான சமஷ்டி அரசியல் மொழிவாரியான சிறுபான்மை மக்களுக்குத் தேசிய அந்தஸ்தை வழங்கியது. மேலும், அது பிரித்தானியரிடமிருந்து பெற்ற மத்திய அதிகாரத்தையும் படிப்படியாகப் பரவலாக்கி விட்டது. இதனால், ஜனநாயக அரசியலின் மூலமே ஆட்சி நடத்தப்பட்டது.

ஒற்றையாட்சி அரசியலே நல்லது என்று வாதாடுகின்றவர்கள் பின்வரும் கருத்துக்களைப் பற்றிச் சிந்திப்பது நல்லது. முதலாவது, உலகம் முழுவதுமே அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கத்துக்கும். கலாசார ஒன்றிப்புக்கும் எதிராக நடைபெற்று வருகின்றது. இதற்குத் தென் ஆசியா விலக்கல்ல. இரண்டாவது மேற்கு ஐரோப்பாவில் இப்போதும் சிறிய அரசுகள் இருந்து வருகின்றன. இவை இந்த நவீன ஜனநாயக யுகத்திலும் தான் கிளர்ச்சி செய்து வருகின்றன. ஆகவே, பல் இனத்தேசங்களைக் கொண்டு ஒற்றையாட்சி அரசு அமைப்பது இயலாத காரியம். மூன்றாவது, ஐரேப்பாவில் சிறு தேசங்கள் ஐரோப்பிய சமூகத்தில் இணைய வேண்டும் என்பதற்கான காரணங்கள் தென் ஆசியாவில் ஆராயப்பட்டு வருகின்றது. இதனால் சார்க் போன்ற கூட்டுக்கள் தோன்ற வாய்ப்புண்டு. நான்காவது, மேலே கூறப்பட்ட யாவையும் தேசியவாதம் என்ற கோட்பாட்டின் குறைகளை எடுத்துக் காட்டுகின்றது.

இன்று தென் ஆசியாவின் முன்னேற்றத்தைக் கருத்தாகக் கொண்டிருக்கும் இயக்கங்கள் சிறு அரசுகளின் மூலதனத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும், ஜனநாயகமயமாக்கப்பட வேண்டும். ஆகவே தென் ஆசியாவை எதிர் நோக்கும் வேலை வரலாற்று ரீதியாகவே வந்ததாகும். அதாவது உருப்படியான ஜனநாயகக் கோரிக்கைகளுக்கு சம்மதப்பட வேண்டும். இதனைச் செய்யத் தவறினால் சிறு தேசங்கள் தொடர்ந்தும் நசுக்கப்பட்டே வரும் மேலும் மத்தியில் அதிகாரம் குவியும் சமூகம் இராணுவ மயமாக்கப்படும். பொதுவாக ஜனநாயகக் கோட்பாடு மறைந்து விடலாம்.

**ஜப்பானைப் பற்றி.........**

* *முட்சுகிட்டோ புதிய ஜப்பானை உருவாக்கிய பேரரசர் ஆவார்.*
* *கைத்தொழிலில் அமெரிக்காவுடனும் சீனாவுடனும் போட்டி இருக்கின்றது.*
* *இரண்டாம் உலகப் போரில் அணுக் குண்டால் தாக்கப்பட்டது.*
* *ஆசியாவில் குடியேற்றத்திற்கு உட்படாமல் இருந்து பல குடியேற்றங்களை தாபித்த நாடு*
* *கைத்தொழிலுடன் விவசாயத்துறையிலும் முன்னேற்றம் கொண்ட நாடு*
* *ஆசியாவில் அபிவிருத்தியில் முன்னணி வகிக்கும் நாடு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அபிவிருத்தி
# இலங்கையின் அனுபவங்கள்

# Rural Development
# Sri Lanka Experience

### அறிமுகம்:

பொருளியல் ஆய்வுப் பரப்பில் அதாவது மனிதனது பொருள்சார் நடத்தை பற்றிய விஞ்ஞானத்தில் அபிவிருத்திக் கோட்பாடு மிக முக்கியமான ஒன்றாகும். மொத்த தேசிய வருமானத்தில் ஏற்படும் தொடரான அதிகரிப்புடன் சமூக, அரசுயல், பண்பாட்டு, நிறுவண, தொழில்நுட்ப சிந்தனைகளில் ஏற்படும் நிகழ் முறையான மாறுதல்களையே அபிவிருத்தி என்ற பதம் குறித்து நிற்கிறது. இந்த செய்முறையானது பரஸ்பரம் ஒன்றில் ஒன்று தங்கியிருப்பதுடன் கூட்டான செயல்பாடு காரணமாகவும் செயல்முறை இயக்கம் நிர்ணயம் செய்யப்படுகிறது.

இவ் வகையில் தொடரானதும் நிகழ்முறையானதும் மாற்றச் செயல்பாடுகளை நிர்ணயம் செய்யும் காரணிகள் பல வகையானதாக அமையும். அவற்றில் எமது நோக்கத்துக்கு அமைவாக கிராம அபிவிருத்தி என்பதனை இங்கு நாம் கவனம் கொள்ளின் அபிவிருத்தி செய்முறை ஒன்றில் மிகப் பெரிய பங்குபற்றுதலை வகிக்கும் துறையாக இது காணப்படுகிறது. அபிவிருத்திக்கான மிகப் பெரும் சவாலாகவும் அதே நேரத்தில் அதன் அவசியத்தை மிக மிக வேண்டி நிற்பதாகவும் இக் கிராமியத்துறை எல்லா நாடுகளிலும் காணப்படுகிறது. கிராமத்துறை அல்லது கிராமியம் எனும் போது ''குறைவான சனத்தொகைச் செறிவினைக் கொண்ட பிரதேசங்களும் அதனுடன் தொடர்பான தனிமைப்படுத்தலும் விவசாய உற்பத்தியினைக் கொண்ட பொருளாதார அடித்தளமும் நகர மக்களிடம் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து வேறுபட்டு பின் தங்கியதுமான வாழ்க்கை நிலையினைக் கொண்ட மக்களினை உள்ளடக்கிய பிராந்தியமே கிராமியம் என வரையறுக்கலாம்'' இவ்வாறான அபிவிருத்திக்கு முரணான தன்மை கொண்ட கிராமிய துறையானது மாற்றங்களை உள்வாங்கும் போதே ஒரு நாட்டின் முழுநிலை அபிவிருத்தி சாத்தியமாக்கப்படும். இந்த வகையில் கிராம அபிவிருத்தி பற்றிய கோட்பாட்டு முக்கியத்துவத்தையும் இலங்கையின் இம் முயற்சி தொடர்பான அனுபவங்களையும் இணைத்துப் பார்ப்பது மூலம் கிராம அபிவிருத்தி தொடர்பான பிரயோக முயற்சிகளை மதிப்பீடு செய்வதனையே இக் கட்டுரை ஆராய முற்படுகிறது. இதில் முதல் பகுதியில் கிராம அபிவிருத்தி பற்றியும் இரண்டாவது பகுதியில் இலங்கை தொடர்பான அனுபவங்களையும் விளக்க முற்படுகிறது.

*அ. கேதீஸ்வரன், B. A. (Hons)*
*உதவி விரிவுரையாளர்,*
*பொருளியல் துறை.*

## பகுதி I

### 1.1 கிராம அபிவிருத்தியும் அவசியமும்

உலகின் மொத்த சனத்தொகையில் அரைப்பங்குக்கு மேற்பட்ட அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணளவாக 3.1 மில்லியனுக்கு மேற்பட்ட சனத்தொகையினை கொண்டதும் உலகின் மொத்த வறிய மக்களில் 70% க்கு மேலானோரை கொண்டதுமான கிராமியத் துறை என்பதனில் ஏற்படுத்தப்படும் சமூக பொருளாதார அரசியல் பண்பாட்டு நிறுவன ரீதியான மாறுதல்களையே கிராம அபிவிருத்தி குறித்து நிற்கிறது. இதனை வரை விலக்கணமாக நோக்கின் " கிடைக்கும் மனித பௌதிக மூலவளங்களை உச்ச மட்டத்துக்கு பயன்படுத்தி கிராமிய செயல் திறனை கூட்டுவதும் ஒட்டுமொத்தமாக கிராமிய மொத்த சனத்தொகையினரின் குறிப்பாக கிராமிய சமூகத்தினர் இல்லாதுள்ளனர். எனவே பேரளவான கிராம ஊழியத்தின் திறனை அதிகரித்து அபிவிருத்தி செய்முறையில் இணைத்துக் கொள்வதுவே நாட்டின் அபிவிருத்தியில் மிக பிரதான அம்சமாக கருதப்படுகிறது.

## 1.2 கிராம அபிவிருத்தியின் கோட்பாட்டு அணுகுமுறைகள்

கிராமிய துறையின் பண்புகள் காரணமாகவே அபிவிருத்தி தொடர்பான பல பிரச்சனைகள் ஏற்படுகின்றன. கிராமியத் துறையினர் விவசாயதுறை சார்ந்தவர்களாக இருப்பதும் சுயசார்பு நிலையினை மட்டுமே நோக்கமாகக்கொண்டு உற்பத்தியில் ஈடுபடுவதும் மரபுரீதியான தொழில் நுட்பத்தை பாவிப்பதும் புதிய வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்த முடியாதுள்ளன. அதே நேரத்தில் பெருமளவு கிராமிய சனத்தொகையின் காரணமாக மலிவான கால நிலையிலேயே ஊழியத்தை பெறக்கூடியதாக கிராமியத்துறை காணப்படுகிறது. மாறாக நகர்த்துறையில் கூலி உயர்வாகவே காணப்படுகிறது இவ் வகையில் கிராமிய ஊழியத்தை நகர்புறம் நகர்த்துவதன் மூலம் இதனை தீர்க்க முடியும் என்ற ஆர்தர் லூயிஸ் ( Arthur Lewis ) என்பவரால் முன் வைக்கப்பட்ட இருதுறை மாதிரிக் கோட்பாடு ( Two Sector Model ) முக்கிய மானதாகும். இதன்படி கிராமியத்துறை மலிந்த ஊழியத்தை கொண்டிருப்பதுடன் வேலையின்மையையும் அனுபவிக்கின்றது. அதே வேளை நகரத்துறை கூடிய கூலியிலும் ஊழியத்தைப் பெறமுடியாதுள்ளது என்பதனால் நகர்புறம் நோக்கி கிராமத்துறை ஊழியத்தை நகர்த்துவதன் மூலம் கிராமப்புற வேலையின்மை நீக்கப்படுவதுடன் நகர்புற மலிவுக் கூலியில் கிராமப்புற ஊழியம் செயல்படுமிடத்து தொழில்துறை அனுபவிக்கும் மிகை காரணமாக மேலும் பல புதிய முதலீடுகள் உருவாக வறிய கிராம வாசிகளின் வாழ்க்கைத் தரத்தினையும் வருமான மட்டத்தையும் அதிகரிக்க செய்வதனையும் அபிவிருத்தி செயல் பாட்டில் அவர்களின் பூரணமான பங்களிப்பினை பெற்றுக் கொள்வதனையும் இறுதி இலட்சியங்களாக கொண்ட கொள்கைகளையும் திட்டங்களையும் உருவாக்குவதன் ஊடாக கிராம மட்டத்தில் ஏற்படுத்தப்படும் மாறுதல்களையே கிராம அபிவிருத்தி என்பது குறித்து நிற்கிறது. இவ் வகையில் கிராம மேம்பாட்டுக்காக திட்டமிடல் நிறைவேற்றல் நிலை நிறுத்துதல் என்பன வற்றில் ஏழைகளை சம்பந்தப் படுத்துகின்ற ஓர் முயற்சியாக இதனை கருத முடியும்

கிராம அபிவிருத்தி ஒன்றின் அவசியத்தை நாம் நோக்கு மிடத்து உலகின் பல நாடுகளில் சனத்தொகையில் பெரும் பங்கு மக்கள் கிராமங்களிலேயே வாழ்வதுடன் குறிப்பாக 3 ஆம் உலக வறியநாடுகளில் கிராமங்களில் முக்கால்வாசிப் பேர் வாழ்கின்றனர் என்பதனால் மக்களுக்கான மாற்றங்கள் கிராமங்களிலேயே ஆரம்பிக்கப்பட வேண்டியுள்ளது. இதனுடன் அபிவிருத்தி செய்முறை எதிர் நோக்கும் பெரியளவான பிரச்சினைகளான வறுமை அதிகரிக்கும் வருமான சமமின்மை, வளரும் சனத்தொகை, அதிகரிக்கும் வேலையின்மை என்பனவும் அதிகளவில் கிராமங்களிலேயே இடப்படுத்தப்பட்டுள்ளன. இதனுடன் மரபு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியான சமூகசிந்தனை யோட்டமும் நீண்டகால பழமையுடைய தொழில்நுட்ப பாவனையும் தப்பிப் பிழைப்பதற்கான பொருளாதார வாய்ப்புக்களையே வளங்கியுள்ளது. விமர்சனத்துக்குரிய நியமங்களும் பழக்கவழக்கங்களும் இவர்களின் ஆற்றலினை பாதித்து உள்ளன இவ் வகையில் மனிதசக்தி பயன் பாட்டின் பெறுபேறுகளுக்கு சாத்திய முடைய படையாக கிராமப்புற ஊழியம் மேலும் மேலும் உள்வாங்கப்பட்டு இப்பிரச்சனை தீர்க்கப்படும் என்பதுடன் வளர்ச்சியும் ஏற்படும் என விளங்குகின்றது. எனினும் யதார்த்தத்தில் நகர்புற கூலிக் கவர்ச்சி காரணமாக இடம் பெறும் கிராம குடியான்களின் இடப்பெயர்வு நகரபுற தொழில் நுட்பத்துக்கு ஏற்ப செயல்பட முடியாது போனதுடன் கிராம விவசாயத்தையும் இது பாதிப்பதாக உள்ளது. இதனுடன் நகரப்புறத்தில் ஏற்படுத்தப்படும் மிகை உள்நாட்டு முதலீடாக அன்றி வெளிநாடு நோக்கி சென்று விடுவதனால் ஊழிய உள்வாங்கலும் தடைப்படுகிறது; நகரப்புற தொழில்நுட்பம் ஊழிய சேமிப்பு (Labour Saving) தொழில் நுட்பமாகவே அதிகளவில் காணப்படுகின்றது. அதனுடன் நகரக்கூலி இழுவிசை (Pull Factor) என்பது படித்த கிராமத்து இளைஞர்களையே கூடுதலாக கவருவதனால் கிராமிய துறைக்கு படித்த இளைஞனின் பயன்கள் கிடைக்காது போய்விடுகின்றன.

அடுத்து கிராமிய துறையினரின் பிரதான தொழில் முயற்சிகள் விவசாயத் துறை சாா்ந்தே இயங்குவதனால் விவசாயத்துறையில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் கிராம அபிவிருத்தியை கொண்டு வரும் என்ற வகையிலான கோட்பாடுகளை நோக்கின் விவசாய செய்கை முறையில் கிராமிய விவசாயிகள் எப்போதும் சுயதேவை பூர்த்தி என்பதனையே கொண்டு செயல்படுகின்றனர். இதற்கு மாறாக ஆரம்பத்தில் சுயதேவைக்கென இணைந்து கொண்ட கிராமத்தவரை பகுதிவாரியாக சந்தைக்கெனவும் உற்பத்தி செய்பவராக மாற்றிக் கொள்ளுவதும் பின்னராக சிறப்புத் தேர்ச்சியுடனான வர்த்தக நோக்கிலான விவசாயத்தை நோக்கி விரிவுபடுத்துவது என விளக்கப்படுகிறது. இதனை நிறைவேற்றுவதற்கென உயிரியல் தொழில்நுட்ப கணடு பிடிப்புகள், பொருத்தமான அரச பொருளாதார கொள்கை, நிறுவன ரீதியான உதவும் அமைப்புகள் என்பனவற்றை பயன்படுத்தலாம் என முன் வைக்கப்பட்டது.

இதனைவிட கிராமிய அபிவிருத்தி இன்மைக்கான காரணங்கள் கிராமிய சமூகத்தினரின் குறைபாடுகளால் அன்றி நகரச் சார்பான நடத்தை (Urban blas) காரணமாக எழுகிறது என்ற வகையிலான மைக்கல் லிப்டன் (Michael Lipton) என்பவரால் முன்வைக்கப்பட்ட நகரச் சார்பு கோட்பாடு முக்கியமானதாகும். கிராம மககள் வறியவராயினும். திறமையானவர் எனவும் நகரப்புற வர்க்கத்தினரே கிராமத்துறை சார்பில் தீர்மானங்கலை எடுப்பதனால நகர்புற சார்பு என்பது ஏற்படுவதுடன் நகர்புல நலன்களே இதன் மூலம் பேணப்படுகிறது எனவும் கூறுகிறது.

## 1.3 இலங்கையின் கிராமிய அமைப்பு

இலங்கையின் கிராமிய அமைப்பு தொடர்பான வரலாற்றை நோக்குமிடத்து இலங்கையின் மிகப் பெரியளவான காலப்பகுதி காலனித்துவகால செய்முறையினுள்ளேயே கழிந்துள்ளது காலனியாதிக்க காலத்தில் சட்டம ஒழுங்கை பேணல், வருமானம் திரட்டல், சேமநல சேவை என்பன மட்டுமே சுதேசிகளுக்காக கவனிக்கப்பட்ட அலுவல்களாக இருந்தன. ஏனைய நிலையில் முதல் விளைவுப் பொருட்களை நிரம்பல் செய்யும் உற்பத்தி நிலையங்களாகவும் முடிவுப் பொருட்களை விற்பனை செய்யும் உத்தரவாதப்படுத்தப்பட்ட சந்தைகளாகவுமே குடியேற்ற நாட்டு வாத கால செயல்பாடுகள் அமைந்திருந்தன. இவ்வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் கிராமிய துறையிலும் இக் குடியேற்றகால கொள்கைகள் பலத்தவிளைவுகளை நிர்ணயித்துள்ளன. நன்கு கவனிக் கப்பட்ட துறையாக பெருந்தோட்ட விவசாயம் காணப்பட்டபோது குடியான்கள் விவசாயத்துறை எவ்வித மாறுதல்களுக்கும் உட்படாத வகையில் பேணப்பட்டுவந்தன. இதனால் கிராமிய மக்களும் அவரது பொருளாதார நடவடிக்கைகளும் மரபு வாத அம்சங்களுடனேயே இன்று வரை தொடர்ந்து வருவதற்குரிய காரணமாக இது விளங்கியது. இலங்கை கிராமங்களின் தொடர்ச்சியான பேணுகை என்பது இதனூடாகவே தொடர்கிறது.

இலங்கையின் காலனியாதிக்கத்துக்கு பிற்பட்ட வரலாற்றில் 1930 களில் இருந்தே சுதேசிகளின் அக்கறைக்குரியதாக கிராமங்கள் மாறத் தொடங்கின. 1930 களில் ஏற்படுத்தப்பட்ட அரசாங்க சபையில் இருந்தே கிராம அபிவிருத்திக்கான நேரடியான கவனிப்புகள் தொடங்கியிருந்தன. எனினும் நிதிவசதியினூடான நிர்மாணம், நீர்பாசன அமைப்பு, விவசாய அபிவிருத்தி என்பனவே இடம் பெறத் தொடங்கியிருந்தன.

1956 இன் பொதுத்தேர்தலின் பின்னரே உண்மையான கிராமிய அபிவிருத்தி முயற்சிகள் இலங்கையின் அக்கறைக்குரியதாக இடம்பெறத் தொடங்கின. இத் தேர்தலின் ஊடாக கிராம நலன் சார்ந்த கிராம வணிகர்கள், கிராம வைத்தியர்கள், வசதியுடைய விவசாயிகள், பாடசாலை ஆசிரியர் போன்றோரின் அரசியல் பிரவேசம் இலங்கை அரசியலில் முக்கியம் பெறத் தொடங்கியது. இது கிராமங்களில் மத்திய தர வர்க்க எழுச்சியையும் சமூக மாற்ற இயக்கவியல் செய்முறைக்கும் அடிப்படையாக அமைந்திருந்தது. இதனுடன் வாக்களிப்பு மூலம் பிரதிநிதிகள் தேர்வு செய்யும் முறையானது நாட்டின் மொத்த சனத் தொகையில் 70 — 80% வரையிலான மக்களை கொண்ட கிராமங்களை நோக்கி ஆட்சியாளர்கள் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தையும் ஏற்படுத்தின. இதனுடன் இலங்கையின் புராதன நீர்பாசன கலாச்சார பண்புகளும் இணைந்த நிலையில் விவசாய நீர்பாசன விருத்திக்கே முன்நிலை வழங்கப்பட்டது. இவ்வகையில் கிராமிய அபிவிருத்தியின் செயல்பாட்டு உத்தியாக பொருத்தமான அரச பொருளாதார கொள்கைகள், தொழில்நுட்ப தேர்வுகள், உதவும் நிறுவனங்கள் கிராம தலைமைத்துவ ஏற்பாடுகள், என அரசின் அணுகுமுறைகள் ஊக்கப்படுத்தப்பட்டன. எனினும் இவை பொருளாதார கோட்பாட்டு அணுகுமுறையுடன் வெற்றி நோக்கி செயல்படுத்தப்பட்டன என்று கூறுவது கடினமாகவே உள்ளன.

## 1.4 கிராம அபிவிருத்தி திட்டங்கள்

சுதந்திரத்துக்கு பின்னரான இலங்கையின் கிராம அபிவிருத்திக்கென அறிமுகம் செய்யப்பட்ட திட்ட வரைபுகள் என பார்ப்பின் அவை பின்வருமாறு ஒழுங்கமைக்கப் படலாம்.

1. வறுமை தணிப்பு திட்டங்கள்
2, உள்ளமைப்பு வசதிகளின் அபிவிருத்தி
3. சேமநல நோக்குள்ள சேவைகள்
4. விவசாய உற்பத்தியை அதிகரிக்கும் திட்டங்கள்
5. கிராமிய மக்களுக்கான கல்வித்திட்டங்கள்
6. நிறுவன உருவாக்க திட்டங்கள்
7. நிதி ஆதார நிறுவன ஏற்பாடுகள்
8. வெளிநாட்டு ஒத்துழைப்புடனான கூட்டு திட்டங்கள்

என்பனவற்றை பாகு படுத்த முடியும். இவ்வகையால் இவற்றின் பிரயோக வடிவங்களை விரித்து ஆராயுமிடத்து அவை பின்வருமாறு அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1.4.1 வறுமை தணிப்பு திட்டங்கள்

இலங்கையின் சுதந்திரத்துக்கு பின்னரான வரலாற்றில் சமூக நலன்புரி சேவைகளின் வளர்ச்சி என்பது குறிப்பிடத்தக்க இடத்தை எட்டியுள்ளது. 1950 களின் பின்னராக ஏற்பட்ட நலன் பெறும் அரசுகளின் (Welfare State) தோற்றம் என்பதும், பொதுத் துறை மீதான அரசின் தலையீட்டின் அவசியம் உணரப்பட்டதும், போட்டி அடிப்படையிலான அரசியல் தலைமைத்துவத்தை கொண்ட கட்சிகளின் வளர்ச்சியும், தேர்தல் நோக்கத்துடனான ஆதரவுக் கொள்கைகளாக அரசின் திட்டங்கள் அணுகப்பட்டதும் சமூக நலன் பேணும் கொள்கைகளை நியாயப் படுத்துவனவாக அமைந்தன. இவ்வகையில்வறுமை தணிப்பு தொடர்பாக அறிமுக மானதிட்ட மாதிரிகளை நாம் இருவகையாக பிரித்துப் நோக்கலாம்.

அ) உணவு மானியங்கள்

ஆ) பொது ஜனஉதவித்திட்டம்

#### அ. உணவு மானியங்கள்

2 ஆம் உலக மகாயுத்தத்தின் பின்னராக உணவு நிரம்பலில் ஏற்பட்ட பற்றாக் குறை காரணமாக அரசின் முகாமை இதற்கு அவசியப்படுத்தப்பட்டது. இதன் பின்னராக 1972 ஆம் ஆண்டு வரை வருமான மட்டம் எதுவும் கவனத்தில் எடுத்துக் கொள்ளாது எல்லோரையும் மையமாக கொண்டு உணவு மானியம் வளர்கப்பட்டது. இது தேர்தல் காலங்களில் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்மொழியப்பட்டனவாக இருந்தன. 1972 இல் இருந்து உணவுப் பங்கீட்டுக் கூப்பன்கள் என்ற அடிப்படையில் மாற்றப்பட்டது. 1978 இல் இருந்து வருமானமட்டத்தை கவனத்தில் கொண்டு உணவு முத்திரை திட்டம் அறிமுகமானது இதன்படி 5 பேர் கொண்ட குடும்பங்களுக்கு 300/ ரூபா உச்ச வருமான எல்லையும் 5 க்கு மேற்பட்ட அங்கத்துவக் குடும்பங்களுக்கு மேலதிகமாக ஒருவருக்கு 60/ ரூபாவை உச்சவரம்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டது பின்னராக இது 300/-ரூபா வருமானத்துக்கு குறைந்த குடும்பங்களுக்கு முழுமையாகவும் 301–400/ ரூபா உடைய குடும்பங்களுக்கு ஆறுபேர் வரைக்கும் 401–600/ரூபா வருமானத்துக்கு நால்வருக்கும் 601–750/- ரூபா வரை இரண்டு பேரும் உணவு முத்திரை பெற தகுதியுடையவராக்கப்பட்டனர். அடுத்து 1989 இல் ஜனசவிய என்ற பெயரில் மேலும் ஓர் மானியத்திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது. இதன்படி 1458/- நுகர்வுக்காகவும் 1042/- ரூபா சேமிப்பாகவும் கொண்ட 2500/- வுக்கான மாதாந்த கொடுப்பனவு இருவருடங்களுக்கு வளங்கப்படும் திட்டமாகும். இதன்படி கிராமிய சேமிப்பினையும் கிராமிய வறுமையையும் ஒருங்கே கவனம் கொண்டதாக இது அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

இவ் வகையில் கிராமியத் துறை சார்ந்து முழுநிலை வறுமையினை நீக்கும் நோக்கிலான திட்டங்களாக இவை செயல் படுத்தப் பட்டபோதும் இவற்றினூடாக செயல்திறன் மிக்க ஊழியத்தை உருவாக்க முடியவில்லை என்ற குறைபாட்டை இனம் காணமுடியும் சந்தை நோக்கில் உற்பத்தி செய்யும் முயற்சியாளர்களின் உருவாக்கத்தை தடுத்து தங்கி வாழும் மனோ பாவத்தை ஏற்படுத்தியதுடன் ஆக்கமுயற்சியற்றவராக காலம் கடத்தும் பிரிவினராக கிராமிய மக்களை நெறிப்படுத்திய திட்டமாகவே இது இருந்துள்ளதனை காணமுடியும்.

#### ஆ. பொது ஜன உதவித்திட்டங்கள்

சமூக சேவை திணைக்களத்தின் மேற்பார்வையில் கடந்த நான்கு தசாப்தங்களாக செயல்படுத்தப்படும் பொதுசன சகாயம், விதவைகள் அனாதைகளுக்கான உதவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகைகள், கயரோகம் தொழுநோயாளிகளுக்கான விசேட படிகள், மேற்கூறப்பட்ட நோய்களில் இருந்து மீண்டவருக்கான புணர் வாழ்வுத்திட்டம் என்பன உள்ளடங்கும்.

### 1.4.2 கிராம உள்ளமைப்பு வசதிகளின் அபிவிருத்தி

கிராம உள்ளமைப்பு வசதிகளின் அபிவிருத்தி கிராமங்களின் உள்ளார்ந்த தொடர்புகளை இலகுபடுத்தும் நோக்கிலும் நகர சமூகத்துடன் இணைப்பை பெறும் நோக்கிலுமான வீதிகள், பாலங்கள். பாடசாலைகள் நீர்பாசன, நிர்மானிப்பு. மற்றும் தொடர் பூட்டல் திட்டங்களை குறிக்கும் இவற்றின் செயல் பாட்டைக் கொண்டு இரு பிரிவாக வகைப்படுத்தி ஆராயலாம்.

அ. பன்முகப் படுத்திய வரவு செலவுத்திட்டம் மூலமான வசதிகள்

ஆ. கிராமிய மின்மயத்திட்டம்

### அ பன்முகப்படுத்திய வரவு செலவு திட்டம் மூலமான வசதிகள்

இத்திட்ட ஏற்பாட்டின் படி மத்திய வரவு செலவுத் திட்டத்தில் இருந்து நேரடியாக குறித்த தொகை நிதி கிராமங்களுக்கு செல்லுதலை மையமாககொண்ட திட்டமாகும் இதன்படி 50 இலட்சம் ரூபாக்கள் ஒருதொகுதியைக் காண ஒதுக்கப்படும் இதில் மாவட்ட அபிவிருத்தி சபை சார்பில் 25 இலட்சம் ரூபாக்களும் பாராளுமன்ற உறுப்பினர் விருப்புக்கமைய 25 இலட்சம் ரூபாக்களும் பங்கிடப்படும் கிராமிய துறைசார்ந்த பாடசாலைகள், நீர்பாசனம், கிராம வீதிகள், பொதுக்கட்டிடம், கிராமிய வீடமைப்பு, மின்சாரம்வழங்கல் என்பன பெருமளவில் இந் நிதியூடாகவே செயல் படுத்தப்பட்டுள்ளது.

### ஆ. கிராமிய மின்மயத் திட்டம்

சிறு அளவு கைத் தொழில்களின் வளர்ச்சிக்கு ஊக்கப் படுத்தவும் வீட்டு மின்சாரப் பாவனையை ஊக்கப் படுத்தவும் என இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது இதனூடாக கிராமிய சமூகதரத்தை உயர்த்தவும் வாழ்க்கை தரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவும் முயற்சிக்கப்பட்டது இதனூடாக கிராமிய கட்டமைப்பை அபிவிருத்தி செய்யும் எத்தனங்கள் இடம் பெற்றபோதும் தேவையின் முக்கியம் கவனிக்காது நிதி செலவு செய்யப்பட்டதும் கால அவகாசம் காரணமாக செலவழிக்கப் படுவதற்கெனவே திட்டங்கள் தேர்வு செய்யப்படுவதும் உறுப்பினரின் விருப்புகள் திட்டங்களை பிரதி பலித்ததும் வளர்ச்சிக்கான திட்டங்களில் இனம் காணாது இது செலவு செய்யப்பட்டதும் நடைமுறையில் காணக்கூடியதாக உள்ளதனையும் இங்கு கனம் கொள்ளல் வேண்டும்.

### 1-4-3 சேமநல நோக்குள்ள திட்டங்கள்

கல்வி சுகாதாரம் வீடமைப்பு போன்றவற்றினூடாக கிராமிய சமூகத்தின் அபிவிருத்திக்கான திட்டங்களாக இவை செயல் படுத்தப்பட்டன. இதில்

அ) கல்வியூட்டும் திட்டங்கள்

ஆ) சுகாதார சேவைகள்

இ) கிராமவீடமைப்பு திட்டங்கள் என்பன முக்கியமானவையாகும்.

### அ. கல்வியூட்டும் திட்டங்கள்

1940 ஆம் ஆண்டுகளில் இருந்து இலவசமாக அனைவருக்கும் கல்வி வளங்கப்பட்டு வருகிறது. 1980 களில் இருந்து 1 — 11 ம் ஆண்டு வரையிலுமான இல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வச பாடநூல்களும் வளங்கப்படுகிறது. இதனுடன் இலவச சீருடை திட்டம், இலவச மதிய உணவுத்திட்டம் என்பனவும் கிராம சமூக மேம்பாட்டுக்காக செயல் படுத்தப்படுகின்றன.

ஆ. சுகாதார சேவைகள்

இதுவும் 1940 களில் இருந்தே இலவசமாக வழங்கப்படுவதுடன் நாடு முழுவதிலும் மாகாண, மாவட்ட, நகர, கிராம ரீதியிலான ஆஸ்பத்திரிகளை நிறுவி சேவை வளங்குவதுடன் மலேரியா தடுப்பு மருந்து, விசிறல், நோய்த்தடுப்பு ஊசி யேற்றல் அறிவுபடுத்தல் போன்ற திட்டங்களையும் உள்ளடக்கியதாகும்.

இ. கிராம வீடமைப்புத் திட்டங்கள்

1980 களில் இருந்து மாதிரிக்கிராமங்களாகவும், சுயமுயற்சி வீடமைப்புகளாகவும் கிராம எழுச்சி வீடமைப்புக்களாகவும் பத்து இலட்சம் வீடுகளை அமைக்கும் இலக்கு நோக்கில் செயல்படுத்தப்பட்டது.

இவ் வகையில் கல்வியின் அபிவிருத்திக்கான திட்டங்கள் சுயமுயற்சியை ஊக்கப்படுத்தாது வெள்ளை சட்டை வேலை வாய்ப்பையே (White Colour Jobs) வளர்த்துள்ளது எனவும் சுகாகார நடவடிக்கைளில் குணப்படுத்தல் (Curettve) என்பதற்கே அதிக முக்கியம் கொடுக்கப்பட்டதாகவும் நோய் தடுப்புக் கென (Preuenttve) எடுத்த முயற்சிகள் குறைவு எனவும் வீடமைப்பைப் பொறுத்து வீடுகளுக்கு அருகிலேயே வீட்டுடமையாளர் வேலையினை பெறமுடியாதுள்ளதனால் வீட்டை விட்டு விலகும் நிலையும் ஏற்படுகிறது என எழுந்துள்ள தர்க்கநியாயங்களும் கவனத்துக்குரியதாகும்.

1-4-4 விவசாய உற்பத்தியை உயர்த்தும் திட்டங்கள்

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பதியில் 35% தினையும் தொழில் படைக்கான வேலை வாய்ப்பை வளங்குவதில் 54% தினையும் வகிக்கும் விவசாயத்துறையானது மொத்த சனத்தொகையில் 72% தினரை கொண்ட கிராமப்புறங்களிலேயே முக்கியம் பெறுகிறது இவ் வகையில் கிராம அபிவிருத்தியான உத்திகளில் முக்கியமானதாக இது அணுகப்பட்டது. அவ்வகையில்

அ) காணிக் குடியேற்யங்கள்

A) வரண்டவலய குடியேற்றங்கள்

B) ஈரவலய குடியேற்றங்கள் எனப் பாகு படுத்தலாம்-

ஆ) குளங்களும் நீர்ப்பாசன திட்டங்களும் புனரமைத்தல்

இ) விவசாய விஸ்தரிப்பு சேவை

ஈ) விவசாய கொடு கடன்கள்

A) புதிய விவசாய கொடுகடன் திட்டம் (NACS)

B) ஒன்றிணைக்கப்பட்ட கிராமீய கொடுகடன் திட்டம் (CRCS)

C) புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் (NCRCS)என மாற்றமடைந்து வந்துள்ளது.

உ) விவசாய காப்புறுதி

ஊ) நவீன தொழில் நுட்ப முறைகளின் அனுபவம்

எ) விருத்தி செய்யப்பட்ட இயந்திர சாதனை உபயோகம்

ஏ) கால் நடைமீன் பிடித்தொழில் அபிவிருத்தி

ஐ) கிராம சேவை கருத்திட்டங்கள் என்பனவற்றை குறிப்பிட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1–4–5 கிராம மக்களுக்கான கல்வி முன்னேற்ற திட்டங்கள்

கிராமிய மக்களின் பழமை வாத சிந்தனைகளுக்கு எதிராகவும் கிராமிய விழுமியங்கள் நியமங்கள் என்பனவற்றில் காணப்படும் முரண்பாடுகளுக்கு எதிராகவும் மக்களுக்கு அறிவுபடுத்தும் கருத்துக்களை வளங்கும் திட்டங்களாக இவை அமைந்தன உண்மையான சிந்தனை மாற்றத்தை அடைய இதனூடாக முயற்சிக்கப்பட்டது. இவ்வகையில்

அ) முறைசாராக் கல்விதிட்டம்

ஆ) வளர்ந்தோர் கல்விதிட்டம்

இ) போசாக்கு குடும்ப திட்டமிடல் பயிற்சி

ஈ) விவசாயப் பயிற்சி

உ) சுகாதாரப் பயிற்சி

ஊ) கிராமிய மட்ட பயிற்சி

எ) கிராம சமூக இலக்குக் குழுப் பயிற்சி

ஏ) கிராம தலைவர்கள் பயிற்சி போன்ற திட்டங்கள் குறிப்பிடக் கூடியன வாகும்

### 1–4–6 நிறுவக உருவாக்கத் திட்டங்கள்

கிராம மக்களின் பங்கு பற்றுதலுடனான அபிவிருத்தியை மையமாகக் கொண்டும், தலைமத்துவ பண்பினை வளங்கும் நோக்குடனும், கூட்டுறவு முயற்சிகள் பொதுக் கருத்துருவாக்கம் போன்ற நோக்கங்களுடனுமான கிராமிய நிறுவனங்களை உருவாக்கும் திட்டத்தினையே இது குறித்து நிற்கிறது. இவ்வகையில் இவை அரசியல் ரீதியாகவும், தற்சார்பான கிராம தலைமத்துவ அமைப்புகளாகவும் உருவாக்கப்பட்டன தற்சார்பான கிராமமட்ட நிறுவனங்கள் எனும் போது

அ) கிராம அபிவிருத்திச் சங்கங்கள்
ஆ) மரண நன்கொடையண்சங்கங்கள்
இ) கூட்டுறவுச் சங்கங்கள்

A) உற்பத்தி
B) நுகர்வு
C) விற்பனை

ஈ) ஐக்கிய நாணய சங்கங்கள்
உ) சமய சங்கங்கள்
ஊ) பொழுது போக்கு கழகங்கள்

எ) கமக்காரர் நிறுவனங்கள்

(A) வெல் விதான
B) பயிர் செய்கை குழுக்கள்
C) விவசாய விரிவாக்கக் குழுக்கள்
D) கமநல சேவைக் குழுக்கள்
E) வாய்க்கால் குழுக்கள்
F) உப குழுக்கள்
G) திட்டக் குழுக்கள்

என்பவற்றைக் குறிப்பிட முடியும்.

### 1–4–7 நிதி ஆதார நிறுவன ஏற்பாடுகள்

கிராம ரீதியான நிதிவளங்களில் உள்ள பிரச்சனைகளை தவிர்த்து கிராமத்தவருக்கான கடன் வசதிகளையும் சேமிப்பு ஏற்பாடுகளையும் வளங்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனங்களை இது குறிக்கும் அவையாவன

அ. கூட்டுறவுக் கிராமிய வங்கிகள்
ஆ. விவசாய சேவை நிலைய முகவரகங்கள்
இ. ஜனசவிய நம்பிக்கை நிதியம் போன்றனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1-4-8 வெளிநாட்டு ஒத்துழைப்பிலான கூட்டுத்திட்டங்கள்

கிராமியத்துறை அபிவிருத்திக்கென வெளிநாட்டு நிதிஉதவிகளை நேரடியாக நாடுகளினுடனும் நிதி நிறுவனங்களினுடனும் இணைந்து செயல்படுத்தும் திட்டங்களை இது குறித்து நிற்கும் 1976 இல் உலக வங்கியின் ஆதரவில் தொடக்கப்பட்டு 1979 இல் அமுலுக்கு வந்த ஒருங்கிணைக்கப்பட்ட கிராம அபிவிருத்தி திட்டங்கள், 1980 களில் அறிமுகப்படுத்தப்பட்ட ஏற்றுமதி கிராமங்கள், மற்றும் பரிச்சார்த்த அடிப்படையில் செயல்படும் திட்டங்கள் என்பனவற்றை இதனுள் குறித்துக் கொள்ளலாம்.

## 1 – 5 முடிவுரை

இதுவரையில் இலங்கையின் அனுபவ முயற்சிகளின் பல்வேறு அம்சங்களையும் நோக்கிய நாம் இனி இத்திட்டங்கள் கொண்டிருந்த பாதக அம்சங்களையும் அதனால் இலங்கை பெற்றுக் கொண்ட அனுபவங்களையும் ஆராய முற்படலாம். இவ்வகையில் கிராம ரீதியில் முன்வைக்கப்பட்ட திட்டங்கள் பலவுமே அரசாங்கத்தின் வழிகாட்டல் திட்டங்களாக இருந்ததனால் திட்ட வரைபுகளும் தீர்மானங்களும் மேலிருந்து கீழ் நோக்கி செல்லும் அணுகுமுறை (Topto bottom) கொண்டதாகவே காணப்பட்டது. இதனால் மக்கள் பங்குபற்றுதலும் தாமே தீர்மானங்களை எடுத்தலையும் இது தடுத்திருந்த·து அதனுடன் அரசு மக்களுக்கு செய்யும் கடமைகளில் ஒன்று என்ற கருத்துருவாக்கத்தையும் ஏற்படுத்தியும் இருந்தது திட்ட உருவாக்கத்திலும் திட்ட செயலமைப்பிலும் அரசும் பணித்துறையும் எடுத்த முயற்சிகள் இதனை நியாயப்படுத்தியிருந்தன திட்டங்களின் தொடரான செயல்பாடோ விளைவுகளோ மதிப்பிடப்படாது ஆட்சி மாற்றங்களின் போதும் தலமை மாற்றங்களின் போதும் புதிய புதிய பெயர் கொண்டு இவை கவர்ச்சிகரமாக்கப்பட்டது. வேலையின்மை வறுமை என்பனவற்றை உரிய வகையால் நீக்குவதனை கொண்ட திட்டங்களாக அன்றி உடனடி நெருக்கடிகளை நீக்கும் திட்டங்களாகவே இவை செயல்படுத்தப்பட்டன. இவ்வகையில் வேறுபட்ட கொள்கை முறைகளுக்கு ஏற்ப கவர்ச்சிகரமான பல திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் கூட அவை எதிர்பார்த்த நோக்குகளை அடையவில்லை என்பதுவே இலங்கையின் அனுபவமாகக் காணப்படுகிறது. இலங்கையில் மொத்த சனத்தொகையில் இன்னும் 27% மான குடும்பங்கள் நிலவுடமை எதுவுமே அற்றவராகவும் மொத்த சனத்தொகையில் 44% மான மக்கள் 200/- வுக்குட்பட்ட சராசரி வருமானத்தையே பெறுவதும் தொழிலற்றோரில் 70% மானவர்கள் கிராமத்துறை சார்ந்து காணப்படுவதும் வறுமைதணிப்பு தொடர்பாக 24 வருடங்களில் 27% மட்டுமே முன்னேறியுள்ளதும் இலங்கையின் கிராம அபிவிருத்தி செய்முறையின் விளைவுகளையே குறித்து நிற்கிறது.

### Reference

1. Guy Hunter, A. H. Bunting, Anthony Bottrall "Policy and Pratice in rural development" – The English Langue book Society – 1974

2. D. P. Sharma, V. V. Desai "Rural Economy of India" – Vikas Publishing house – I979



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) Michacl to daro
"Econcmic development on the third world"
- Longmam - Third Edition - 1986

4) வி. நித்தியானந்தன்
"இலங்கையின் அரசியல் பொருளாதார விருத்தி (1948-1856)
- கலைபீட வெளியீடு - 1989

5. Central Bank Anaual Reports

6. பொருளியல் நோக்கு 1989 Jan
1987 Feb
- மக்கள்வங்கி வெளியீடு -

ஆங்கிலம் வர்த்தகத்திற்குரிய மொழியானால் பிரான்ஸ் இராஜதந்திர மொழியானால் இத்தாலி காதலுக்கானால் கிரேக்கம் இசைக்கானால் ஜேர்மன் தத்துவத்திற்கானால் தமிழ் பக்திக்கும் கருணைக்கும் உரியதாகும்

— தனிநாயக அடிகள்

பேச்சை விட மௌனம் சிறந்தது
பேசித்தான் தீரவேண்டும் என்றால் அந்தப்பேச்சு
உண்மையாய், நேர்மையாய், இனிமையாய் இருக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் ஆடைக் கைத்தொழில் வளர்ச்சியும் இத்துறை எதிர்நோக்கும் பிரச்சனையும்

# Growth of Garment Industry in Sri Lanka and the Problem Faced by this Sector

இலங்கையின் தற்போதைய ஏற்றுமதித் துறையில் முதலிடம் பெறுவது ''தயார் செய்யப்பட்ட ஆடைக் கைத்தொழிலா கும். தெளிவாகச் சொன்னால் இலங்கைக் கைத்தொழிலின் முதுகெலும்பு என்று கூறு மளவிற்கு இதன் முக்கியத்துவம் குறிப் பிடுவதற்குரியது. அத்தோடு இவ் ஆடைக் கைத்தொழில் ஓர் ''ஊழியச் செறிவுடைய கைத்தொழிலாகக் காணப்படுவதால் இது தனியார் முதலீடுகளுக்கு அதிக இலாபம் தரக்கூடிய முறையாகக் காணப்படுவதுடன், இதன் செயற்பாடுகள் ''வெளிநாட்டு முத லீடுகளிலும் தங்கியுள்ளன''. இத்தகைய ஆடைக்கைத்தொழில் 1950 தொடக்கம் 1990 வரையிலான 40 வருடங்களில் இலங்கையில் பல்வேறுபட்ட வளர்ச்சிப் படிகளினூடாக முன்னேறிச் சென்றாலும், இத்துறையானது சில முக்கியமான பிரச் சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய அவசியப்பாடும் காணப்படுகின்றது. ஆத லால் இது பற்றி தெளிவாக அறியும் நோக்கோடு, 40 வருடகால ஆடைக் கைத்தொழிலின் வளர்ச்சி, இத்துறை எதிர் நோக்கும் பிரச்சனை என இருபகுதி களாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

முதலில் இலங்கையின் 40 வருட கால ஆடைக் கைத்தொழிலின் வளர்ச்சியினை தெளிவாகவும், சுருக்கமாகவும் நோக்கு வோம். இந்த வகையில் 1950 தொடக் கம் 1960 வரையான தசாப்தகாலம் முக் கியம் பெறுகின்றது. இலங்கையின் தைத்த ஆடைகளின் தொழிற்சாலையளவிலான உற்பத்தியின் ஆரம்பம் 1950 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணப்பட்டது. 1950 இன் தசாப்தகாலப்பகுதியில் துணிவகைகள், ஆடைவகைகளின் தடையற்ற இறக்குமதி அனுமதிக்கப்பட்டிருந்ததுடன், முன்னோடி உற்பத்தியாளர் பாரமபரிய சந்தைக்குள் நுழைய முயல்வதை பாரம்பரிய வர்த்தக சமூகத்தினர் எதிர்த்தும் வந்தனர். 1950 களின் தொடராண்டுகளில் இத்துறையா னது ''உள்ளூர் சந்தைக்கு ஆடைகளை வழங்குவதையே பிரதான நோக்காகக் கொண்டிருந்தது. முக்கியமாக இத் தசாப்த காலப்பகுதியை (1950—1960) ஏனைய தசாப்தங்களுடன் ஒப்பிடும்போது ஆடைக் கைத்தொழிலின் ஆரம்பமாக இருக்கின்ற வகையில் சிறப்புப் பெற்றாலும் ஏனைய கால வளர்ச்சி நிலையினைப் போல இக் காலம் அமைய முடியவில்லை. இதற்குரிய பிரதான காரணம் என்னவெனில், ''உள் ளூர் சந்தையை மையப்படுத்திய கைத் தொழிலாக இது இருந்தமையே ஆகும்.

அடுத்தாக 1960 ஆம் தசாப்த காலத்தை நோக்குவோமாயின், இக்காலப் பகுதியில் ஏறக்குறைய 300 வகையான கைத்தொழில் உற்பத்திகள் உள்ளூரில் உற்பத்தியாக்கப்பட்டன. இந்த உற்பத்தி களில் முக்கியமான தொன்றாக புடவை

ஆ. பிரபானந்தன்,
பொருளியல் சிறப்புக் கலை,
பகுதி II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகைகளும், தைத்த ஆடை வகைகளும் காணப்பட்டன. எனினும் ஆரம்பத்தில் இருந்து ஆடைக் கைக்தொழிலுக்கான மூலப்பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டு வந்தன. 1960 இன் தொடராண்டுகளில் இத்துறை தாபிக்கப்பட்டு தசாப்த முடிவில் கைத்தொழில் உற்பத்தியின் மொத்தப்பெறு மதியில் 8% கைத்தறி நெசவுப்புடவை வகைகள் பெற்றன. மொத்தக் கைத்தொழில் உற்பத்தியில் 4% தைத்த ஆடைகளும் ஏனைய ஆடைகளும் பெற்றன. 1960 களில் இத் தைத்த ஆடைக் கைத்தொழிலின் உற்பத்தியாளர்களாக "பென்ட்டி இன்டஸ்ரீஸ், பேர்னாட் பொதெஜீ இன்டஸ்ரீஸ் லிமிட், சிலோன் டயர் சேட்ஸ் கொம்பனி, கண்டி கார்மன்ட்ஸ், சிலோன் லங்கா வீவிங் மில்ஸ், வெலோனோ இன்டஸ்ரீஸ், நூர்டெக்ஸ் கார்மன்ட்ஸ் இன்டஸ்ரீஸ், மக்சிம்ஸ் லிமிடெட் முதலிய நிறுவனங்களை வரிசைப் படுத்திக்கூறமுடியும். 1960 களின் பிற்பகுதியில் இவ் ஆடைக்கைத்தொழில் ஓரளவு ஏற்றுமதித்துறையாக மாறிடினும், 1950 தசாப்தத்தை போலவே, 1960 களிலும் உள்நாட்டுச் சந்தையை மையமாகக் கொண்ட துறையாக அமைந்தது.

1970 களிலான தசாப்த காலப்பகுதியில் இத்துறையில் வளர்ச்சியை மதிப்பிடுவோமாயின் 1970 இல் நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி மட்டுப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து மூலப்பொருட்களின் இறக்குமதியிலும் கட்டுப்பாடுகள் அதிகமாயின. இக்காலப்பகுதியில் இத்தொழில் துறையில் மந்தநிலை ஏற்பட்ட அதே வேளை உற்பத்திச்செலவு அதிகரித்து வந்தது. எனினும் 1972 ஆம் ஆண்டளவில் சில துறைகளை ஏற்றுமதி சார்பான அணுகுமுறைகளை கடைப்பிடிக்க அனுமதிப்பதற்காகத் தொடர்ந்து இத்தொழிற்துறை தொடர்பான மனப்பாங்கும் மாற்றத்திற்கு உட்பட்டது. தெளிவாகச் சொன்னால் 1970 களின் ஆரம்பத்தில் வழங்கப்பட்ட சலுகைகளால் பெற்ற நன்மைக்கான சான்றினை அடுத்து வந்த எட்டு ஆண்டுகளில் ஏற்றுமதிகளில் பதிவு செய்யப்பட்ட பெருக்கத்தில் இருந்து காணமுடிகின்றது.

இலங்கையின் தயார் செய்யப்பட்ட ஆடை ஏற்றுமதியின் அளவும், பெறுமதியும் 1972—1979

| வருடம் | அளவு (10 இலட்) பக்கெட் | சதவீத வளர்ச்சி | கப்பற்றளம் வரையிலான பெறுமதி (10 இலட்) | சதவீத வளர்ச்சி |
|---|---|---|---|---|
| 1972 | 0.72 | — | 6.1 | — |
| 1973 | 1.20 | 67 | 14.1 | 131 |
| 1974 | 2.16 | 80 | 29.3 | 108 |
| 1975 | 2.28 | 6 | 30.7 | 5 |
| 1976 | 3.60 | 58 | 70.8 | 13 |
| 1977 | 7.17 | 74 | 139.8 | 103 |
| 1978 | 12.64 | 76 | 457.5 | 227 |
| 1979 | 33.96 | 169 | 1103.5 | 141 |

ஆதாரம்- பொருளியல் நோக்கு 1989 ஏப்ரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970 களின் முதல் ஆறு ஆண்டுகளிலும் ஏறக்குறைய 2500 க்கு மேற்பட்ட கைத்தொழில் பிரிவுகள் ''உள்ளூர் கைத்தொழில் அங்கீகாரக் குழுவிடம்'' இருந்து அங்கீகாரம் பெற்றன. அவற்றில் ஏறக்குறைய 2000 அலகுகள் புடவை, புடவை சார்ந்த கைத்தொழில்களில் ஈடுபட்டிருந்தன. இத்துறைக்கென வழங்கப்பட்ட பல் வேறு ஊக்குவிப்புக்களை விட வேறும் பல காரணிகள் இதன் நிலையான வளர்ச்சிக்கு காரணமாக அமைந்தன. இத்துறையிலான அதிகரித்த முதலீட்டிற்கான முக்கிய காரணம், இச்சந்தைகளின் பெருக்கத்திற்கு காணப்பட்ட வாய்ப்பு மற்றும் தைத்த ஆடைகளின் உற்பத்தியாளர் பெற்ற உயர் இலாபங்கள் என்பனவாகும். 1970 களின் சம்பள விலை அதிகரிப்பும். கொங்கொங், தைவான், தென்கொரியா, சிங்கப்பூர் போன்ற பாரம்பரிய ஆசிய வழங்குநர்களின் ஏற்றுமதிகளில் வர்த்தக அமைதிப்பங்குகள் விதிக்கப்பட்டமையும், இலங்கைக்கு சாதகமாயிற்று. இதுமட்டுமல்ல ஒப்பீட்டளவில் குறைந்த செலவில் இலங்கையில் கிடைக்கக்கூடியதாக இருந்த தொழிலாளர் படையும், திருப்திகரமான உள்ளக அமைப்பு வசதிகளும் 1970 இன் தசாப்த இறுதியில் தீவிர முன்னேற்றமடைய வழிவகுத்தது.

இலங்கையின் ஆடைக்கைத்தொழிலைப் பொறுத்தவரை 1980 – 1990 வரையான தசாப்த காலப்பகுதியில் இத்துறையின் ஏற்றுமதிகள் அதிகரித்தன. உதாரணமாக, 1970 இல் 17 இலட்சம் ரூபா பெறுமதியான ஆடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டதுடன் இது 1980 இல் 5 கோடியே 16 இலட்சம் ரூபாவாக உயர்ந்துள்ளமை இதைப் புலனாக்குகிறது. பெறுமதி நியதிகளைப் பொறுத்த வரையில் 1967 இல் ஆடை உற்பத்திகளின் மொத்த ஏற்றுமதியின் வளர்ச்சியினை ''மிகவும் நுணுக்கமாக மதிப்பிடுதல்'' அவசியம். இவ்வகையில் 1977 இல் தாராளமாக்கப்பட்ட வர்த்தகத்துடன் இலங்கையின் ஆடையுற்பத்தி பெறுமதி 1238.3 கோடி ரூபாவாக இருந்தது. 1980 இல் தொகையான 180.8 கோடி ரூபாவுடன் ஒப்பிடுகையில் இதில் ஏழு மடங்கு அதிகரிப்புக் காட்டியது. இவ்வாறாக, 1980-1987 வரையான காலத்தில் ஆடைக் கைத்தொழிலின் வளர்ச்சி மிகவும் துரிதமடைகின்றது. எனினும் 1988 ஆம் ஆண்டு இத்துறையைப் பொறுத்து ஒரு துரதிஸ்டவசமான காலமாகும். 1988 இல் ஏறக்குறைய 10 இலட்சம் அமெரிக்க டொலர் அதிகரிப்பு காணப்பட்ட அதே வேளையில் எஸ். டி. ஆர் நியதி விலையில் 80 இலட்சம் எஸ். டி. ஆர் வீழ்ச்சி காணப்பட்டது. இதற்குப் பின்னணியாக, 1988 இல் ஏற்பட்ட குழப்ப நிலையினையும், விலைவீழ்ச்சியையும் கூறமுடியும். இதனை பின்வரும் புள்ளிவிபரம் விளக்கி நிற்கும்.

| வருடம் | அளவு(10இலட்) பக்கெட் | சதவீத வளர்ச்சி | கப்பறளம் வரையிலான ஏற்றுமதி(10இலட்) | சதவீத வளர்ச்சி |
|---|---|---|---|---|
| 1980 | 51.51 | 52 | 1808.4 | 64 |
| 1981 | 58.64 | 14 | 2956.8 | 64 |
| 1982 | 65.98 | 13 | 3444.9 | 17 |
| 1983 | 84.09 | 27 | 4635.6 | 35 |
| 1984 | 150.66 | 79 | 6812.4 | 53 |
| 1985 | 166.16 | 4 | 7687.8 | 5 |
| 1986 | 171.31 | 10 | 9254.1 | 20 |
| 1987 | 187.89 | 10 | 12383.4 | 35 |
| 1988 | 188.55 | 1 | 13651.7 | 9 |

ஆதாரம்:- பொருளியல் நோக்கு, 1989 ஏப்ரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே அட்டவணையின் பிரகாரம் 1987 வரை வளர்ந்து வந்த ஆடைக் கைத்தொழில் திடீரென 1988 இல் வீழ்ச்சியடைந்து, இதன் தாக்கம் 1989, 1990 களிலும் ஓரளவு பிரதிபலித்தது. இவ்வாறாக 1950 இல் ஆரம்பித்த இத்துறையானது 1990 வரை பல்வேறுபட்ட வளர்ச்சி நிலைகளில் வளர்ந்து செல்வதை ஆதார பூர்வமாக அறியமுடிகிறது. மேலே கூறப்பட்ட இவ் வளர்ச்சிப் போக்கானது இத்துறையில் தொழிற்செறிவுத் தன்மையையும் செலாவணி உழைக்கும் தன்மையினையும், அதன் மகத்துவத்தினையும் படம் பிடித்துக்காட்டுகின்றது. தொழில் செறிவினை சுருக்கமாக நோக்குவோமெனில் 1977 க்கு முன்பு இடம்பெற்ற இறக்குமதி பதிலீட்டு கைத்தொழில் முயற்சியின் ஒரு பிரதான குறைபாடாக குறிப்பிடுவது. யாதெனில் அதன் கீழ் முன்னெடுக்கப்பட்ட கைத்தொழில்கள் பலவும் உயர்ந்த மூலதனச் செறிவுடையவையாக இருந்த காரணத்தினால் போதியளவு, தொழில் வாய்ப்புக்களை அவை உருவாக்கவில்லை என்பதேயாகும். எனினும் பிற்பட்ட கைத்தொழிலில், ஆடைக்கைத்தொழில் முக்கியம் பெற்றமையினாலும், இவ் ஆடைக் கைத்தொழில் ஊழியச் செறிவுடையவையாக பெருமளவு அமைவதனாலும் அதிக வேலை வாய்ப்பை உருவாக்கக் கூடியதாக அமைகின்றது. இவ் ஆடைக் கைத்தொழினாலான வேலை வாய்ப்பானது முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தினூடாகவும், அதற்குப் புறம்பாகவும், பெருமளவு அந்நிய முயற்சியின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழில்களாகவே காணப்படுகின்றன. ஊக்குவிப்பு வலயத்தினாலான தொழில் வாய்ப்பு 1985 இல் 32340 என்ற அளவில் இருந்து 1986 இல் 41614 ஆக அதாவது 29% அதிகரித்தது. இதில் 82% மானவை (33937 பேர்) துணி ஆடைகள், தோற்பொருட்கள் பிரிவில் ஏற்பட்டிருந்தன. மேலும் 1992ல் இலங்கை முதலீட்டு சபை (Board of Investment) நிறுவனங்களின் வேலைவாய்ப்பு பெற்றிருந்தோரின் மொத்த எண்ணிக்கை 104, 239ஆக இருந்தது. இதில் 65465 பேர் அல்லது 63% பிடவை, ஆடைஅணி, தோற்பொருட்கள் சார்ந்த துறையாகும்.

இவ்வலயங்களுக்கு புறம்பாக, அந்நியரால் தொடங்கப்பெற்ற கைத்தொழில்களில் 1986 இல் 26769 பேர் தொழில் வாய்ப்பு பெற்றிருந்தனர். இந்த எண்ணிக்கையின் 65% (17277) பேர் துணி ஆடைக் கைத்தொழில்களில் உள்ளடங்கியிருந்தனர். எனினும் இத்தகைய துறையானது பல பிரச்சனைகளுக்கும் அவ்வப்போது முகங்கொடுக்க வேண்டிய அவசியப்பாடு காணப்படுகின்றது. இது பற்றிய ஒரு மதிப்பீட்டினை இக்கட்டுரையின் அடுத்த பகுதி ஆராய்கிறது.

இந்த வகையில் இலங்கைக் கைத்தொழில் குறிப்பாக ஏற்றுமதித்துறையில் இன்று பிரபல்யம் அடைந்திருக்கும் இத்துறையானது, சில பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளதால் இலங்கையின் ''ஏற்றுமதி அபிவிருத்தியின் எதிர்காலமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னது இருண்டதாகக் காட்சியளிக்கின்றது. இந்நோக்கில் இவ் ஆடைக் கைத்தொழில் எதிர்நோக்கும் பிரச்சனைகளை வரிசைப் படுத்துவோமாயின், இலங்கையின் உள் நாட்டு அரசியல், இனப்பிரச்சனைகள் இத் தொழில் வளர்ச்சிக்குப் பாதகமான நிலை மைகளைத் தோற்றுவித்து வருகிறது. உதா ரணமாக 1983 இன் கலவரங்களினால் ஏறக் குறைய 30 நிறுவனங்கள் தம் தொழிலை கைவிட வேண்டிய நிலையேற்பட்டுள்ளது. தொழிலாளர்களில் 15000 பேர் வரை தொழில் இழந்திருந்தமை குறிப்பிடத்தக் கது. இத்தகைய நட்டங்கள் ஏற்படும் நிலை தொடர்ந்து தென்படுவது இத்தொழி லைப் பாதிக்கும்.

மேலும் ஆடைக்கைத்தொழில் அதிக செலாவணி உழைக்கின்ற போதும் அதிக ளவு இறக்குமதிகளை சார்ந்திருப்பதால் செலாவணி உழைப்பில் குறிப்பிடத்தக்களவு மீண்டும் வெளியேறி விடுகிறது. இதனால் தேறிய செலாவணி வருவாய் குறைவாகவே யுள்ளது. இது இக்கைத்தொழிலைப் பின்ன டையச் செய்கின்றது.

உலக சந்தையில் இந்த ஏற்றுமதிக ளிற்கு தீவிரமான போட்டி நிலவுகிறது. தென்கிழக்காசிய நாடுகள் இதில் முக்கிய மானவை. கொங்கொங், தென்கொரியா, இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து போன் றன பிரதான போட்டி நாடுகளாகும். மேலும் இலத்தீன் அமெரிக்காவில் பிறேசில், மெக்சிக்கோ, ஆகியனவும் இதில் ஈடுபடுகின் றன. இத்தகைய நிலையினை இலங்கை தொடர்ந்து பேணுவதற்கு முக்கியமாக தரத்தினை உயர்த்துதல் அவசியம். இதற்கு முதலீடுகள் தேவை. இதனை இலங்கை மேற்கொள்ள முடியுமா? என்பது பிரச்சனை யாகவே உள்ளது.

மேலும் பொதுவாக இலங்கையின் ஆடைக்கைத்தொழில் ஏற்றுமதியானது அதனை இறக்குமதி செய்யும் நாடுகளின் உள்ளூர் உற்பத்திகளைப் பாதித்தது. இத னால் அங்கு உற்பத்தி குறையலாயிற்று. இதனால் இலாபம் குறைந்தது. இலாபங் குறைய பல தொழிற்சாலைகளும் மூடப் பட்டன. இதைக்கண்ட ஐக்கிய அமெரிக்கா, கனடா, வடமேற்கு ஐரோப்பிய நாடுகள், ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள், அவுஸ்ரேலியா போன்ற நாடுகள் பிரச்ச னையை உணர்ந்தன. இதனால் 1976 இல் 30 நாடுகளின் நலன்கருதி பல்நார் ஒப்பந் தம் (Multi - firbe agreement) செய்யப்பட் டது. இது இலங்கைக்கு பெரிய தலையிடி யாகியது. அத்தோடு 1991 இல் இப்பல்நார் ஒப்பந்தம் புதுப்பிக்க முயற்சிகள் மேற் கொள்ளப்படவிருந்தன. இதுவும் ஆடைக் கைத்தொழிலின் எதிர்காலத்தை கேள்விக் குரியதாக்குகின்றது.

மேற்கூறப்பட்ட இன்னோரன்ன பிரச் சனைகளால் நடைமுறையிலும் எதிர்காலத் திலும் இலங்கையானது இத்துறை தொடர் பாக முக்கியமான சில அபிவிருத்தி நடவ டிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந் தது. அவ்வாறு மேற்கொள்ளினும், அது எவ்வளவு தூரம் சாத்தியப்படும் என்பது அடுத்த பிரச்சனையாக உள்ளது. எனினும் ''இலங்கை ஆடை உற்பத்தியாளர் சங்கம்'' முக்கியமான சில அபிவிருந்தி குறித்த நட வடிக்கையின் கீழ் ஒழுக திடசங்கற்பம் பூண் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தெளிவாகச் சொன்னால் ஏற்றுமதி செய்யக்கூடிய ஆடை களுக்குப் பொருத்தமான புடைவைகளைத் தயாரிப்பதற்காக நவீன ஆலைகளை ஸ்தா பித்தல். ஆடைக்கைத்தொழிலுக்கும், புட வைக் கைத்தொழிலுக்கும் இடையில் இணைப்பினை உண்டுபண்ணுதல், ஏற்று மதிமுறைகளை எளிமைப்படுத்தல், சந்தை களை கவரும் வகையில் தயாரித்த ஆடை களின் தரத்தை உயர்த்துதல் முதலான நட வடிக்கைகளை அபிவிருத்தி நோக்கி மேற் கொள்ளும் போது முழு அளவில் இல்லாது விட்டாலும், ஓரளவேனும் எழும் பிரச்சனை களை தீர்த்துக்கொள்ளலாம் என்பது முடிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக தொகுத்து நோக்குவோமா யின் 1950 தொடக்கம் 1990 வரையான நான்கு தசாபதங்களில் இலங்கையின் ஆடைக் கைத்தொழிலானது (இடையிடையே தளம்பல் ஏற்படினும்) தொடர்ச்சியான ஒரு வளர்ச்சியினை எய்தியிருக்கின்றன. இத்தகைய நிலையினை இலங்கை தொடர்ந்தும் பேணுமா என்பது இலங்கை இத்துறைத் தொழில் தொடர்பாக முகம் கொடுக்கும் பிரச்சனையின் தன்மையைப் பொறுத்தே அமையும். எது எவ்வாறாக இருப்பினும் ஆடைக் கைத்தொழிலானது இலங்கை ஏற்றுமதி வருமானங்களில் அதிக பங்கினைப் பெற்றுத் தருகின்றது என்பது வெளிப்படை உண்மை. ●

---

*உசாத்துணை நூல்கள்:-*


1. பொருளியலாளன், யூன் 1988 மலர் 2
2. பொருளியல் நோக்கு அக்டோபர் 1989
   பொருளியல் நோக்கு அக்டோபர் 1988
   பொருளியல் நோக்கு ஜூலை/ ஆகஸ்ட் 1989
3. இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகள் 1988
4. மத்திய வங்கி பொருளாதார மீளாய்வு 1987
5. மார்க்கம் இதழ் 1, மலர் 4 - 1993


*இடிகள் இடித்தாலும், மின்னல்கள் மின்னினாலும் அவற்றையும் பொருட்படுத்தாது சாதகபட்சி மேகத்திலிருந்து பொழியும் நீர்த்துளியைத்தான் பருகுமே ஒளிய, வேறு நிலைகளைத் தேடிச் சொல்லாது. அதே போல உன் இலட்சியத்திற்கு எவ்வளவு இடுக்கண் நேர்ந்தாலும் அதைவிட்டுப் பிற இலட்சியங்களுக்குச் செல்லாதே*

—சுவாமி விவேகானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்களும் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரசும்

# The Indian Estate Labourers and Ceylon Workers Congress

ஒரு சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அரசியலும் பொருளாதாரமும் இன்றியமையாத அம்சங்களாகும். 19 ஆம் நூற்றாண்டுகளில் ஏகாதிபத்தியங்களின் குடியேற்றக் கொள்கைகளும், அதன் அடிப்படையில் ஏற்பட்ட நாடு பிடிக்கும் ஆசையும் கீழைத்தேய நாடுகளின் சமூக பொருளாதார நிலைமைகளில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. இந்நிகழ்ச்சியே இலங்கையின் மத்திய மலைநாட்டில் தனியானதோர் சமூகத்தின் தோற்றத்திற்கும், பண்பாடு, கலாசாரம் என்பவற்றிலிருந்து வேறுபட்ட தன்மையுடைய இந்தியத் தமிழரின் வருகைக்கும் காரணமாயிற்று. அந்த வகையில், இம்மலையக மக்கள் இலங்கையில் அரசியல் ரீதியாகப் பெற்றுள்ள தனித்துவத்தினையும் பொருளாதார ரீதியாகப் பெற்றுள்ள முதன்மை நிலையினையும் விளங்கிக் கொள்வதற்கு அவர்கள் கட்சி ரீதியான வளர்ச்சியூடாக எந்தளவுக்குத் தம்மை இனங்காட்டிக் கொண்டனர் என்பதை இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரசின் தோற்றமும் வளர்ச்சியும் சான்று பகர்கின்றது.

செல்வி மாலினி குணரட்ணம்,
உதவி விரிவுரையாளர்,
அரசறிவியல்,
பொருளியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

அதாவது இலங்கையின் கட்சி முறையின் தோற்றம், வளர்ச்சி என்பவற்றில் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் கணிசமான முக்கியத்துவத்தினைப் பெற்றுள்ளதுடன் மலையக மக்களின் அரசியல் பொருளாதார உரிமைகளைப் பேணும் ஒரு அமைப்பாகவே அது உருப் பெற்றது எனக் கூறினால் அது மிகையாகாது. 1911 ஆம் ஆண்டில் இலங்கைத் தொழிலாளர் அணியில் 5, 85, 952, பேர் தோட்டத் தொழிலாளராகவும் 75,000 பேர் மாத்திரமே நகரத் தொழிலாளராகவும் இருந்தனர். இதைவிட இலங்கையில் தோன்றிய முதலாவது தொழிலாளர்களின் வேலை நிறுத்தமான தேர்ஸ்டன் கைத்தொழில் பாடசாலையைச் சேர்ந்த (Thurston Industrial School) தச்சுத் தொழிலாளர்களின் (Carpenter) வேலை நிறுத்தம் 1860 இல் நடைபெற்றது. இது ஒரு வருடம் நீடித்தது. இதன்பின் 1899 இல் இடம் பெற்ற அச்சுத் தொழிலாளர் வேலைநிறுத்தம் முதலாவது தொழிற்சங்கத்தைத் தோற்றுவித்தது. இதுவும் குறுகிய காலமே நீடித்தது.

1920 இல் முதற்றடவையாக தீவிர தொழிற்சங்கப் போராட்ட இயக்கம் ஆரம்பமானது. இவ்வியக்கத்திற்கு ஏ. இ. குணசிங்கா தலைமை கொடுத்தார். இவரது தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் சங்கத்தினால் 1923 இல் நடத்தப்பட்ட முதலாவது பொது வேலை நிறுத்தம். தொழிற்சங்க இயக்கம் ஒரு கட்டத்திற்கு வளர்ந்துவிட்டதற்குச் சான்று பகர்கின்றது. இப்போது வேலை நிறுத்தத்தில் சுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20,000 தொழிலாளர்கள் பங்கு கொண்டனர். அந்த வகையில் 1920 ஆம் ஆண்டுகள் தொடக்கம் இந்தியத் தோட்டத் தொழிலாளர் மத்தியில் ஆரம்பமான தொழிற்சங்கங்களிடையே தொழிலாளரின் பலம் சிதறுண்டிருந்ததினால் அவர்களின் அபிலாசைகளைத் தெளிவாக வெளிப்படுத்தி, அவர்களின் அரசியல், பொருளாதார உரிமைகளுக்காகப் போராடுவதற்கு அவர்கள் அனைவரையும் அகங்கொண்ட ஒரு பெரும் நிறுவனம் அவசியமாயிற்று. இக்குறையைப் போக்கவென இந்திய வம்சாவளியினருக்கு பாதகமான அரசாங்க நடவடிக்கைகள் சம்பந்தமாக இலங்கைக்கு வருகை தந்த ஜவகர்லால் நேரு அவர்களின் ஆலோசனையின் பெயரில் திரு. ஜி. ஆர். மோதா, திரு. எஃப். எக்ஸ் பெரெய்ரா போன்றோர் தலைமையின்கீழ் 15-07-1939 இல் இலங்கை இந்தியக் காங்கிரஸ் அங்குரார்ப்பணமாகியது. மேலும் 1939 இல் பயிற்றப்படாத தொழிலாளர் வெளியேற்றத் தடைச்சட்டத்தை இந்தியா நிறைவேற்றிய பின்னரே இந்தியாவிலிருந்து தொழிலாளர் வருகை நின்றது. அதன் பின்னரே இங்கு பலமான தொழிற்சங்கங்கள் உருவாக முடிந்தது.

இங்கு மலையகத் தொழிலாளர் மத்தியில் தொழிற்சங்க இயக்கத்தைத் தோற்றுவித்த ஆரம்ப கர்த்தா திரு. நடேசஐயராவார். இவர் தனது அகில இலங்கைத் தோட்ட தொழிலாளர் சம்மேளனத்தை (Ceylon Indian Workers Federation) 1920 களில் ஆரம்பித்தார். 1922 இல் அது ஓரளவு அங்கீகாரம் பெற்ற இயக்கமாக வளர்ந்தது. 1925 இல் ஏ. இ. குணசிங்காவின் தொழிலாளர் சங்கத்துடன் இணைந்து செயற்பட்டதுடன் அதில் துணைத்தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார். ஆனால் 20 களின் இறுதியில் ஏ. இ. குணசிங்காவிடம் இந்திய எதிர்ப்புணர்வு அதிகரித்து வந்ததினால் நடேச ஐயர் அதனை விட்டு வெளியேறினார்.

மேலும் 1920 களின் தொடக்கத்தில் நகர்ப்புற இந்தியத் தொழிலாளர் ஏ. இ. குணசிங்காவின் தொழிற்சங்கத்தில் அணி திரண்டனர். ஆயினும் 1920 இன் இறுதியில் அவரது இந்திய எதிர்ப்புவாதம் வெளிப்பட ஆரம்பித்ததும், இந்தியத் தொழிலாளர் அவரை விட்டு வெளியேறினர். ல. ச. ச. கட்சியின் ஆரம்பத் தொழிற்சங்க நடவடிக்கையின் அடித்தளமாக இவ்வாறு ஏ. இ. குணசிங்கா மீது அதிருப்தி கொண்ட இந்திய நகரத் தொழிலாளர்களே அமைந்தனர். இவர்களின் மத்தியிலிருந்தே இலங்கை இடதுசாரித் தொழிற்சங்க இயக்கம் முதலில் தோன்றியது. இதன் தொடக்கமாகவும் ஏ. இ. குணசிங்காவின் வீழ்ச்சியின் அறிகுறியாகவும், வெள்ளவத்தை நெசவாளர் வேலைநிறுத்தம் அமைந்தது.

இந்நிலையில் புதிய நிறுவனமாகிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை வாழ் இந்தியர் அனைவரின் நலனுக்காகப் பொதுவாக உழைத்தாலும் தோட்டத் தொழிலாளரின் விமோசனத்தில் அவர்களின் அரசியல் சட்ட உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதில் விசேட கவனம் செலுத்தியது. சாதாரண தொழிற்சங்க நடவடிக்கைகளில் அதிக நேரத்தைச் செலவழித்தது. இடையிடையே பல முக்கிய அரசியற் பிரச்சனைகளும் அதன் கவனத்திற்காளாகியது. உதாரணமாக இந்தியத் தமிழரின் பிரதிநிதித்துவம் சம்பந்தமான கருத்துக்களைச் சோல்பரி ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்துள்ளது. ஆணைக்குழுவின் திருப்தியற்ற சிபார்சுகளை ஆட்சேபித்து 1946 இல் கர்த்தால் ஒன்றை நடத்தித் தனது பலத்தினை வெளிப்படுத்தியும் உள்ளது.

• மேலும் நடேச ஐயர் தோட்டப் பகுதியில் தொழிற்சங்கத்தை முதலில் ஸ்தாபித்தபோதும் சமசமாஜிஸ்டுகள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் இறங்கிய பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னரே தோட்டப் புறங்களில் வேலை நிறுத்தங்களும், போராட்டங்களும் உத்வேகம் பெற்றன. இவ்வாறு மலையகப் பகுதியில் இடது சாரிகள் வேரூன்றத் தொடங்கிய காலப்பகுதியில்தான் 2 ஆம் உலக மகாயுத்தம் வெடித்தது. யுத்தத்தின் போது பிரித்தானியருக்கு ஒத்துழைப்பு நல்க மறுத்த ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தைத் தீவிரபடுத்திய சமசமாஜக் கட்சித்தலைவர்கள் 1940 ஜூன்மாதம் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். இதனால் இவர்களது தொழிற்சங்கம் மலையகத்தில் வளர முடியாமல் போனது. அதன்பின்பு 1940 ஜூலை 29 ஆம் திகதி தோட்டத்துரைமார்கட்கும், தொழிற்சங்கப் பிரதிநிதிகட்கும் இடையே 7 அம்ச ஒப்பந்தமொன்று கைச்சாத்தானது.

இவ்வேழு அம்ச ஒப்பந்தத்தைத் தொடர்ந்து பூர்ஷ்வாக்கள் தலைமையிலான "இலங்கை இந்தியக் காங்கிரஸ் தொழிற் சங்கம்" (Ceylon Indian Congress Labour Union) வேகமாக வேரூன்றத் தொடங்கியது. இதன் பெயர் 1950 இல் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என மாற்றப்பட்டு இன்றளவும் பலம்மிக்க மலையகத் தொழிற் சங்கமாக; அவர்களின் அரசியல், பொருளாதார உரிமைகளைப் பேணும் ஒரு அமைப்பாக இருந்து வருகின்றது. ஏனைய கட்சிகளின் ஆரம்ப அமைப்புப் போன்று செல்வாக்குடைய பிரமுகர்களை மையமாகக் கொண்டு இயங்கிய இக்கட்சி 1947 பொதுத் தேர்தலில் கட்சியமைப்பாளர்களிலிருந்து நிறுத்தப்பெற்ற அதன் அபேட்சகர்களில் அறுவர் வெற்றி பெறவும் வேறு 14 தேர்தல் தொகுதிகளில் இடதுசாரிகள் வெற்றி பெறவும் உதவியுள்ளது. இந்த வரலாற்றுப் பின்னணியிலியங்கும் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரசின் நோக்கங்களாக தொழிலாளரின் வேலை நிபந்தனைகள், வாழ்க்கைநிலை, சமூக அந்தஸ்து ஆகியவற்றை மேம்படுத்துதல்; தேசிய சர்வதேச சட்டங்களில் தொழிலாளரிடையே ஒருமைப்பாடு, சகோதரத்துவம், சேவை மனப்பான்மை பரஸ்பர உதவி போன்றவற்றை வளர்த்தல்; தொழிற்றுறையையும் சமுதாயத்தையும் சார்ந்த பொறுப்புணர்ச்சியைத் தொழிலாளரிடையே முன்னேற்றுதல்; தொழிலாளரின் வேலைத்திறமையையும் கட்டுப்பாட்டுணர்ச்சியையும் பெருக்கல்; தொழிலாளரின் ஆளுமை வளர்வதற்குக் குறுக்கே நிற்கும் தடைகளை நீக்கல்; சமூக பொருளாதாரச் சுரண்டல்களையும், சமத்துவமின்மையையும் படிப்படியாக ஒழித்தல்; இலாபத்தைக் கருதி சமூக நலனுக் கொவ்வாத வகையில் பொருளாதார அமைப்பும் அதிகாரமும் ஒருசிலர் கையில் குவிந்திருத்தலை மாற்றல் போன்ற நடவடிக்கைகள் அமைந்துள்ளது.

மலையகத்தில் மட்டுமல்லாது தென் கிழக்காசியாவிலேயே மிகப் பெரிய தொழிற் சங்கம் என்ற இடத்தைப் பெற்றுவிட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், "மலையக மக்களின் அரசியல் பொருளாதார உரிமைகளைப் பேணும் ஒரு அமைப்பு" என்ற வகையில் திரு. தொண்டமான் தலைமையில் இயங்கி வருவதுடன் இடதுசாரிகள் நகரத் தொழிலாளரிடையே மிகவும் செல்வாக்குப் பெற்ற இயக்கமாகவும் உள்ளது. தொண்டமான் பூர்ஷ்வாபாணியில் தேசிய உடைமைப் பிரச்சினையைச் சட்டப் பிரச்சினையாக மாற்றி எப்படியோ தீர்வும் கண்டார். அத்துடன் அவர் தன்னை இதன் மூலம் தனிப்பெரும் தலைவராக உயர்த்திக் கொண்டார். இ. தொ. கா. என்றால் தொண்டமான்; தொண்டமான் என்றால் இ. தொ. க என மாறி விட்டது. இதற்குக் காரணம் முதலாவதாக இந்தியத் தமிழர் தேசிய இனப்பிரச்சினையையும், தேசிய உணர்வுகளையும் ஏனையோர் அடியோடு நிராகரித்த அதே சமயம் இ. தொ. கா. அதனையே அடித்தளமாகக் கொண்டு தன்னைக் கட்டி வளர்த்துக் கொண்டது. மேலும் இ. தொ. கா. பணபலம் மிக்கதாக

வும், அப்பணம் தொண்டமானின் கட்டுப்பாட்டிலிருந்து வருவதும் குறிப்பித்தக்கது.

ஆயினும் ஆரம்பகாலத்தில் இ. தொ. கா. வின் பொதுச் செயலாளராகவிருந்த ஜனாப். ஏ. அஸீஸ் அவர்கட்கும் தொண்டமானுக்கும் இடையே ஏற்பட்ட கருத்துவேறுபாடு காரணமாக அஸீஸ் வெளியேற்றப்பட்ட பின் அவர் ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் என்ற பெயரில் தனியான தொழிற்சங்கமொன்றை அமைத்தார். இது மலையகத்தில் மிகவும் செல்வாக்குப் பெற்ற தொழிற்சங்கமாகத் திகழ்ந்ததோடு தொண்டமானோடு பணபலத்தில் போட்டி போடக் கூடிய பூர்ஷ்வாவாக அஸீஸ் திகழ்ந்தபடியால் இ. தொ. கா. வுடன் போட்டியிட முடிந்தது.

அடுத்து இனப்பிரச்சினைத் தீர்வுக்காக இ. தொ. கா. சமர்ப்பித்த யோசனைகள்: மலையகப் பகுதிகளில் தீவிரவாத நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டவர்கள் எனக் கூறிச் சிலர் தடுத்து வைக்கப்பட்டு அவர்களைச் சாட்டாக வைத்துக் கொண்டு இனவாதப் பிரச்சாரத்தை முன்னெடுத்து ஊக்குவிக்கும் போர்வைகளாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு இ. தொ. கா. தலைவர் திரு. எஸ். தொண்டமான் நுவரெலியாவில் நடைபெற்ற 31 வது இ. தொ. கா. மகாநாட்டில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் தொடர்ந்து பேசிய தொண்டமான்.

''இந்திய தமிழ்ச்சமூகத்துக்செதிராக என்றுமே செயற்பட்டு வந்தவர்களே இச்சமூகத்தின் சமூக பொருளாதார நிலையைச் சீர்குலைக்க மிகத் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர்; தோட்டப் பகுதிகளில் பிறந்து வளர்ந்த இந்தியச் சமுதாயம் தேசிய நீரோட்டத்தில் கலந்து விடாதவாறு சமய இனவெறிச் சக்திகள் இந்திய விரோத சக்தியாக மீண்டும் உருவாகிச் செயற்படுகின்றன. இந்நிலையில் நாட்டில் ஒற்றுமை, சமாதானம் நிலவும் இ. தொ. கா. தொடர்ந்து போராடத் தயங்காது; இலட்சியத்திலிருந்து பின் வாங்கமாட்டாது.''

மேலும் நாட்டின் தோட்டத் தொழிலாளரின் வருவாயையும் நலவுரிமைகளையும் அதிகரிக்கச் செய்யும் சக்தி வாய்ந்த திட்டமாக தோட்டச் சீரமைப்பு அமைந்துள்ளது. தோட்ட நிர்வாகங்களைத் தனியாரிடம் கையளிப்பதைப் பகிரங்கமாக ஆதரித்து நிற்பது இ. தொ. கா. மட்டுமே. இதன் மூலமே வேலைவாய்ப்பு அதிகரிக்கப்பட்டு கொத்தடிமை நீங்கி புதிய சமூக அந்தஸ்தைப் பெற முடியும். நாட்டின் இனப்பிரச்சனைக்குப் பாராளுமன்றத் தெரிவுக் கமிட்டி மூலம் எடுக்கப்படும் முயற்சிகளை இ. தொ. கா வரவேற்றது.

''நீடித்த யுத்தத்தின் விளைவாக இந்த நாடு அனுபவித்து வரும் பெரும் பொருளாதாரச் சுமைகளை உணர்ந்து பெருந்தொகையான மக்கள் மீது யுத்தம் சுமத்தியிருக்கும் சொல்லொணா வேதனைகளினால் துயரங் கொண்டிருக்கும்இந் நெருக்கடியில் நிலைத்து வரும் தேக்க நடவடிக்கைகளைத் தகர்ப்பதற்கு இ. தொ. கா. யோசனைகளை முன்வைத்தது. ஒரு பேச்சுவார்த்தை நிலைப்பாட்டை மதிப்பிடுவதற்கான ஒரு ஆரம்ப யோசனைகளாகவும் கலந்துரையாடல்களை ஆரம்பிப்பதற்காகவுமே நாம் இனப்பிரச்சினை தொடர்பான யோசனைகளை முன்வைத்தோம்.''

இவ்வாறு மலையக மக்களின் அரசியல் பொருளாதார உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வருகின்ற இ. தொ. கா ஆனது ஐக்கிய தேசியக் கட்சியுடன் கொண்டுள்ள உறவு நிலையானது இ. தொ. கா. வின் நோக்கினை நிறைவேற்றுமா? என்பதை நோக்கும் போது அது ஒரு மேல்மட்ட உறவாகவே உள்ளது. மாகாணக் கிராமிய மட்டத்தில் இந்த உறவு வெறும் தேர்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன்பாட்டுடன் முடிந்து விடுகின்றது. இத யசுத்தியுடனான பரஸ்பர புரிந்துணர்வுடனான உறவு அடிமட்டம் வரை வியாபிக்க வேண்டும். அதுவே இரு சாராருக்கும் நன்மை பயக்கும். குறிப்பாக இந்த உறவின் மூலம் மலையக சமுதாயத்தின் வளர்ச்சிக்காக தேவையான ஆக்கபூர்வமான திட்டங்களை செயற்படுத்துவதில் இரு சாராருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை பூரண ஒத்துழைப்புத் தேவை. எமது கடந்தகால வரலாற்றினைப் புரட்டிப் பார்த்தால் இந்த உண்மை புலனாகும். பண்டா – செல்வா ஒப்பந்தம், டட்லி – செல்வா ஒப்பந்தங்கள் வெறும் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மேல்மட்டத்தில் மாத்திரம் ஏற்பட்ட ஒப்பந்தங்களேயாகும். ஆனால் கீழ் மட்டத்தில் இந்த அரசியல் உறவு நெருக்கமான ஒத்துழைப்பு ஏற்படுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அத்துடன் மேற்படி ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்படவும் இந்த கீழ்மட்ட உறவு இல்லாமையே காரணமாகும்.

ஐ. தே. க. – இ. தொ. கா. கூட்டுறவு மீது மலையக மக்கள் பெரும் நம்பிக்கை வைத்துள்ளனர். இந் நம்பிக்கை 1988 ஜனாதிபதித் தேர்தல் மூலம் படிப்படியாக ஸ்திரமடைந்து வருகின்றது. கடந்த வருடம் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தல்கள் மூலம் இந்த எதிர்பார்ப்பு மேலும் வலுவடைந்துள்ளது. அதனால் அரசுடன் நிலவும் இந்த நல்லெண்ணத்தை பயன்படுத்தி மலையக மக்களது தொழிற் பிரச்சினை, கல்விப்பிரச்சினை சுகாதாரக் குடியிருப்புப் பிரச்சினைகட்கு இ. தொ. கா. தீர்வு காண வேண்டுமென மலையக மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

எனவே தொகுத்து நோக்குமிடத்து மலையக மக்களின் அரசியல் பொருளாதார உரிமைகளைப் பேணும் ஒரு அமைப்பாக; அவர்களின் இலக்கினை முன்னெடுத்துச் செல்லும் ஒரு நிறுவனமாக இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் செயற்பட்டுவரினும் நிலச்சீர்திருத்த வேலையின்மையில் உணவுப்பற்றாக்குறையும், ஆக்க வேலையும் ஈடுபட்டிருக்கும் பாட்டாளி மக்களின் உயிரையும் கற்பையும் குடிக்கும் சோகநிலை மனச்சான்றுடையோர் உள்ளத்தைக் கலங்க வைக்கும் தன்மையதாக இன்று உள்ளது. இந்த மக்களின் இன்னல்களை இ. தொ. கா. வோ அது அங்கம் வகிக்கும் வேறு அமைப்புக்களோ அரசியல் ரீதியாகத் துடைக்கக் கூடிய நிலையில் இல்லை. குடியுரிமை பெற்ற, பெறக்கூடிய மலையகத் தமிழர்கள் நல்வாழ்க்கை நாடி இடம் பெயராது பொது வாக்காளர் இடாப்பில் கூடுதலாகப் பதிவு செய்யப்படும் நிலைதொடர்ந்தால் ஆளும் கட்சியைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர் மலையகத் தமிழர்களின் வாக்குகளைப் பெறுவதற்காக அவர்களுடைய குறைகளை ஓரளவு நீக்க முயற்சிக்கலாம். ●

---

**Bibliography**:-

1. க. மோகன்ராஜ், இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம் (மலையக மக்கள் வரலாறு)

2. இலங்கையின் இனத்துவமும் சமூக மாற்றமும். சமூக விஞ்ஞானிகள் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கில் வழங்கப்பட்ட கட்டுரைகள், டிசம்பர் 1979.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இ. முத்துத்தம்பி எம். ஏ. இலங்கைக் குடியரசின் அரசியலமைப்பு பாகம் II

4. ஈழநாதம், மலையக மக்கட்கெதிராக சிங்கள இனவாதப் பிரச்சாரம். 18. 03. 92

5. Indians in Sri Lanka - by H. P. Chattopadhyaya.

*வாழ்க்கை வானவில்லாக நீண்ட நேரம் இருப்பதைவிட, கணநேரம் கண்ணைப் பறித்து மின்னும் மின்னலாக இருப்பது நல்லது.*

—ராஜாஜி

" Great minds discuss ideas;
Normal minds discuss events;
Small minds discuss people "

– Chinese proverb



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவும் இராணுவமும்

# India and Military

ஆசியப் பிராந்தியத்தின் வல்லரசு எனக் கூறிக்கொண்டு தன்னை முன்னிலைப்படுத்த விரும்பும் இந்திய அரசின் அரசியலை இடையூறின்றி நகர்த்திச் செல்வதில் இராணுவம் என்பது மிகவும் உறுதியாகப்பயன்படுத்தப் பட்டு வருகிறது. இந்தியா சுதந்திரம் பெற்ற காலப்பகுதியில் இருந்து இன்று வரையில் அந்நாட்டின் உள்பாதுகாப்பினைச் சீர்செய்யவும், வெளியார் அச்சுறுத்தலையும், ஆக்கிரமிப்பையும் எதிர்கொள்ளும் கருவியாகப் பயன்பட்டிருக்கும், இராணுவம் பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்று அண்மைக்காலங்களில் அரசியலைத் தன்வசம் தக்க வைத்திருக்கிறது. இந்தியாவின் இறைமைக்கும் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் ஆபத்து ஏற்படும் போதும், எல்லைகள் பற்றிய தகராறுகள் வலுப்பெறும்போதும், தீவிரவாதம் என்பது முனைப்பாகத் தலை தூக்கும் போதும், அவற்றைச் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தும் நிலையினை இராணுவமே பொறுப்பேற்கிறது.

பல்லின, மத, மொழிசார் மக்கள் வாழும் பாரதத்தின் தேசக்கட்டுமானத்தில் ஏற்படும் ஆபத்து சமூக, மத, மொழி பண்பாடுகளிடையே முரண்பாடுகள் என்கின்ற வடிவில் முளைத்து வன்செயலாக, தீவிரவாதமாக மாறி இந்தியாவினை ஆட்டிப் படைப்பதால் வேறுபட்ட தன்மைகளில் இந்த இராணுவப் பயன்படுத்தல் நிகழ்ந்துள்ளது. கடந்தகால அரசியல் வரலாற்றினைத் திரும்பிப்பார்க்கையில் இராணுவப் பயன்பாடு என்பது அதிதீவிரமாக இருந்ததைப் புள்ளி விபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. 1951 – 1970 வரையில் இந்தியாவின் தனிப்பட்ட நோக்கங்களுக்காக 476 தடவைகள் அதாவது வருடமொன்றுக்கு சராசரி 24 தடவைகளும் 1980 மார்கழிவரையில் 64 சம்பவங்களின் போது வருடமொன்றில் 40 தடவைகளுக்கு மேலாகவும் 1980 – 1984 வரையில் 369 சம்பவங்களின் போது சிவில் அதிகாரத்தை உறுதிப்படுத்தவும் இராணுவம் உதவியாக நின்றிருக்கின்றது. இந்நடவடிக்கைகளின் மூலமாக இரா்ணுவமானது ஒரு சரியான அரசியல் திட்டத்தை மேற்கொள்ளும் வழியாகத் தன்னை உணர்ந்து கொண்டது. தனது அரசியல் இலட்சியங்களை ஈடேற்றும் ஒரு காரணியாக இராணுவத்தை இந்தியா கையாண்டிருக்கிறது.

இந்தியாவின் வலிமை வாய்ந்த இராணுவம் உள்நாட்டு அரசியலில் பிரதேச மத, மொழி சார் ஒழுங்கு மீறல்கள் தோன்றும் போது, அவை நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு சவாலாக எழும்போது, அவை சம்பந்தமாக வெளிநாட்டு அச்சுறுத்தல் ஏற்படும் போது, துணிகரமான முறையில் கரும மாற்றி அத்தடைகளை அகற்றும் பணியினை முழு மூச்சாக நிறைவேற்றுயிருக்கிறது. சீக்கியத் தீவிரவாதிகளுக்கெதிரான அமிர்தசராஸ் பொற்கோவில் இராணுவ நடவடிக்கையானது இந்தியாவில் இராணுவத்தின் முக்கியத்துவத்திற்கு அழுத்தம் கொடுத்தது. இந்தியாவையும் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியையும் பெரும் இக்கட்டுக்குள்ளாக்கிய பஞ்சாபின் காலிஸ்தான் என்னும் தனிநாடு கோரிக்கை சர்வதேசத்தின் கவனத்தையும் தன்பால் ஈர்த்துக்

மேரின் வேஜினி சவரிப்பிள்ளை
அரசறிவியல் சிறப்புக்கலை,
இறுதி வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டது. சீக்கியர்களின் புனிதஸ்தலமான பொற்கோவிலைத் தம் கோட்டையாக்கி அதனைத் தம் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த சீக்கியத்தீவிரவாதிகளை எவ்வாறு அகற்றுவது என்ற அரசின் உளப் போராட்டத்தில் பிரதமர் இந்திராகாந்தியின் துணிச்சலான அரசியல், புனிதஸ்தலமான பொற்கோவிலுக்குள் இராணுவத்தை அனுப்பி தீவிரவாதிகளை அழித்தும் சரணடையவும் வைத்தது. சீக்கியத்தீவிரவாதிகள் தலைவர் பிந்தரன்வாலே இந்த இராணுவ முற்றுகையில் அழிக்கப்பட்டவர்களுள் முக்கியமானவர். ஆயினும் இந்த முற்றுகை தான் இந்திராகாந்தியின் உயிருக்கு எமனாக அமைந்தது என்பதும் வெளிப்படை.

இந்தியாவின் இக்கட்டான நிலைகளின் போது அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறும் இடத்தில் இராணுவமே சில சந்தர்ப்பங்களில் அமைந்துள்ளது. உள்நாட்டு குழப்பங்களின் போது அமைதியை நிலை நாட்டும் பணியினை அரசாங்கம் இராணுவத்திற்கு கொடுத்து வருகிறது. இந்தியாவில் அடிக்கடி ஏற்படும் இந்து முஸ்லிம் கலவரங்கள் அரசிற்கு சோதனையைக் கொடுத்துள்ளது. இந்த வகையில் பாரதீய ஜனதா கட்சி தலைமையில் இந்துக்களின் மதவாதம் பெயர்த்தெடுத்த அயோத்தியாவின் பாபர் மசூதிப் பிரச்சினையின் போதும் இராணுவம் உதவிக்கு அழைக்கப்பட்டது.

இன்னும் காஷ்மீரத்துப்பிரச்சினை இந்தியாவிற்குத் தலையிடி கொடுத்து வந்த இன்னொர் அம்சம் ஆகும். பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையே இழுபறி நிலையினைத் தோற்றுவித்த இப்பிரச்சினை சர்வதேச ரீதியில் அமெரிக்காவின் தலையீட்டிற்கும் வழிவகுத்தது. இப்பிரச்சினையை வெற்றி கொள்ள சீக்கியத் தீவிரவாதிகளை அடக்க அமிர்தசராசில் கையாண்ட அதே யுக்தியைக் கையாள நினைத்த அரசு மசூதியின் மீதான முற்றுகையையும் நிகழ்த்தியது. காஷ்மீரில் விடுதலை கோரிப்போராடிய அல்லது பாகிஸ்தானுடன் தம்மை இணைக்கக்கோரிப் போராடிய தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையில் காஷ்மீரத்து சிறீநகரின் வறஸ்ரத்பல் மசூதியின் மீதான முற்றுகையை 15 நாட்கள் நடாத்தி உணவு நீர் மின்சாரம் என்பவற்றைத் தடுத்து தீவிரவாதிகளின் ஜீவமரணப் போராட்டத்தின் இறுதியில் தீவிரவாதிகள் பணயம் வைத்த 150 யாத்திரிகர்களையும் விடுவித்து, முற்றுகையை வெற்றிகரமாக நடாத்தி அவர்களை அப்புறப்படுத்தியது. இந்த சத்திர சிகிச்சையில் மிகவும் மெத்தனமாகவே இராணுவம் ஈடுபட்டது என்று அரசினால் பிரச்சாரப்படுத்தப்பட்டாலும் காஷ்மீர் மக்களின் உள்ளங்களை வெற்றி கொள்ள இராணுவம் தவறி விட்டது. வறஸ்ரத்பல் நெருக்கடி தீர்க்கப்பட்டாலும் காஷ்மீர் பிரச்சினை இன்றும் தொடர்ந்து வருகிறது. இந்தியாவின் புனிதஸ்தலங்களின் மீதான இரண்டாவது மிகப்பெரிய முற்றுகையாக இது நிகழ்ந்தது. பாரதத்தைப் பொறுத்த வரையில் அங்கு மதம் என்பது மக்களின் மனங்களில் நிலையாக நிரந்தரமாகப் பதிந்திருப்பது. மக்களின் ஜீவனாகத் திகழும் மதம் அவர்களின் வாழ்வின் பெரும் பகுதியைத் தன்வசம் கொண்டுள்ளது. இவ்வாறு மக்கள் மத்தியில் மதம் பெற்றிருக்கும் புனிதத்துவத்தின் காரணத்தால் அங்கு நடைபெறும் தீவிரவாதப் போராட்டங்களும் மதத்தை அடியொற்றியே வளர்ந்து நிற்கின்றன. அமிர்தசராஸ் பொற்கோவில், வறஸ்ரத்பல் பள்ளிவாசல் போன்ற பாரதத்தின் புகழ்பெற்ற புனிதஸ்தலங்களை தமது கோட்டைகளாக்கி அதனுள் ஊடுருவி இருப்பதன் காரணம் மதம் பெற்றுள்ள முக்கியத்துவத்திலேயே தங்கியுள்ளது. இதனால் இந்திய அரசு இத்தகைய நெருக்கடிகளின் போது, நீண்டகாலத் திட்டமிடலின் பின்னரே, திடீரென்று சத்திர சிகிச்சையில் இராணுவத்தை ஈடுபடுத்தும் நிலை தென்படுகிறது.

இந்தியாவில் அரசியல் நோக்கங்களை வெற்றி கொள்வதற்கான போட்டியில் இராணுவம் இவ்வகை முற்றுகை நிகழ்த்தும் போது, மனிதாபிமானம் என்பது புதைக்கப்படுவதும், இராணுவ மிலேச்சதிகாரம் ஓங்கி நிற்பதும் இந்தப் புனிதஸ்தலங்களின் மீதான முற்றுகையினால் தெளிவுபடுத்தப்படுகிறது. இராணுவ ரீதியில் அமிர்தசரஸ் பொற்கோவில் மீதானதும் சிறீநகர் ஹஸ்ரத்பல் மசூதி மீதானதும் முற்றுகைகள் வெற்றியளித்தாலும் அரசியல் ரீதியில் எவ்வளவு தூரம் பிரச்சனைக்குத் தீர்வாக அமைந்தது என்பது கேள்விக்குறி. மாறாக அம்மாநிலங்களின் பழிவாங்கும் எண்ணத்தை வளர்த்துவிட்டது என்றே கூற இடமுண்டு.

இராணுவத்தின் படிமமானது இந்தியா தன்னை பிராந்திய ரீதியாக முதன்மைப்படுத்தவும் தன்னை ஒரு பிராந்திய வல்லரசாக கட்டி எழுப்பவும் துணைபோயுள்ளது. தென் ஆசியப் பிராந்தியத்தில் அதன் செயற்பாடுகள் இத்தகைய ஒரு நிலையை தெளிவாக்குகின்றது. 1962 இல் சீன – இந்தியா எல்லைப்பிரச்சினை ஏற்பட்ட போதும் 1965 இல் இந்தியா பாகிஸ்தான் மோதலின் போதும், 1971 இல் இந்திய பாகிஸ்தான் யுத்தம் வெடித்த போதும், இந்திய இராணுவம் தனது பலத்தை நிலைநாட்டப் பெரிதும் முயன்றிருக்கிறது. இந்திய பாகிஸ்தான் யுத்தத்தில் வெற்றி பெற்றதன் பின்னர் பாரத தேசத்தின் பிரபல்யமான சுலோகமாக "ஜெய் ஜவான், ஜெய் கிஷான்" என்பது அமைந்திருந்தது. போர் வீரன் நீடு வாழ்க, விவசாயி நீடு வாழ்க என்பது இதன் அர்த்தமாகும். இதனை நோக்கும் போது, இந்தியாவின் அரசியல் வாழ்வில் இராணுவம் எத்தகைய முக்கிய பங்காற்றி வருகிறது என்பது கண்கூடு.

பாகிஸ்தான் பிரிந்து 1971 இல் வங்காள தேசம் என்ற ஒரு நாடு உருவாவதற்கு இந்தியப்படைகளை கிழக்குப் பாகிஸ்தானுக்கு அனுப்பிய போதும் 1987 இல் ஏற்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைதிப்படை விடுதலைப் புலிகளை அழிக்கும் நோக்கில் இலங்கைக்கு அனுப்பப்பட்ட போதும், மாலைதீவில் ஜனாதிபதி அப்துல் கயூமின் ஆட்சியைக் கவிழ்க்கும் சதிப் புரட்சியை அடக்க இந்திய இராணுவம் அனுப்பப்பட்ட போதும், தென் ஆசியாவின் வல்லரசு எனத் தன்னை இனம் காட்டிக்கொள்ள இந்தியா முனைந்தது.

ஆயினும் பங்களாதேஷ் ஒரு தனி நாடாக இந்தியாவினால் உருவாக்கப்பட்ட போதும் அங்கு நிகழ்த்திய சம்பவங்கள் இராணுவத்திற்கு சர்வதேச ரீதியில் அவ்வளவு நல்ல பெயரை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. அத்துடன் முஜிபுர் ரஹ்மான் அவர்களின் இறப்புக்கும் இந்தியாவே பொறுப்பேற்க வேண்டிய ஒரு நிலையும் ஏற்பட்டது. ஒருவகையில் இந்தியா பாகிஸ்தானின் பலத்தை துண்டாடுவதற்காக ஏற்படுத்திய நாடகம் இது எனவும் கூற இடமுண்டு. ஆனால் பங்களாதேசத்தின் விடுதலை கோரிப் போராடிய தலைவர் முஜிபுர் ரஹ்மானிற்கு ஏற்படுத்திய அதே கதியை வேறோர் பாணியில் இலங்கையில் விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனுக்கு ஏற்படுத்தத்திட்டம் தீட்டியது.

அமைதிப்படை என்ற போர்வையில் நுழைந்த இந்திய இராணுவம் தான் பாதுகாப்பு கொடுக்க முனைந்த மக்களின் மீதே பழிதீர்த்த கொடுமை நிகழ்ந்தது. விடுதலைப்புலிகளை முற்றாக அழித்துத் தனது பிராந்தியப்பிடியை இலங்கையில் நிலைநிறுத்த முனைப்பாக நின்றது. ஆயினும் இந்திய உளவுப்படையின் விடுதலைப்புலிகள் பலத்தின் மீதான தவறான கணிப்பு அவர்களது ஆதிக்க நோக்கத்திற்கு தோல்வியைக் கொடுத்ததுடன் அமைதிப்படைக்குப் பேரிழப்பைக் கொடுத்தது. இந்த இராணுவத் திட்டத்தில் ஜெனரல் சுந்தர்ஜியின் பங்கு பெரிதளவாக நோக்கப்பட வேண்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூர் மட்டத்திலும், பிராந்திய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் இந்தியா ஒரு பிரபல்யமான ஒருநாடாகத் திகழ்வதற்கு பெருந்தொகையிலான அதன் இராணுவமும் ஒரு காரணமாக உள்ளது. சர்வதேசத்தில் பொருளாதார ரீதியில், தொழில்நுட்ப ரீதியில் நிலைநிறுத்த முடியாது போன தனது பெயரை வலிமை வாய்ந்த இராணுவத்தைப் பயன்படுத்தி இந்திய அரசு சாதிக்க முனைந்தது. இந்தியாவின் அரசியலில் இராணுவம் இரண்டறக்கலக்கப்பட்டு, இந்தியாவின் உள்நாட்டுப் பாதுகாப்புச் சவால்களுக்கும், வெளிநாட்டு அச்சுறுத்தல்களுக்கும் ஈடுகொடுக்கும் தளமாக இராணுவ கலாசாரம் இந்தியாவின் உள்நாட்டுவாழ்வைப் பெரிதும் பாதித்துள்ளது. நேரு கடைப்பிடித்த பஞ்சசீலக் கொள்கையையும் காந்தியின் அகிம்சா தர்மத்தையும் கடைப்பிடிக்கும் நாட்டில் வன்செயல்கள் கட்டுக்கடங்காமல் போனதால் இராணுவம் அரசியலில் கையாளப்படுவது சர்வசாதாரணமாகி விட்டது.

இந்த வகையில் பார்க்கும்போது ஆசியாக்கண்டத்தில் தன்னை வல்லரசு என நினைக்கும் இந்தியா வெளிநாட்டு ரீதியாக இராணுவ பலத்தைப் பிரயோகிப்பதில் காட்டும் அதே அக்கறையையும் கவனத்தையும் இந்தியாவிற்குள்ளேயும் ஏற்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பலவித இன, மத, மொழிப் பிரதேச மக்களின் உணர்வுகளையும், பண்பாட்டு விழுமியங்களையும் மதிக்கும் விதத்தில் இராணுவம் நடந்து கொள்கிறதா என்பது கேள்விக்குறி. பலத்தின் அடிப்படையில் இந்திய இராணுவம் உறுதியாக இருந்தாலும் கட்டுக்கோப்பு ரீதியில் அங்கு சிதறல் நிலை உண்டு என்பதனை பங்களாதேஷ், இலங்கை, காஷ்மீர் போன்ற இடங்களில் நிகழ்ந்த சம்பவங்கள் தெளிவாகக் கூறி நிற்கின்றன. எது எப்படியாயினும் பாரத தேசத்தைப் பொறுத்தவரை அதன் இறைமை, தன்னாதிக்கம் தேச ஒருமைப்பாடு, ஐக்கியம் என்பவற்றை நிலைநிறுத்திக் கொள்வதற்கு இராணுவம் தன்னை நிலையாக வளர்த்துக் கொண்டால் அன்றி தேசிய இந்தியா ஆட்டம் கண்டுவிடும் என்பதனை கடந்தகால அரசியல் வரலாறு தெளிவாகக் கூறி நிற்கிறது. ●

**Reference**


* Paratha S. Ghosh,
  ( 1989 ) "India Pakistan, The pawtition fall out"
  Co — Operation and Conflict in South Asia.
  Manohar Publications,
  New Delhi, P : 37 - 49, 216 - 226
* Ference A. Vali: ( 1976 )
  'Pakistan'
  Politics of the Indian Ocean Region collier Macmillan Publishers.
  London, P : 95 - 1.2
* Anand R.P, (1991)
  "Maritime Boundarics in South Asia"
  South Asia In Search of A Regional Identity,
  Banyan Publications
  New Delhi, P: 35
* Dr. Bindara S, S, (1989)
  "India and the emergence of Bangaledesh"
  India and neighbours,
  Deep & Deep Publications,
  New Delhi, P. 147 - 150, 296 - 298,
* Harinder Baweja, (1993)
  "Operation Blunder", "India Today"
  New Delhi, Volume xviii Number 21, P: 30 —36





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குலக்குறியம்

# TOTEMISM

மானுடவியல் ஆய்வுகளே சமயம் பற்றிய முதன்முதலாக புறவயமான ஆய்வுகளாகவுள்ளன. சமயத்தினை விளங்க சமூக மானுடவியல், சமூகவியல் கோட்பாடுகள் பயன்படுகின்றன. சமயம் பற்றிய ஆரம்ப சமூகமானுடவியல் கோட்பாடுகளாக ஆவி உலகுக்கோட்பாடு (Animism) இயலாற்றல் மூலக்கோட்பாடு (Animabism) குலக்குறியம் (Totimism) இனங்காணப்பட்டுள்ளன. குலக்குறிய கோட்பாடு சமூகவியலில் சமூக அமைப்பு சமூக உறவு முறைகளை விளங்கிக் கொள்வதில் பயன்படுகிறது. இக்கட்டுரை குலக்குறியம் பற்றிய சில அடிப்படைகளை விளக்குவதாக அமைகிறது.

சமயம், சமூகத்தின் தேவைகளினடியாக சமூகத்திலிருந்தே தோற்றம் பெற்று சமூக உற்பத்தி உறவுமுறைகளைப் பேணி அதனைப் பிரதிபலிக்கின்றது'' (பண்பாடு 1993) என்பது சமூகவியலாளர்களின் கருத்தாகும். சமூகவியலாளரான (Emile Durkheim) மனிதன் வணங்குவதெல்லாம் சமூகத்தின் சின்னமேயன்றி வேறில்லை என்பார். பூர்வீகமக்களிடம் வழக்கமே ஆற்றல் மிகுந்த சமூக சக்தியாக இருந்தது. தற்கால சமூகங்களில் வழக்கிலிருக்கும் சடங்குகள் இவ்வுண்மையைத் தெளிவுபடுத்துகின்றன.

குலக்குறி இயற்கைப் பொருளாகவும் மனித இனகுழுக்களைப் பிரதிபலிப்பதாகவும், பிரித்தறிவதற்கான குறியீடாகவும் அமையும். குலக்குறி தனித்துவமானது. சமயரீதியாக புனிதத்தன்மை வாய்ந்ததாக கொள்ளப்படும். குலக்குறி (Totem) 'ote' என்ற அடிச் சொல்லிலிருந்து உருவானது அதாவது இரத்த உறவு கொண்டவர்களாக பொருள் கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு இனக் குழுவும் குலக்குறியைக் கொண்டிருக்கும். குலக்குறி குழுவின் ஒவ்வொருவருக்கும் உரித்துடையது. குலக்குறி விலங்காக அல்லது தாவரமாக அல்லது வேறு இயற்கையம்சமாக இருக்கும். தெற்கு, கிழக்கு அவுஸ்ரேலிய பழங்குடிகளில் ஐநூற்றுக்கும் மேற்பட்ட குலக்குறிகள் அவதானிக்கப்பட்டன. நாற்பது குலக்குறிகள் மட்டுமே தாவரம் அல்லது விலங்கு அல்லாத முகில், மழை, பனிப்புகார், சந்திரன், சூரியன், காற்று, இலையுதிர்காலம், கோடை, மழைக்காலம், நட்சத்திரங்கள், இடி, நெருப்பு, புகை நீர் கடல் போன்றனவாக உள்ளன.

Emile Durkheim குலக்குறி சமூகத்தைக் கூட்டுப்பிரதிநிதித்துவப் (Collective representation) படுத்துகிறது என்றார். சமூக நடத்தை, சமூகமனப்பான்மை தான் குலக்குறியை உருவாக்கியதாக கூறுவார். அதாவது ஒரு சமூகத்தில் குலக்குறிய நம்பிக்கைகள், நடைமுறைகள் அனைத்தையும் உள்ளடக்கிய ஒன்றாகவே குலக்குறியம் அல்லது குலக்குறிய வழிபாடு அமைகிறது. ஒவ்வொருசமயமும் அறிவுரீதியான எண்ணக்கருக்களையும், சடங்காசாரமுறைகளையும் கொண்டிருக்கும். இவற்றினை அறிவதன் மூலம் குலக்குறிசமயத்தை விளங்கலாம். 1914 ஆம் ஆண்டு W. H. R. Rivers என்ற அறிஞர் சமூக உற்பத்தி உறவுகளிடையே

செல்வி வ. வரதகௌரி
பகுதி II
சமூகவியல் சிறப்புக் கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலக்குறியை மூன்று கூறுகளாக இனங்கண்டார். அவை பின்வருமாறு,

1) சமூகமூலக்கூறு (Social element)

2) உளவியல் மூலக்கூறு (Psychological element)

3) சடங்காசார மூலக்கூறு (Ritual element)

சமூகமூலக்கூறு:

குலக்குறி சமூக அமைப்பின் நிறுவனங்களுடன் தொடர்புடையதாக இருக்கும். அதாவது உறவுமுறை திருமணமுறை, வழிபாட்டுமுறை, உணவுமுறை என்பனவற்றில் குலக்குறி தொடர்பினைக் காணலாம். உறவுமுறையில் குடிவழித்தொடர்பு முக்கியம் பெறுகிறது. ஒரு குலக்குறியைக் கொண்டவர்கள் அனைவரும் ஒரே வழிமரபுடையவர்களாக (Unitineal) உள்ளனர். குலக்குறியின் பெயராலேயே இனக்குழுவை அழைக்கின்றனர். சில சமூகங்களில் தனி ஒருவருக்கான குலக்குறி அல்லது இனக் குழுக்கள் அனைவருக்கும் பொதுவான குலக்குறியும் உண்டு. குலக்குறி அமைப்புடைய சமூகங்கள் தனித்தனி குடும்பங்களாகவன்றி ஒரே குடும்பமாகவே குழுவை உணர்கின்றனர். குழு உணர்வு குடும்ப உணர்வாகவே உள்ளது. இதனால் தங்களுக்குள் திருமணம் செய்ய மாட்டார்கள். உதாரணமாக Roman, Greek பழங்குடிகளான Gens, Yevos ஆகியோரிடையே காணலாம். மேலும் அவுஸ்ரேலியா முரியாக்களிடையேயும் காணலாம. சு. சக்திவேல் ''முரியா பழங்குடிகளும் கோட்டுல் அமைப்பும்'' என்ற ஆய்வுக் கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''பழைய அவுஸ்ரேலிய இனத்தை சார்ந்த முரியாக்களிடையே கால்வழி அமைப்பு (Clansystem) முறை உண்டு. இது வாழ்க்கையை ஒழுங்குபடுத்துவதற்கும் திருமண உறவுமுறையை வரையறுப்பதற்கும் பயன்படுகிறது. இவர்களிடையே நக்வன் (பாம்பு) கச்சிம் (ஆமை) பக்ரா (ஆடு) பக் (புலி) போத்மிங் (மீன்) என்ற ஐந்து பெரும் கால்வழிகள் (Clans) இருந்தன. ஒரேகால் வழியைச்சார்ந்தவர்களை '' தாதாபாய் '' என்றழைக்கின்றனர். திருமண உறவுடையவர்களை '' அகோமாமா '' என்றழைக்கின்றனர். அந்தந்தக் கால்வழியினர் அவர்களது குலக் குறிப்பிராணிகளைக் கொல்லவோ அல்லது உண்ணவோகூடாது.''

எனவே முரியாக்களிடையே குலக்குறி சமூக வாழ்க்கையில் முக்கியம்பெறுகிறது. திருமண முறையில் புறமண (Exogamy) அமைப்பாகவே தொழிற்படுகின்றது. மீனைக் குலக்குறியாகக் கொண்டவர்கள் தங்கள் சனத்தொகை அதிகரிக்க வேண்டும் என்ற நம்பிக்கையுள்ளவர்களாகவுள்ளனர்.

இயற்கையில் உணவைத்தேடி அலைந்த இனக்குழு மக்களிடையே தாவரங்களும் விலங்குகளும் முக்கியம் பெறுவதில் வியப்பில்லை. வலிமையுடைய விலங்குகள் உதவி செய்யும் எனவும் குறித்த விலங்கை கொல்லாமல் விட்டால் வேட்டையில் உதவி செய்யும் எனவும் கருதினர். சூழலில் இனக்குழுக்களின் இயைபாக்கத்திற்கு ஏற்ப குலக்குறிகள் தோற்றம் பெற்றன. உதாரணமாக நீலகிரி தோடர்பழங் குடி மக்களின் வாழ்க்கை முழுமையாக எருமையைச் சுற்றியே இருந்தது. இதனால் எருமையை புனிதத்தன்மை வாய்ந்ததாக வழிபடுகின்றனர். இவர்களை '' எருமையின் குழந்தைகள் '' என அழைத்தமை குறிப்பிடத்தக்கது.

உளவியல் மூலக்கூறு

குலக்குறி அமைப்புடைய மக்கள் முன்னோரின் ஆவிகள் உறைந்த பொருளே குலக்குறி எனக்கொண்டுள்ளனர். இதனால் இறந்தவர்கள் தங்களுடனேயே வாழ்கின்றனர் என்ற நம்பிக்கையுள்ளது. இறந்தவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரின் ஆவி உடலிலிருந்து பூமிக்குள் சென்று இயற்கைப் பொருள்களில் உறைந்த பின் மீண்டும் கருவுறுதல் நிகழ்கின்றது'' என்பது மானுடவியலாளரான J. E. Frazer ரின் கருத்தாகும். மக்களின் செயல்களினதும் பழக்கவழக்கங்களினதும் நனவிலிமன (unconscius) த்தின் பிரதிபலிப்பாக குலக்குறியை Levi-strauss விளக்குவார். குலக்குறி அமைப்புடைய மக்கள் ஒரே இரத்த உறவுடையவர்களாக இருப்பதனால் புற மண அமைப்பை ஏற்படுத்தியுள்ளனர். அதாவது சமூகக் கட்டுப்பாட்டிற்காக தகாப்புணர்ச்சித்தடை (Incest Tabu) யைப் பின்பற்றுகின்றனர்.

## சடங்காசார மூலக்கூறு

குலக்குறியக் கோட்பாட்டின்படி நம்பிக்கையிலிருந்து குலக்குறி வழிபாடு உருவானபோதும் இதன்பிரதிபலிப்பு இன்னமும் சடங்குகளில் தான் உள்ளது. சடங்குகளை விளங்கிக் கொள்வதன்மூலம் குலக்குறிய நம்பிக்கைகள் அறியப்படுகின்றன. குலக்குறி வழிபாட்டினை போலிப் பொருள் வழிபாட்டின் (Fetishism) அடுத்தகட்ட வளர்ச்சியாகவும் கருதுகின்றனர். குலக்குறிக்கு முறைமையான வழிபாடுகள் செய்யப்படுகின்றன. குலக்குறிகளை சமயங்கள் எல்லாம் புனிதமானவையாக கொண்டுள்ளன. குழுவோடு தனிமனித ஒற்றுமையை வலுப்படுத்தவும், இயற்கைச்சக்திகளை எதிர்த்துப் போராடவும், குழுவின் ஆற்றல்களை அதிகரிக்கவும் கலைகளைப்படைத்தான் (உ-ம் குழுநடனம்) குலக்குறிக்கு சடங்குகளைச் செய்தால் குழுவின் ஆற்றல் வளரும் இதற்காக குலக்குறி கம்பங்களை (Totem Poles) செய்தனர். மத்திய அவுஸ்ரேலிய Arunta மக்கள் கல், மரத்தாலான குலக்குறிகளை தாயத்துக்களாக கொண்டுள்ளனர். உணர்வுரீதியாக வழிபட வாத்தியக் கருவிகளைப் பயன்படுத்தினர். புனிதப் பொருளுக்கு பாதிப்பு ஏற்பட்டால் குழுவின் பாதிப்பாக அல்லது இழப்பாகவே கருதினர். இவ்வாறாக குலக்குறியை இயல்கடந் தாற்றலுடையதாகவும் (Mystical), வணக்கத்திற்குரியதாகவும் (Reverential) கொண்டுள்ளனர்.

## சமூகமாற்றமும் குலக்குறியும்:

சமூகமாற்றத்திற்கு ஏற்ப குலக்குறிகள் தோற்றம் பெறுகின்றன. இனக்குழு வாழ்க்கை மாறி நாடுகள் உருவாகியுள்ளன எனினும் குலக்குறிய நம்பிக்கை எச்சங்களாக உள்ளன. தமிழகத்திலுள்ள கொங்கு வெள்ளாளர் குலங்களிலே குலக்குறியை ''கூட்டம்'' என்றழைக்கின்றனர். பல குழுக்களாக பிரியும் போது ஒரே குலக்குறியின் பகுதிகளே குலக்குறிகளாகியுள்ளன இவை பெரும்பாலும் விலங்குகளாகவே உள்ளன. ஓர் இனக்குழு மற்ற இனக்குழுக்களை வென்றபோது அவற்றின் குலக்குறிகளையும் இணைத்துக் கொண்டது உதாரணமாக நா. வானமாமலை பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்;

> ''சேவல்தான் முதன் முதலில் காலத்தால் முந்திய இனக்குலக்குறி முருக வணக்க குழுவொன்று முதன்முதலில் சேவலைத் தனது குழுவின் குறியாக கொண்டிருந்தது. பின்னர் மயிலைக் குலக்குறியாகக் கொண்ட குழுவை வெற்றி கொண்டிருக்கலாம். முருகன் மாமரம பறவை, குன்று முதலிய மாய வடிவங்கள் எடுத்ததாக கூறப்பட்டுள்ளது. மானுடவியல் அறிவு கொண்டு இவற்றைப் பார்த்தால் இனக்குழு நினைவுகளின் எச்சம் என்று துணியலாம்''
>
> (ஆராய்ச்சி 1970 இதழ் பக், 470)

குழுக்கள் ஒன்று சேரும் போது பெரிய குழுவின் குலக்குறி பல குழுக்களின் வணக்கத்திற்குரியதாகிவிட்டது. நா. வானமாமலை ''கலைகளின் தோற்றம்'' என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுக்கட்டுரையில் இக் கருத்தை விளக்கி யுள்ளார்.

யானை ஒரு குழுவின் குலக்குறி இனக் குழு பெரிதாகிப் பல குழுக்களை வென்று அரசாக மாறிய பொழுது யானை அவ்வம்சத்தின் கொடியாகி விட்டது. இந்தக் குழு எலிக்குழுவை (மூஷகக்குழு) வென்ற பொழுது எலி கீழ்ப்பட்டதாயிற்று. யானைக்குலக் குறிக்கு அடையாளமாக யானைத்தலை யும் மனித உடலோடும் ஒரு கற்பனைப் படைப்பாகி (விநாயகர்) ஒரு பெரிய இனக்குழுக்கூட்டத்தின் தெய்வமாகி விடு கிறது'' (ஆராய்ச்சி 1971 இதழ் 2 286)

சமூகமாற்றத்தில் குலக்குறி அமைப்பு மறைவடிவமாக சாதியமைப்பாக மாறி யுள்ளதைக் காணலாம். குலக்குறி அமைப்பு இயற்கை சார்ந்தவை. ஆனால் வேலைப் பாகுபாட்டை மேற்கொண்டதும் சாதிக ளாக மாறுகின்றன. என்பது Levi – Strauss கருத்தாகும். ''யாழ்ப்பாணத்தில் அண்ணமார் வழிபாடு'' என்ற ஆய்வுக் கட்டுரையில் என். சண்முகலிங்கன். ''கல் அல்லது. பொல்லுக்கிழவனாக உருவாகிய குலக்குறியைக் குறிப்பிட்ட மக்களே வழி படுகின்றனர்'' என குறிப்பிட்டுள்ளார். அதாவது குலக்குறி அமைப்பு சாதியமைப் பாக தொழிற்படுகின்றது. மத்திய அவுஸ் ரேலிய Nurtunja Waninga மக்களும் பொல்லு அல்லது பல பொல்லுகள் (Simple Pole or bundle) குலக்குறியாகக் கொண் டுள்ளார்.

தொகுத்து நோக்கும் போது சமூக வாழ்வின் தொடர்ச்சித்தன்மை சமயத் தால் பேணப்படுகிறது. சமய வாழ்வுடன் சமூக உறவுமுறையாகவும், சமூகத்தை பிரதி பலிப்பதாகவும், சமூக ஒழுங்கைப் பேணு வதாகவும் குலக்குறியம் தொழிற்படுகின் றது. அத்துடன் இன்றைய சமூகவியல் சிந்தனையை வழிப்படுத்துவதாகவும் இக் கோட்பாடு பயன்படுகிறது. ●

---

உதவியநூல்கள்:


Durkheim, Emile — The Elementary Forms of the Religious life Collier Books, Newyork 1961

Levi-strauss, Claude- Totemism, Roger C. poole (Introduction by) Translated From the French by NEEDHAM, RODNEY Reissued in Penguin University Books 1973

சக்திவேல், சு — நீலகிரிதோடாபழங்குடிமக்கள், ஆராய்ச்சி ஆசிரியர் நா. வானமாமலை 1970 இதழ் 4 பக் 473 — 482

,, — முரியா பழங்குடிகளும் கோட்டுல் அமைப்பும் ஆராய்ச்சி 1971 இதழ் 2 பக் 200





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முகலிங்கன், என் — யாழ்ப்பாணத்தில் அண்ணமார் வழிபாடு
பண்பாடு 1993 இதழ் 2
ஆசிரியர் க. சண்முகலிங்கம்
இந்துகாலசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு கொழும்பு 02 (பக் 1, 16)

தமிழவன் — ஸ்ட்ரக்சுரலிசம் பாரிவேள் பதிப்பகம் 56B/2 எஸ். டி. சி. ரோடு
பெருமாள் புரம் திருநெல்வேலி - 7, 1982

வானமாமலை, நா — முருக வணக்கம் இரு பண்பாடுகளின் இணைப்பே
ஆராய்ச்சி 1970 இதழ் 4 பக் 470

,, — கலைகளின் தோற்றம்
ஆராய்ச்சி 1971 இதழ் 2 பக் 279, 286

## ENEMY

I Choose My Friends for their good looks,
My acuaintance for their good characters,
and my enemies for their good intellects.
A man cannot be too careful in the choise
of its enemies.

— Oscaa Wilde —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிவசக்தி சிவசங்கரன்

அரசறிவியல் சிறப்புக் கலை
இறுதி வருடம்

எம்முடன் நீயும்
நிலைக்க துடித்தாய் — ஆனால்
காலனின் வலையில்
அவலமாய் சிக்குண்டாய்
கால சக்கரத்துடன் உன் நினைவுகள்
எம்முடன் சுழலும்
என்றைக்கும் நிலைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியவாதம்

# Nationalism

இன்றைய உலகில் முக்கியத்துவம் பெறும் ஓர் அரசியல் எண்ணக்கருவாக தேசியவாதம் என்பது முளைவிட்டு வளர்ச்சியடைந்து செல்கின்றது. விரும்பியோ அல்லது விரும்பாமலோ, அல்லது ஐ. நா. செயலாளர் நாயகம் திரு. பூட்டர்ஸ் காலி குறிப்பிடுவது போன்று எதிர்கால உலகில் பிரச்சினைக்குரிய விடயமாகவோ தீர்வாகவோ அல்லது வேறுவகையில் அரசியலில் சிக்கல்களை ஏற்படுத்தக் கூடியதாகவோ இத்தேசியவாதம் அமையலாம். தேசிய இன எழுச்சிகள் ஐ. நா. வின் அங்கத்துவத்தை இணக்கம் காண முடியாத நிலைகளைத் தோற்றுவிக்குமோ என்ற அங்கலாய்ப்பை அல்லது அச்சத்தை அண்மையில் ஐ. நா. செயலாளர் நாயகம் வெளியிட்டு இருப்பதோடு இதற்கான பரிகாரமும் மிக அவசியம் எனக் குறிப்பிட்டுள்ளார். அந்த அளவிற்கு உலகின் கவனத்தை தேசிய இன எழுச்சிகள் ஈர்ந்துவிட்டன. அது தேசியவாதம் என்ற எண்ணக்கருவை அலசியாராயப் பலரைத் தூண்டுகின்றது. ஆனாலும் தேசியவாதம் என்ற இவ்விடயம் வரலாற்று ஓட்டத்துடன் இணைந்து வளர்ந்துள்ளதை வரலாறு கோடிட்டுக் காட்டியுள்ளது. தேசியவாதம் தனது தோற்றத்தையும் எழுச்சியையும் பலநூற்றாண்டுகால வளர்ச்சியின் விளைவாக ஐரோப்பாவிலே பெற்றுக் கொண்டது. தேசியவாதம பொதுநிறுவனங்கள் கலாசாரங்கள் என்பதனால் இணைக்கப்பட்ட மக்கள் குழுவினர் தம் மத்தியில் உருவாக்கிக் கொள்ளும் ஒற்றுமையின் அடிப்படையிலான மனோபாவமாகும்.

தேசியவாதம் என்றால் என்ன? என்பதில் பொதுமைப்படுத்தப்பட்ட, எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு வரைவிலக்கணத்தை தேர்ந்து எடுப்பதில் அல்லது வழங்குவதில் பல இடர்பாடுகள் உள்ளன. நவீன தேசியவாதம் 17 ஆம், 18 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோற்றம் பெற்று இருப்பினும் 19 ஆம் நூற்றாண்டில் பொதுவான ஐரோப்பிய இயக்கமாக வளர்ச்சியடைந்து விட்டது எனக் கூறலாம். அந்த வகையில் தேசிய வாதத்தின் கருப்பை ஐரோப்பாவாகும். 20 ஆம் நூற்றாண்டில் அதிக முக்கியத்துவம் பெற்ற ஓர் அரசியல் தத்துவமாக, ஆய்வுகளுக்கு உட்படுகின்ற ஒரு வாதமாக இது மாறிவிட்டது. ஒரு அரசியல் கருத்து நிலையாக தேசியவாதம் என்பது நவீன தோற்றம் ஒன்றினைப் பெற்றுக்கொண்ட போதிலும் அதனுடைய மூலம் அல்லது ஊற்று பின்னோக்கிய நீண்டகாலத்தைக் கொண்டது. 17 ஆம் நூற்றாண்டுக்கு முன்பே ஐரோப்பிய வரலாற்றுடன் பல தேசியவாதப் பண்புகள் கலந்துள்ளதை அவதானிக்கலாம்.

மேலை நாடுகளில் மதம் பலம் வாய்ந்த நிலையில் ஆரம்ப காலத்திலிருந்து, அது ஒரு ஐரோப்பியவாதம் அல்லது உலகளாவிய ஒரு மதவாதம் என்ற அமைப்பில் இருந்தது. பழைய காலத்தில் ஏறக்குறைய மத்திய காலத்தின் பெரும்பகுதியில் மதம், மதக்கோட்பாடுகள் பலம் பெற்று இருந்த ஐரோப்பிய நாடுகள் கத்தோலிக்க மதத்தின் பங்குகள் அல்லது பற்றுக்கள் போன்றே காணப்பட்டன. மதம் பலமிழக்கத் தேசியவாதம் தனது பலத்தைப் பெற்றுக் கொண்

செல்வி விமலா இராஜேந்திரன்,
அரசியல் சிறப்புக்கலை
மூன்றாம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டது. ஒரு கருத்து நிலைக்கு அப்பால் அது நிதர்சனம் என்ற நிலையைப் பெற்றுக் கொண்டது. குறிப்பிட்ட சில வழிகளில் வெளிப்படையான தேசிய ஒடுக்கமாக மக்களினுடைய சமூக அரசியல் தேசிய அவாக்களின் தொகுப்பாக (National Sprit) இதனை அவதானிக்க முடிகின்றது. இந்த வகையில் தேசமொன்றின் வாழ்க்கையையும் நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தக் கூடிய திட்டங்களை தேசியவாதம் கொண்டிருக்கும். தேசியவாதம் என்பது குறிப்பிட்ட ஒரு அரசியலைச் சார்ந்த மக்களினுடைய அரசியல் சிந்தனையா? அதனை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை? என்பது போன்ற வினாக்கள் எழுவது இயல்பாகும். இவற்றுக்கு விடைகாணப் புறப்படுகையில் பல முரண்பாடுகள் எதிர்கொள்ளுகின்றன. இக் கருத்து நிலைத் தோற்றம் ஐரோப்பா எனினும் பின்பு அமெரிக்கா, ஆசியா, ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகளில் வளர்ச்சி கண்டு வந்துள்ளது. இதன் வளர்ச்சி கண்டம் விட்டுக் கண்டம் பாய்ந்த போதும், ஐரோப்பிய தேசியவாதம் மக்களின் ஜனநாயக உரிமைகளுடன் இணைந்த ஒன்றாகும். அமெரிக்க, ஆசிய, ஆபிரிக்கத் தேசியவாதம் ஏகாதிபத்தியம் ஒன்றிற்கெதிரான போராட்டமாகும். தேச சுதந்திரத்தை மையமாகக் கொண்டு இது எழுந்ததாகும். சோசலிசப் புரட்சியில் வெற்றி கொண்ட நாடுகள் தமது தேசியவாதத்தில் சோசலிசப் பண்புகளை நெருக்கமாக இணைத்துவிட்டன. பாசிசவாதிகள், சியோனிஸ வாதிகள், பல சர்வாதிகாரிகள் ஆகியோரின் தேசியவாதத்தில் இனவாதம் அடிப்படையாகக் கொண்டிருந்தது. தேசியவாதத்தைப் பொதுவாக வரையறுக்கையில் பல அம்சங்களைக் கொண்டுள்ளமை வெளிவருகின்றது. இதன் போக்கை நிர்ணயித்த காரணிகளும் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. வெவ்வேறுவகையான, அரசியல் பொருளாதார சமூக வரலாற்றுக் காரணிகள் இத்தேசியவாதத்தை நிர்ணயிக்கின்றன. ஆனால் அதேவேளையில் தேசியவாதம் குறிப்பிட்ட ஒரு அரசியல் பிரிவினர்க்குரிய ஒன்றாகவும் காணப்படவில்லை. வெவ்வேறு வழக்கங்களை ஆதரித்த ஒவ்வொரு பிரிவினரும் தம் இணைந்த கோட்பாடுகளின் அடிப்படையில் தேசியவாதத்தை வலியுறுத்தினர். இதனாலேயே ஆய்வுகளின் முரண்பாடுகளும், சிக்கல்களும் தவிர்க்க முடியாதனவாகின்றன.

பேராசிரியர் C. I. H. Hayes பொருத்தமான வரைவிலக்ணத்தைக் கொடுக்க முனைந்தார் என்றவகையில் அதனை ஆராயின் தேசியவாதம் என்பது தேசிய இனம் என்ற எண்ணமும் தேசப்பற்றும் இணைந்த ஓர் உளரீதியான இணைப்பாக அமைகின்றது. அவரது நோக்கில் ஒரு மொழியைப் பேசுகின்ற ஒரேவிதமான வரலாற்றுப் பாரம்பரியங்களைக் கொண்ட வேறுபட்ட ஒரு கலாசார சமூகமாகத் தம்மைக் கருதிக் கொள்கின்ற ஒரு மக்கள் கூட்டத்தினை குறிப்பதாக அமைகின்றது. தேசிய இனம் என்பது கலாசாரத்தினதும் நாகரிகத்தினதும் ஒரு தோற்றமே எனக் கூறப்படுகின்றது. தேசியவாதயுகமொன்றின் ஆரம்பம் என்பது ஒரு மனிதன் தனது தேசத்தின் மீதும் தேசிய இனத்தின் மீதும் கொண்டுள்ள உணர்வு பூர்வமான உயர்ந்த விசுவாசத்துடன் அமைகின்ற ஒன்றாகும்.

## தேசியவாதத்தை நிர்ணயிக்கும் காரணிகள்:-

தேசியவாதம் என்பது ஒரு காரணத்தினால் அல்லது ஒரு காலத்தில் ஏற்பட்ட ஒன்றோ அல்லது நிர்ணயிக்கப்பட்ட ஒன்றோ அல்ல வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு காரணிகளால் நிர்ணயிக்கப்பட்ட ஒன்றாகும். ஒரு காலத்தில் தேசியவாதத்தை நிர்ணயித்ததே இன்னொரு காலத்தில் தேசியவாதத்தை நிர்ணயிப்பதில் வலுக்குறைந்ததாக அல்லது வலுக்கூடியதாக அல்லது தொடர்பற்றதாகக் கூட இருக்கலாம். ஏனெனில் இது ஒரு மூலத்தில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றியதல்ல. பல அடிப்படை மூலங்களைக் (Basic Elemento) கொண்டதாகும். பொதுமொழி, பொது இனம், வன்மையான இன உணர்வு, மதம், மரபுகள், வழக்காறுகள், இவற்றின் வரலாற்றுச் சாதனைகள், கலைகள், கலைகளின் வேலைப்பாடுகள் (Work of Arts) மக்களின் கருத்துநிலை, கலாசாரப் பாரம்பரியங்கள், அரசியல் போக்கு, அரசியல் முதிர்ச்சி போன்ற பல்வேறு மூலங்களில் வேர்விட்டு முளைத்த ஒன்றே தேசியவாதம் ஆகும். எனவே தேசியவாதத்தினை நிர்ணயிக்கும் பல்வேறு அம்சங்களுள் முக்கியத்துவம் பெற்றவையாக, மதம், இனம், வரலாறு, புவியியல், பொருளாதாரம், யுத்தங்கள் போன்றவை அமைகின்றன. இவை தேசியவாதத்தின் தோற்றத்துக்குத் துணையாக நிற்கும் கூறுகள் ஆகும். ஆனால் இவை கூட இன்று விமர்சனத்திற்குள்ளாகின்றன. திட்டவட்டமாக வரையறுக்கப் புகுகையில் பல இடர்பாடுகள் தோன்றுகின்றன. Hayes இன் கருத்துப்படி தேசியவாதம் தோன்ற ஒரு இனம், இனம்சார்ந்த மக்கள் நிலை அவசியமாகின்றது. சிங்கப்பூரியன், இந்தியன் என்ற தேசிய உணர்வு ஒரு இனத்தைச் சார்ந்து நிற்கின்றதா என ஆராயின் சர்ச்சைகள் தோன்றுகின்றன. ஆனால் இந்தியவில் இனரீதியான மோதல்கள் ஏன் ஏற்படுகின்றன? இனம்சார்ந்த உணர்வினால் தான் எனக் கொள்ளப்படுகிறது. திராவிட இனம், திராவிட நாடு என ஒரு காலத்தில் குமுறல்கள் தோன்றின. ஆனால் அது பிற்காலத்தில் மழுங்கியது. எனவே இனம் சார்ந்த நிலை என்பது சர்ச்சைக்குரியதொன்றே. அமெரிக்காவில் வெள்ளை கறுப்பு இன மக்கள் அமெரிக்கன் ஆகின்றனர். ஆயினும் இவை உள்ளார்ந்த அர்த்தத்தில் சரியாக உள்ளதா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

பொதுமொழி என்பதை ஆராய்கையில் பொதுமொழி நவீன தேசியவாதக் கருப்பொருளாக அமைந்துள்ளது. ஆனாலும் வேறுபட்ட மொழிகளைக் கொண்ட நாடுகளிலும் பலமான தேசியவாதம் உருவாகியுள்ளது. உதாரணமாக சுவிற்சர்லாந்து இதற்கு ஆதாரமாகின்றது. பின்லாந்து, நெதர்லாந்து ஆகியவற்றிலும் இந்நிலையுண்டு, ஆனால் அவற்றின் வரலாற்றுப் போக்கில் பல பிரச்சினைகள் இருந்துள்ளன என்பதும் மறுக்க முடியாததாகவுள்ளது. பிலிப்பைன்ஸ், நைஜீரியா போன்ற நாடுகளில் வேறுபட்ட மொழிகளைப் பேசுபவர்கள் காணப்படுகின்றனர். வேறுபட்ட மொழிகளைப் பேசுபவர்களிடையேயும் பலமான ஒரு தேசியவாதம் உருப்பெறலாம் எனச் சிலர் வாதிடுவர். ஆனால் கெயின் கூறியது போன்று பொதுமொழி தேசியவாதத்தை உருவாக்கலாம் என்பதையும் நாம் காணமுடியும். தேசியவாதத்தை நிர்ணயிக்கும் காரணிகளுள் மதம் முக்கியம் பெறுகின்றது. ஜேர்மனியில் லூதரின் சேர்ச், இங்கிலாந்தில் அங்கிலிகன் சேர்ச் போன்றவை தேசியவாத தோற்றந்திற்குத் காரணமாகின்றன. ஆனாலும் கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம் போன்றவை இன்று ஒரு சர்வதேசியவாதப் பின்னணிக்கு உள்ளனவேயொழிய தேசியவாதத்தினுள் கட்டுண்டு மடங்கிவிடவில்லை எனவும் கூறுவர். ஆனால் சில நாடுகளில் மதம் தேசியவாதத்தை நிர்ணயிக்கும் ஒரு மூலக்கூறாக உள்ளது என்பது உண்மையாகும். போர்கள் தேசியவாதத்துக்கு வழிவிடுகின்றன. உலகில் பல யுத்தங்கள் சுய நிர்ணயத்துக்கான போராட்டங்களாக உருவெடுத்தன என்பதை வரலாறு கோடிட்டுக் காட்டுகின்றது. யுத்த காலப் பிரச்சாரம் தேசியவாதத்தை வளர்க்கும் ஒரு பிரதான காரணியாக செயற்பட்டு வருகின்றது.

## தேசியவாத எழுச்சி

கிரேக்க காலத்தில் இருந்தே தேசியவாத உணர்வுகள் உதித்தெழுந்தன. நகர அரசுகளை, மையமாகக் கொண்டு இந்த உணர்வலைகள் இருந்தன. ரோமானிய

ஆதிக்கம் இதனை மழுங்கடிக்கும் நிலையை பிற்காலத்தில் உருவாக்கியது. உலக அரசு என்ற எண்ணத்தை அது தோற்றுவித்தது. கிறிஸ்தவம் போப்பின் கீழ் உலக ஆதிக்கத்தை வலியுறுத்தியது. உதாரணமாக இங்கிலாந்தில் மத்திய காலத்தில் வாழ்ந்த குடியானவன் தான் இங்கிலாந்துக்குரியவன் என்ற சிந்தனையைக் கொள்ளாமல் கத்தோலிக்கத்துக்குரியவன் என்ற சிந்தனையைக் கொண்டிருந்தான் என பொருளாதார வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. இதனால் தேசிய பொருளாதாரம் என்பதில் அவன் அக்கறையற்று இருந்தான் எனவும் கூறுகின்றனர். மத்தியகாலத்தில் தேசியவாத எழுச்சியில் ஒரு பின்னடைவு தோன்றுகின்றது. மத்திய காலத்தின் இறுதிப்பருவத்தில் தேசியவாத சிந்தனை உருப்பெறுகின்றது. போப்புக்கும் முடியாட்சிகளுக்குமிடையே முரண்பாடுகள் தோன்றுகின்றன. சர்வதேசியத்துக்கு எதிரான கருத்துக்கள் மக்கள் மத்தியில் பரவின. தேசிய அரசுகள் எழுச்சியடைந்தன. ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் தேசம் என்ற உணர்வு பரிணமிக்கின்றது. தேசிய இனம், தேசிய மொழி, தேசியப் பற்று என்பன முதன்மை பெறுகின்றன. 16 ஆம், 17 ஆம் நூற்றாண்டுகளில் மேலும் தாக்கங்கள் தோன்றுகின்றன. தேசிய இனங்கள் அதிகரித்தன. அச்சு இயந்திரக் கண்டுபிடிப்பு, மொழி வளர்ச்சியை உருவாக்குகின்றன. அரசியல் சிந்தனையாளர் தேசியம் பற்றி முழக்கமிடுகின்றனர். புவியியல் ரீதியாக நிர்ணயிக்கப்பட்டதும் சுயமொழி கலாசாரம் ஆகியவற்றினால் இணைக்கப்பட்டதுமான பல புதிய தேசிய அரசுகள் தோன்றின. ஒழுங்கமைக்கப்பட்ட மக்கள் குழுவை அடிப்படையாகக் கொண்டு இவை வளர்ச்சியடையத் தொடங்கின. மக்கியாவல்லியின் கருத்து முக்கியத்துவம் பெற்றன. முடியாட்சி தேசிய ஒற்றுமையையும், இறைமையையும் கொண்ட நாடுகளை உருவாக்குவதிலும் அதன்வழி தேசிய வாதத்தினை வளர்ப்பதாகவும் அமைந்தது.

நவீன காலத்தில் ஐரோப்பாவில் பொருளாதார அல்லது வர்த்தக விரிவினால் தேசிய அரசுகள் எழுச்சியடைந்தன. கடற்பிரயாணங்கள் வளர்ந்து, புதிய நாடுகள் கண்டுபிடிக்கப்பட்டு சுரண்டல் நிலையைப் பின்னணியாகக் கொண்டு ஐரோப்பிய அரசுகள் எழுந்தன. புதிய வர்த்தக சந்தைகள் தோன்றின. வணிகவாதம் உருவானது தேசிய வணிகவாதம் யுத்தங்களை உருவாக்கின, மன்னர்களின் மட்டற்ற அதிகாரத்துக்கொதிராக மக்கள் கிளர்ந்தெழும் நிலை தோன்றியது. 1789 தில் பிரெஞ்சுப்புரட்சி இதனையே தொட்டுக்காட்டுகின்றது. முழு நிறைவான அதிகாரத்துக்கு எதிராகப் போராடி வெற்றியடையும் நிலை மக்களுக்குருவானது. தேசியவாதத்தின் வளர்ச்சிக் கட்டமாக பிரான்சிய புரட்சி அமைகின்றது. வோல்ரேயரின் கருத்துக்கள் தேசியவாத எழுச்சிக்கு உதவின. ரூஸோ இந்த வகையில் மேலும் புதுமெருகூட்டினார். அதேவேளையில் ஐரோப்பிய தேசியவாதத்தை கைத்தொழில் புரட்சியும் வலியுறுத்திச் சென்றது. அமெரிக்க சுதந்திரப் போரும் தேசியவாதத்தின் இன்னொரு விளக்கமாக, உலகுக்கு வெளிப்படுத்தப்பட்டது. இலக்கியங்கள், கலைகள், தேசியவாதத்தினை மையமாகக் கொண்டே வளர்ச்சியடைந்தன. தேசியவாதத்தினை அவை முன்னெடுத்துச் சென்றன. பல அளப்பரிய சேவைகளை இவை ஆற்றின. தேசிய பொருளாதாரம், தேசியக் கொடி, தேசியகீதம், தேசிய படை போன்ற உணர்வுகள் வளர்ச்சியடைந்தன. 20ஆம் நூற்றாண்டில் இவை புதிய பரிணாமம் பெற்றன. முதலாம், இரண்டாம் உலக யுத்தங்கள் காரணமாக மேலும் மாற்றங்கள் ஏற்பட்டன. இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்பு புதிய அரசுகள் எழுச்சியடைந்தன. இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின் வளர்ச்சியடைந்த தேசிய வாதம் இன அடிப்படையில் மேலும் புதுவேகத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றது. ஐரோப்பிய தேசிய வாதத்தை சாராமல் புதியதோர் பாதை தேசியவாதம் ஏற்படுத்தப்பட்டது. அது ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளின் தேசியவாதமாக உருப்பெற்றது. இன்று புதிய அரசுகளுக்குள் உபதேசியவாதம் உலகின் பல இடங்களிலும் வளர்ச்சியடைந்து சர்வதேசங்களையுமே சார்த்து நிற்கின்றது. கிரேக்கத்திலே தோன்றி பல மாறுதல்களையும் வழக்கங்களையும் தேசியவாதம் இன்றுவரை பெற்று வந்துள்ளது. எதிர்காலத்தில் தேசிய வாதத்தின் பரிணாமம் வேறும் புதிய பாதைகளைச் செப்பனிட முயற்சிக்குமா? என்ற வகையில் அதன் வளர்ச்சி வரலாற்று ரீதியில் அமைந்துள்ளது. ●


உசாத்துணை நூல்கள்:-

1. அரசியற் சிந்தனைகள். சீனிவாசன் - சந்திரபோஸ் (புதிய பதிப்பு)
2. ஐரோப்பிய வரலாற்றுச் சுருக்கம், A. J. கிராஸ்ற்
3. சமூக மஞ்சரி 1960.


## WISDOM

Knowledge Comes, but wisdom lingers.

— Tennyson —

## POSTERITY

People will not look forward to posterity,
who never look backward to ther ancestors

— Edmund Burke —




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சம் நிறைந்த நன்றிகள்

★ சமுக ஒலியை மெருகூட்ட வாழ்த்துச் செய்தி ஆசிச் செய்தி, பாராட்டுச் செய்தி தந்துதவிய துணைவேந்தர், காலஞ்சென்ற முன்னை நாள் துணைவேந்தர், கலைப்பீடாதிபதி, காப்பாளர், பெரும் பொருளாளர், ஆகியோருக்கும்.

★ ஆக்கங்களை தந்து மலரை சிறப்பித்த விரிவுரையாளர்கள் மாணவர்களுக்கும்.

★ தேவையேற்படும் போதெல்லாம் ஆலோசனைகள், அறிவுரைகள் கூறிய காப்பாளர், பெரும் பொருளாளர், விரிவுரையாளர்களுக்கும்.

★ இவ் விதழை வெளிக் கொணர்வதற்கு வேண்டிய நிதியினைத் திரட்டுவதற்காக நடாத்தப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டிழுப்பில் ஆதரவு நல்கியோருக்கும்.

★ விளம்பரங்கள் தந்துதவிய விளம்பரதாரர்களுக்கும்

★ இம் மலரை அழகுற அச்சிட்டு வழங்கிய பாரதி பதிப்பகத்திற்கும்.

★ கேட்கும் போதெல்லாம் உதவிகள் புரிந்த சக மன்ற உறுப்பினர்களுக்கும்.

★ பல வழிகளிலும் உதவிகள் புரிந்த பொருளியல்துறை ஊழியர்களுக்கும்.

★ இம் மலரை உரிய காலத்தில் மலர விடுவதற்கு பல பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும்.

எமது மனம் நிறைந்த நன்றிகள்

— இதழாசிரியர்கள் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய புதிய பாடல்கள்,
(பக்திப்பாடல்கள் உட்பட)
கொம்பாண்ட் மூலம் பதிவு செய்து
கொடுக்கப்படுவதுடன்
உடனுக்குடன்
றெடி மெற்றாகவும் விற்கப்படும்
உடன் நாட வேண்டிய இடம்

**ஸ்கை றோஸ்**
**(Sky Rose)**

இல: 01, பஸ்நிலையம்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சமூக ஒளி இதழ் 4 க்கு
எமது வாழ்த்துக்கள்!

பாடசாலை உபகரணங்கள்
மற்றும் காரியாலயப் பொருட்கள்
மொத்த சில்லறை வியாபாரிகள்

**ஆசீர்வாதம்**
**புத்தகசாலை**

61, Grand Bazaar
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சமூக ஒளி இதழ் 4 ஐ வாழ்த்துகின்றோம்

சுப முகூர்த்தப் புடவைகள், சூட்டிங், சேட்டிங்குகளுக்கு

உடன் நாடவும்

**"யோகாமணி" ஆடையகம்**

32, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன் நாடுங்கள்

**Ratnam Pharmacy**
**&**
**Grocery**

388, Hospital Road, Jaffna.

சமூக ஒளி இதழ் 4 க்கான
எமது வாழ்த்துக்கள்
"தரமான பட்டு, பருத்தி
ஆடைகளுக்கு உடன் நாடுங்கள்"

**கணேசானந்தாஸ்**
**பட்டு மாளிகை**

15, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

பல்கலைக் கழக மாணவர்களின்
மனங்கவர் சைவ உணவகம்

**அபிராமி விலாஸ்**

இராமநாதன் வீதி,
(யாழ் பல்கலைக்கழகம் முன்பாக)
யாழ்ப்பாணம்.

**DISSERTATION**

பல்கலைக் கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள்
பல்கலைக் கழக நடைமுறை விதிகளுக்கு அமைய
அட்டைகள் அழகுற அச்சிட்டுக் கட்டி (பையின்ட்)
உரிய நேரத்தில் பெறுவதற்கு
யாழ் நகரில் அநுபவமும் ஆற்றலும் வாய்ந்த ஒரே இடம்

**பாரதி பதிப்பகம்**

430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org